
புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2047 | பிப்ரவரி 04, 2016 | புரட்சி 15 | முழக்கம் 3 | விலை: ரூ.3.00



# ரோகித் வெமுலா மரணத்துக்கு நீதி கேட்டு கழகம் கண்டன ஆர்ப்பாட்டங்கள்

*அய்தராபாத் பல்கலைக்கழக தலித் மாணவர் 'ரோகித் வெமுலா' – பல்கலையின் பார்ப்பன ஜாதிப் புறக்கணிப்புக்கு உள்ளாகி தற்கொலை செய்து கொண்டார். இது நிறுவனம் நடத்திய படுகொலை. இந்த சாவுக்குக் காரணமான மத்திய அமைச்சர்கள், பல்கலைக்கழக துணைவேந்தர் ஆகியோரை வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி கழக சார்பில் பிப்ரவரி முதல் தேதி கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. இதேபோல் தமிழகத்தில் கோரத்தாண்டவ மாடும் தீண்டாமைக் குற்றங்களைக் கண்டித்தும், இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இது குறித்த செய்தித் தொகுப்பு:*

**சென்னை :** சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் வள்ளுவர் கோட்டம் அருகே பிற்பகல் 4 மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் தொடங்கி 6.30 வரை நீடித்தது.





கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், எஸ்.டி.பி.அய். தலைவர் தேஹலான் பாகவி, வாலாஜா வல்லவன் (மா.பெ.பொ.க.), குமரன் (த.பெ.தி.க.), வே.மதிமாறன் (எழுத்தாளர்), செந்தில் (இளந் தமிழகம்), கவின்மலர் (ஊடகவியலாளர்), வழக்கறிஞர்கள் துரை.அருண், திருமூர்த்தி, கிரேசி (தமிழ்நாடு தலித் பெண்கள் விடுதலை இயக்கம்) ஆகியோர் கண்டன உரையாற்றினர். மாவட்ட செயலாளர் உமாபதி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். மாவட்ட தலைவர் வேழவேந்தன் நன்றி கூறினார். தமிழ்நாடு தலித் பெண்கள் விடுதலை இயக்கத்தைச் சார்ந்த பெண்கள், ஜாதி ஒழிப்புப் பாடல்களைப் பாடினர்.

**மேட்டூரில் :** சேலம் (மேற்கு) மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் 01-02-2016 மாலை 4.00 மணிக்கு மேட்டூர் அணை, தந்தைபெரியார் பேருந்து




நிலையம் முன்பு நடைபெற்றது. சேலம் (மேற்கு) மாவட்டச் செயலாளர் சி. கோவிந்தராசு தலைமை தாங்கினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, சார்ப் அ. முரளி (நிறுவனத் தலைவர், மண்ணின் மைந்தர்கள்), மா. சிவக்குமார் (விடுதலை சிறுத்தைகள் கட்சி), சிவராமன் (ஆதித்தமிழர் பேரவை), தேவி (அனைத்திந்திய மாதர் சங்கம்), ச. நாகராஜ் (தமிழ்நாடு மாணவர் கழகம்) ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

**திருப்பூரில் :** மாலை 5 மணியளவில் திருப்பூர் பெரியார் சிலை அருகில் கழக சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கழகப் பொருளாளர் துரைசாமி தலைமை தாங்கினார். மாவட்ட




செயலாளர் முகில்ராசு முன்னிலை வகித்தார். மாநகர செயலாளர் நீதிராசன், மாநில அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் சிவகாமி, அகிலன், கவிஞர் கனல்மதி, தனபால், பரிமளராசன் உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர். பிரசாந்த் நன்றி கூறினார்.

**கிருஷ்ணகிரியில் :** கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் மாலை 5.00 மணிக்கு தொடங்கியது. மாவட்ட அமைப்பாளர் இராஜேஷ்




ஜெயராமன் தலைமையில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் நீலகிரி குமார், மாவட்ட துணை செயலாளர் வாஞ்சிநாதன், மாவட்ட துணை தலைவர் நீலகிரி கிருஷ்ணன், முன்னாள் மாவட்ட அமைப்பாளர் பழனி, நிர்வாகிகள் கிரி, எல்லப்பன் கண்டன உரையாற்றினர். பிரேம்குமார் நன்றி கூறினார்.

**பள்ளிபாளையம் :** 1.2.2016 மாலை 5 மணிக்கு நாமக்கல் மாவட்ட கழக சார்பில் பள்ளிபாளையத்தில் ஆர்ப்பாட்டம் நடந்தது. முத்துபாண்டி (மாவட்ட பொருளாளர் தி.வி.க.) தலைமை தாங்கினார். மா. வைரவேல் (மாவட்ட அமைப்பாளர்) முன்னிலை வகித்தார்.



மு. சரவணன் (மாவட்ட செயலாளர்), மு. சாமிநாதன் (மாவட்டத் தலைவர்), இரா. செல்வகுமார் (ஆதித் தமிழர் பேரவை), ஆ. ஆதவன் (தமிழர் படை), செந்தமிழன் (தமிழ்புலிகள்), பெரியண்ணன் (மல்லை ஒன்றிய கழகத் தலைவர்), இரா. பிரகாசு (கழக இளைஞரணி செயலாளர்), மாணிக்கம் (புரட்சிகர இளைஞர் முன்னணி), சி. சிவகுமார் (தி.வி.க.), விடுதலை சிறுத்தைகள் கட்சிப் பொறுப்பாளர்கள் வே.காமராஜ், செம்மணி, சுடர்வளவன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். கழக நகர செயலாளர் மு.சரவணன் நன்றி கூறினார். 50க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

(3ஆம் பக்கம்)

# மரபணு ஆராய்ச்சியில் வெளிவந்த உண்மை

# குப்தர் ஆட்சிக் காலத்திலிருந்து ஜாதி கலப்பு திருமணங்கள் தடைபடுத்தப்பட்டன

சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்னதாக ஜாதிக் கலப்புத் தடுக்கப்பட்டு உயர்ஜாதியினரின் ஆதிக்கத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது என மரபணு தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வரும் தேசிய பயோ மெடிக்கல் ஜெனோமிக்ஸ் நிறுவனம் நடத்திய ஆய்வு கூறுகிறது.

இனக் குழுக்களாக இருந்த சமூகங்கள் எப்போது சாதி அடையாளம் உள்ளவையாக மாறின?

சுமார் 70 தலைமுறைகளுக்கு முன்னதாக அதாவது 1500 ஆண்டுகளுக்கு முன்னதாக சாதிக் கலப்பு தடுக்கப்பட்டு ஒவ்வொரு ஜாதிக்குள்ளேயே திருமணம் மேற்கொள்ளப்பட்டு (அகமண முறை) ஜாதி அமைப்பு ஒருங்கிணைக்கப்பட்டு வலுப்பெற்றதாக மாறியது என இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாய்வுக்காக 20 இனங்களைச் சேர்ந்த பல்வேறு ஜாதிகளைச் சேர்ந்த 367 தனி நபர்களின் மரபணுக்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆய்வுக்கான மாதிரிகள் ஜாதிவாரியாகவும் மொழிவாரியாகவும் நிலவியல் வேறுபாடுகளை கவனத்தில் கொண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டன.

குஜராத், மணிப்பூர், மேற்கு வங்க மாநிலங்களைச் சேர்ந்த பார்ப்பனர்களும் மராத்தியர்களும் திராவிடச் சமூகங்களைச் சேர்ந்த பள்ளர், இருளர் உள்ளிட்ட சமூகங்களும், மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த பழங்குடியினர்களான ஹோ இனத்தினர், சாந்தால் மற்றும் பிர்ஹோர் பழங்குடியினரும், அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளிலிருந்தும் ஜாரவா மற்றும் ஓங்கே பழங்குடியினரும் ஆய்வுக்கான மாதிரிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டனர்.

ஆய்வை நிறுவனத்தின் இயக்குநர் பி.மஜூம்தார் அனலாபா மற்றும் நீத்தா சர்க்கார் ராய் ஆகியோர் மேற்கொண்டனர்.

உயர்ஜாதி சமூகங்களுக்கிடையே ஜாதிக்குள்ளேயே மணம் முடிப்பது சுமார் 1575 ஆண்டுகளுக்கு முன்னர்தான் தொடங்கியது. குப்தர் காலத்தில் வெவ்வேறு ஜாதிகளுக்கு இடையிலான திருமணங்களுக்கு தடைவிதிக்கப்பட்டன என்று ஆய்வு கூறுகிறது. இது, குப்தர் கால தர்மசாஸ்திரங்களில் பதிவாகியுள்ளது. இவை மரபணுக்களில் பதிவாகியிருக்கிறது.

முன்னோர்களின் மரபணுக்களை ஆய்வு செய்தபோது ஜாதிக் கலப்பு, குறிப்பாக மேற்கு வங்க பார்ப்பனர்களிடம் எப்போது நிறுத்தப்பட்டது என்பது ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 8ஆவது நூற்றாண்டு வரை வடகிழக்கு மாநிலங்களிலுள்ள ஜாதிகளிடையே கலப்பு மணங்கள் நிகழ்ந்து வந்தன. பால வம்சத்தின் ஆட்சி தொடங்கியவுடன் நிறுத்தப்பட்டன. மராத்தி பகுதியில் சாளுக்கிய மற்றும் ராஷ்டிர கூடர்களின் ஆட்சியின் போது போர்வீரர்களாக சத்திரியர்களை விவசாயப் பிரிவினரிலிருந்து நியமிப்பது நிறுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து பழங்குடியினர் மற்றும் திராவிட சமூகங்களுடன் கலப்பு மணங்கள் மேற்கொள்ளப்படுவதும் தடுக்கப்பட்டது. இதன் விளைவாக வெவ்வேறு பழங்குடியினர் ஒன்று கலப்பதும் இக்கால கட்டத்துடன் முடிவுக்கு வந்துவிட்டது.

மரபணுவை வைத்து ஜாதியமைப்பைக் கண்டறியும் இந்த முக்கிய ஆய்வை அமெரிக்காவின் அறிவியல் ஆய்வு இதழ் 'PNAS' இப்போது வெளியிட்டுள்ளது.

ஜாதிக் கலப்பு உறவுகள் நிகழ்ந்துள்ள முறைகளைக் குறித்து ஆய்வுகளில் கண்டறியப்பட்ட தகவல்கள் - "மனு சாஸ்திரத்தின்" விதிகளை உறுதிப்படுத்துவதாகவே இருக்கிறது. தமக்குக் கீழாக உள்ள சத்திரிய, வைசிய, சூத்திரப் பிரிவினரைச் சார்ந்த பெண்களிடம் உறவு கொள்ள பார்ப்பனர்களை மனு சாஸ்திரம் அனுமதிக்கிறது. ஒரே நிபந்தனை முதலில் உறவு கொள்ளும் பெண், பார்ப்பனப் பெண்ணாக இருக்க வேண்டும். இதே போன்ற 'அனுமதி'யை சத்திரிய, வைசிய, சூத்திரப் பிரிவினருக்கும் முதல் பெண் உறவு மட்டும் அதே வர்ணப் பிரிவினராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையோடு அனுமதிக்கப்படுகிறது. ஆனால், 'சூத்திரனுக்கு' மட்டும் இந்த உரிமை மறுக்கப்படுகிறது.

மனு சாஸ்திரம் கூறுகிறது: "சூத்திரன் மனைவி சூத்திரச்சியாகவே இருத்தல் வேண்டும். வைசியனுக்கு வைசிய, சூத்திரப் பெண் (பிராமணப் பெண் கூடாது). சத்திரியன், வைசிய, சூத்திரப் பெண்களை மட்டுமே உறவு கொள்ளலாம் (பிராமணப் பெண்ணிடம் உறவுகொள்ள உரிமை இல்லை). சூத்திர ஆண்கள், சூத்திரப் பெண்களிடம் மட்டுமே உறவு கொள்ள முடியும் (பிராமண, வைசிய, சத்திரிய பெண்களிடம் உறவு கொள்ள முடியாது). ஆனால், 'பிராமண ஆண்கள், 'பிராமண'ப் பெண்களை மட்டுமின்றி அனைத்து வர்ணப் பிரிவுகளிடமும் உறவு கொள்ளலாம் என்கிறது மனு சாஸ்திரம். (அத்யாயம் 3 - சுலோகம் 13)

'மனு'வின் இந்த சமூக 'விதி'களை ஆழமாக ஆய்வுக்குட்படுத்திய அம்பேத்கர், தெளிவான விளக்கத்தை முன் வைக்கிறார். சமூகத்தில் அடிமைத் தனத்தக்கான விதிகளை உருவாக்கிய மனு அந்த விதிகளை அதன் இயல்பான போக்கில் செயல்பட அனுமதிக்கவில்லை என்று கூறும் அம்பேத்கர், 'அதன் போக்கில் - இந்த அடிமை விதிகளை செயல்பட அனுமதித்திருந்தால் - ஒரு கட்டத்தில் அடிமைகளுக்கிடையிலான ஏற்றத் தாழ்வுகளை சமப்படுத் தும் சக்தியாகக்கூட இது மாற வாய்ப்புகள் இருந்திருக்கலாம். ஒரு 'பிராமணன்' தீண்டப்படாதவனின் அடிமையாகவோ, அல்லது ஒரு தீண்டப்படாதவன், 'பிராமணனின்' எஜமானனாகவோகூட மாறியிருக்கக்கூடும். இப்படி ஒரு நிலை வந்துவிடக் கூடாது என்பதால்தான் "வர்ண சமூக அமைப்பில் அடிமைத்தனம் மேலிருந்து கீழ் நோக்கி நகரலாமே தவிர கீழிருந்து மேல் நோக்கி நகரவே முடியாது" என்பதை கட்டளையாக்கிவிட்டார்கள் என்கிறார் அம்பேத்கர்.

"ஒரு 'பிராமணன்' தனக்குக் கீழே உள்ள எந்த வகுப்பையும் அடிமையாக்கிக் கொள்ளலாம். ஆனால், சூத்திர, வைசிய வகுப்பினர் தங்களுக்கு மேலான பிரிவினரை அடிமையாக்க முடியாது என்று அம்பேத்கர் விளக்குகிறார்.

வர்ணாஸ்ரம சமூக அமைப்பின் வழியாக பின்பற்றப்பட்டு வந்த அடிமை விதிகள், குப்தர் காலத்தில் அரசு அதிகாரத்துடன் கடுமையாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன. சூத்திர ஜாதி இழிவுகளோடு பெண்ணடிமையும் கைகோர்த்துக் கொண்டு சமுதாயத்தில் காலம் காலமாக சீரழிவை நிலைநாட்டி வந்திருக்கின்றன. இதற்கான மூலம் பார்ப்பனர்களிடமிருந்தும் அவர்கள் உருவாக்கிய வர்ணாஸ்ரம அமைப்பிலிருந்தும் தொடங்கி தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த சமூக வரலாற்று உண்மைகளை இப்போது மரபணு வழியாக நிகழ்த்தப்பட்ட இந்த அறிவியல் ஆய்வு உறுதி செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# "நான் பிறந்த ஜாதிதான் எனக்கு மோசமான விபத்து"

'ஏகலைவன்' என்ற ஆதிவாசிக்கு 'துரோணாச்சாரி' என்ற பார்ப்பன குரு வில்வித்தை கற்றுத் தர மறுத்தான். ஏகலைவனோ, துரோணாச்சாரி உருவத்தை செய்து, அதையே குருவாகக் கருதி வித்தையைக் கற்றுத் தேறினான். உண்மை அறிந்த துரோணாச்சாரி, 'கீழ் ஜாதிப் பயலே; வில்வித்தை கற்கும் உரிமை உன் குலத்துக்குக் கிடையாதுடா! குருதட்சணையாக உன் கட்டை விரலை வெட்டித் தா' என்று கேட்டான். ஏன் தெரியுமா? கட்டை விரலை வெட்டி விட்டால் வில்லிலிருந்து அம்புகளை விடவே முடியாது அல்லவா? இது வரலாறு அல்ல; ஆனால் புராணக் கதைகளின் வழியாக பார்ப்பனர்கள் சமூகத்துக்கு உணர்த்திய பாடம்!

'ஏகலைவன்'கள் கதை முடிந்துவிட்டதா? இல்லை. இல்லவே இல்லை. பார்ப்பன துரோணாச்சாரிகளின் வாரிசுகள் இன்று அய்.அய்.டி., அய்.எம்.எஸ்., அகில இந்திய மருத்துவ விஞ்ஞான கழகம், அய்தராபாத் பல்கலைக் கழகம் போன்ற உயர்கல்வி நிறுவனங்களை இன்றும் ஆட்டிப் படைக்கிறார்கள்.

இந்த கல்வி நிறுவனங்களுக்குள் நுழைவதே பெரும்பாடு. எத்தனையோ சமூகத் தடைகளைத் தாண்டி, படிக்க வரும் தலித் மற்றும் விளிம்பு நிலை சமூக மாணவர்கள் அவமதிக்கப்படுகிறார்கள்; அலைக்கழிக்கப் படுகிறார்கள்; மரணத்தை நோக்கி துரத்தப்படுகிறார்கள்.

- 2007-லிருந்து 2013 வரை அய்தராபாத்தில் உள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களில் தற்கொலை செய்து கொண்ட தலித் மாணவர்கள் 11 பேர்.
- டெல்லி மற்றும் வட மாநிலங்களில் 2007லிருந்து 2011 வரை மத்திய அரசு கட்டுப்பாட்டில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் தற்கொலை செய்து கொண்ட தலித் மாணவர்கள் 14 பேர்.
- இப்போது அய்தராபாத் பல்கலைக்கழகத்தில் தனது கல்வி திறமையால் போட்டியிட்டு நுழைந்த ரோகித் வெமுலா என்ற தலித் மாணவர், தனது உயிரை மாய்த்துக் கொண்டு விட்டார்! அவர் செய்த 'குற்றம்'........?

அம்பேத்கர் மாணவர் கழகத்தில் இணைந்து,



மாணவர்களிடம் மதவெறிக்கு எதிராக மனித உரிமை மனித சமத்துவத்துக்கு ஆதரவான கருத்துகளைப் பரப்பினார். ஆனால், மதவெறியை வளாகத்துக்குள் பரப்பி வந்த ஆர்.எஸ்.எஸ்.சை சார்ந்த உயர் ஜாதி மாணவர்கள் (வித்யார்த்தி பரிஷத்) இதை அனுமதிக்க மறுத்தனர். மத்திய பா.ஜ.க. அமைச்சர்கள் இரண்டு பேர் தலையிட்டு, துணைவேந்தர் வழியாக 5 தலித் மாணவர்களின் படிப்பு உதவித் தொகையை நிறுத்தினர். 6 மாத காலமாக இந்த மாணவர்கள் விடுதியை விட்டு வீதிக்கு தள்ளப்பட்டனர். இவர்கள் நன்றாக படிக்கவில்லை என்பதற்காக இந்த தண்டனை இல்லை. மாறாக சமூகத்தைப் பற்றி சிந்தித்தார்கள் என்பதற்காகவே தண்டனை!

"நான் பிறந்த ஜாதி தான் எனக்கு விபத்து" என்று மரண சாசனமாக ஒரு கடிதத்தை எழுதி வைத்து விடைபெற்றுக் கொண்டார் ரோகித்.

உயர்கல்வியில் மட்டுமா, இந்த நிலை? சமூகத்தில், பொது விடங்களில், தொடக்கப் பள்ளிகளில் என்று ஒவ்வொரு நிலையிலும் தான்!

நாகை மாவட்டம் மயிலாடுதுறை அருகிலுள்ள வழுவூரில் இறந்துபோன தலித் முதியவரின் சடலத்தை சுடுகாட்டுக்கு தங்கள் வீதியின் வழியாக தூக்கிச் செல்லக் கூடாது என்று ஜாதிவெறியர்கள் தடுக்கிறார்கள். உயர்நீதிமன்றம் ஆணையிட்டாலும் அதை ஏற்க முடியாது என்று சவால் விடுகிறார்கள். தமிழக காவல்துறை, இந்த தீண்டாமை குற்றத்துக்கு வெளிப்படையாக துணை போகிறது.

கோயிலில் வழிபாடு நடத்த தடை; தேனீர்க் கடை; முடிவெட்டும் நிலையம்; பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பு என்று தமிழக கிராமங்களில் 'தீண்டாமை'யும் ஜாதி வெறியும் திணிக்கப்படுகிறது. சத்துணவு மய்யங்களில் தலித் பெண் சமைத்தால் அந்த உணவை சாப்பிடக் கூடாது என்று ஜாதி வெறி பெற்றோர்கள் குழந்தைகளை தடுக்கிறார்கள். பிஞ்சு உள்ளங்களிலே தீண்டாமை நஞ்சு ஏற்றப்படுகிறது. ஆதி திராவிடர்களுக்கான அரசு பள்ளிகளில் மட்டும்தான் தலித் மாணவர்கள் படிக்க வேண்டும் என்ற சமூகத் தடை பல கிராமங்களில் இன்றும் அமுலாகி வருகிறது. ஊரும் சேரியும் பிரிந்து கிடக்கிறது.

ஜாதி மறுப்புத் திருமணம் செய்தால் "கவுரவ"க் கொலை!

இது சுதந்திர நாடு தானா?

அன்று புராண பார்ப்பன 'துரோணாச்சாரி', ஏகலைவன் விரலை சிதைத்தான்.

இன்று நவீன பார்ப்பனியம் திணிக்கும் ஜாதி வெறி, தலித் மாணவர்கள், தலித் மக்களின் வாழ்வுரிமையை சுயமரியாதையை சிதைக்கிறது.

**மத்திய, மாநில அரசுகளே!**

உயர்கல்வி நிறுவனங்களில் படிக்க வரும் தலித் மாணவர்கள் மீதான தீண்டாமை பாகுபாடுகளை வளாகப் புறக்கணிப்புகளை தடுத்து நிறுத்து; கல்வி வளாகங்களில் சமத்துவ சூழலை உருவாக்கு; வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை முறையாக அமுல்படுத்து!

**அரசியல் கட்சிகளே!**

வாக்கு வங்கி அரசியலுக்காக தீண்டாமையைத் திணிக்கும் ஜாதி வெறி சக்திகளுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ - ஆதரவுக் கரம் நீட்டாதீர்!

**தமிழர் இயக்கங்களே!**

தமிழர்களின் பண்பாட்டுப் பெருமைகளை சீரழிப்பதில் முதலிடத்தில் நிற்கும் பார்ப்பனிய ஜாதி-தீண்டாமைக்கு எதிராக போராட முன் வாருங்கள்!

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தவே இந்த ஆர்ப்பாட்டம்.

ஜாதி-தீண்டாமை எதிர்ப்பாளர்களையும் இயக்கங்களையும் பங்கேற்று, ரோகித் வெமுலா மரணத்துக்கு நீதி கேட்க உரிமையோடு அழைக்கிறோம்.

**– திராவிடர் விடுதலைக் கழகம்**

**(ஆர்ப்பாட்டத்துக்காக கழகம் வெளியிட்ட துண்டறிக்கை)**

# வரலாற்றுப் புரட்டர்களுக்கு மறுப்பு (10)

# நடுவண் அரசின் எதிர்ப்புக்கு அஞ்சிய ம.பொ.சி.

பெரியாருக்கு எதிராக அவ்வப்போது சில வரலாற்றுப் புரட்டர்கள் புறப்படுவதும், பதிலடி கிடைத்தவுடன் பதுங்குவதும் வாடிக்கையாகி விட்டது. 'குணா'வின் வாரிசாக கிளம்பியுள்ள ஒருவர் அண்மையில் வெளியிட்டுள்ள நூலுக்கு இது ஒரு மறுப்பு.

**வாலாசா வல்லவன்**

"பொது வாழ்வில் எவ்வளவோ இன்னல்களுக்கிடையே நான் கடை பிடித்து வரும் ஒழுக்கத்தை! மக்கள் ஐயுறும் வகையிலும் என் மீது பழி சுமத்திப் பிரச்சாரம் செய்தனர். அந்தப் பொய் குற்றச்சாட்டுகள் "தினத்தந்தியில்" முழுப்பக்க அளவில் பெரிய தலைப்புகளில் அவ்வப்போது பிரசுரிக்கப்பட்டு வந்தன. என்ன காரணத்தினாலோ திரு. காமராசருக்கு ஆதரவாக இருந்தது அந்நாளில் சி.பா.ஆதித்தனாரின் நேர்பார்வையில் நடத்தப்பட்டு வந்த 'தினத்தந்தி' அப்போதும் நானும் திரு.சி.பா.ஆதித்தனாரும் நண்பர்களாகத் தான் இருந்தோம். ஆயினும் அவருக்கு என்னிடமிருந்த நட்பைவிட திரு. காமராசரிடமிருந்த "பக்தி (?)" யே விஞ்சியிருந்தது.

"வடக்கெல்லை - தெற்கெல்லைப் பிரச்சனைகள் பற்றி நான் பொதுக் கூட்டத்திலோ, நிருபர்களுக்கும், பேட்டிகளிலோ மத்திய அரசைக் குறைக் கூறி ஏதேனும் சொல்லி விட்டால் போதும்; அவை "நேருவுக்கு ம.பொ.சி எச்சரிக்கை", "இன்னும் 15 நாட்களில் போராட்டம்", "பிரதமருக்கு ம.பொ.சி இறுதி நோட்டீஸ்" என்றெல்லாம் தலைப்புகள் தந்து 'தினத்தந்தி'யில் பிரசுரிக்கப்படும்" என்றெல்லாம் 'தினத்தந்தி'யின் மீது ம.பொ.சி வசைப்பாடுகிறார். வடக்கெல்லை தெற்கெல்லைப் போராட்டத்தில் இவர் முழு மனதுடன் செயல்பட்டிருந்தால் இந்த செய்திகளுக்காக மகிழ்ச்சி அடைந்திருக்க வேண்டும். 'தினத்தந்தி' எதையும் திருத்தி போடவில்லை. இவர் கூறியதைத் தானே முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்தது. இதையெல்லாம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து நேருவுக்கு அனுப்பி விட்டார்களாம். அனுப்பினால் நல்லது தானே. தமிழ்நாட்டில் எல்லைப் போராட்டங்கள் நடக்கின்றன என்று நேரு தெரிந்து கொள்ளட்டுமே. ம.பொ.சி தன்னை காங்கிரசை விட்டு நீக்கி விடக் கூடாது என்பதற்காக எல்லார் மீதும் வசைப்பாடினார் என்பது தானே உண்மை.

மேலும் தமிழ்நாடு பிரிவினைக்கு எதிராக பல கட்டுரைகளை ம.பொ.சி. தொடர்ந்து தனது 'செங்கோல்' இதழில் எழுதி வந்துள்ளார். அதில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே தருகிறேன்.

**தமிழ்நாடு பிரிவினையைக் கண்டிக்கும் ம.பொ.சி.:**

தமிழகத்தை இந்தியாவிலிருந்து துண்டாட விரும்புகின்றன. ஒன்றிரண்டு கட்சிகள் - அறிஞர் ஒருவர் சொல்கிறார், "எனது தாயகம் அப்பருக்கு அடிமைப்பட்டதில்லை, மௌரியருக்கு அடிமைப் பட்டதில்லை....." என்று. ஆனால் அந்த அரசியல் அறிஞர் நாம் வாழ்வது அசோகர், மௌரியர் காலமல்ல, அணு ஹைட்ரஜன் குண்டு காலம் என்பதை மறந்து விடுகிறார். அக்பர் காலத்தில் இந்தியாவில் ஆயிரம் தனி நாடுகள் இருந்திருக்கலாம். இந்த அணுகுண்டு காலத்தில் வல்லரசுகளின் கெடு பிடிபோர் இந்தியாவின் வாயிற் கதவைத் தட்டுகின்ற நேரத்தில் நாடு துண்டாடப்படுவது நல்லதா?

தமிழகத்தின் மக்கள் தொகை 3 கோடிக்கு மேல் இல்லை. இந்த இலட்சணத்தில் தமிழகம் தனியாக பிரிந்தால், நமது இராணுவத்தில் எத்தனை இலட்சம் பேர் இருப்பார்கள்? அந்நிய நாடுகளிடமிருந்து பாதுகாப்புக்கு ஆயுதங்கள் பெறலாம் பண உதவியும் பெறலாம். இராணுவ வீரர்களையும் இரவல் வாங்குவதோ? வாங்கினால் அதன் பின் நாம் பெற்ற சுதந்திரம் நிலைக்குமா? ('செங்கோல்' 27.11.60)

"பிரிவினைக் கோரிக்கையை அது எந்த வடிவத்தில் வந்தாலும் எதிர்ப்பேன்" என்ற தலைப்பில் ம.பொ.சி எழுதுகிறார்."தமிழகத்தில் ஜீவநதி ஒன்று கூட இல்லை காவிரியாற்றின் தலைப்பு கன்னட நாட்டில் இருக்கிறது. தமிழகம் பிரிந்தால் காவிரி ஆற்றில் தண்ணீர் விட கன்னட அரசு சம்மதிக்குமா?......

"தமிழகத்தின் நிலப்பரப்பு ஐம்பதாயிரம் சதுர மைல். மக்கள் தொகையோ மூன்று கோடிக்கும் அதிகம். இன்னும் ஒரு அய்ம்பதாண்டு கழிந்தால் தமிழகத்தின் மக்கள் தொகை எட்டு கோடியாகலாம். அந்த நிலையில் பெருகி விட்ட மக்கள் தொகைக்கு குறுகிக்கிடக்கும் தமிழ் நிலம் போதுமா? வடவரை வெளியேற்றி, தமிழகத்தை தனி நாடாக்குவோமானால், அதையே காரணமாக காட்டி, வடக்கிலிலுள்ள தமிழர்களும் தமிழகத்திற்கு விரட்டப்படுவார்களே? இலங்கை, பர்மா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்களும் தாயகத்திற்கு விரட்டப்பட மாட்டார்களா?..... தமிழகத்தை இழப்பதால், எஞ்சிய பாரதத்திற்கு நஷ்டமில்லை. பாரத்திலிருந்து பிரிவதால் நஷ்டம் தமிழகத்திற்கே என்கிறார் ம.பொ.சி." ('செங்கோல்' 28.10.62)

"தமிழகம் தனி நாடகப் பிரிந்தால் நமக்குத் தேவைப்படும் பண்டத்திற்கும், பணத்திற்கும் அயல் நாடுகளின் உதவியை நாட வேண்டியிருக்கும். சகோதர நாடு என்ற நல்லெண்ணத்தாலோ, கஷ்டப்படும் மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற கருணையாலோ எந்த ஒரு நாடும் நமக்கு உதவி செய்ய முன்வராது. அயல் நாட்டு அரசியலில் நாம் சொந்தக் கொள்கையின்றி எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்து நடப்பதனால் மட்டுமே உதவி கிடைக்கும்... பாகிஸ்தான் கதியை தமிழ்நாடு அடைய வேண்டுமா?" 'செங்கோல்' (15.12.57) 22.4.62 'செங்கோல்' இதழில் 'நாட்டை துண்டா டுவதால் யாருக்கு லாபம்' என்ற கட்டுரையில் "தமிழகத்தின் கதி என்ன? சென்னை நகரின் குடி தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்க, கிருஷ்ணா - கோதவரி ஆறுகளின் தண்ணீரில் ஒரு சிறு பகுதியைச் சென்னையின் பக்கம் திருப்பி விட முடியாதென்கின்றனர் ஆந்திரர். தமிழகம் இந்தியாவோடு இணைந்திருக்கும் போதே நிலைமை இதுவென்றால் பிரிந்து வாழுமானால், இப்போது கொடுக்கும் தண்ணீரைக் கூட நிறுத்தி விடுவார்கள் கன்னட, கேரள ஆட்சியினர். அந்நிலையில் நம் தமிழகத்தின் கதி என்ன?

**குறைப்பது எப்படி:** உணவு உற்பத்தியைப் பெருக்கினால் தானே அரிசி விலையைக் குறைக்க முடியும். தண்ணீர் பஞ்சத்திற்கு இரையாகித் தவிக்கும். தமிழ்நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படுமென்றால் அரிசி விலையை எப்படி குறைக்க முடியும்?

**கற்பனை செய்து பாருங்கள்:** இது நிற்க, தனித் தமிழ் நாட்டில் அதன் சுய நிறைவுக் கேற்ப கனரகத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தியாக வேண்டும். அதற்கேற்ப மின் விசைத் தேவையைப் பூர்த்தி செய்ய தண்ணீர் வசதியும் தேவைப்படு மல்லவா? கற்பனை செய்து பாருங்கள்.

**முன்னேற முடியுமா?:** உணவு உற்பத்திக்குத் தேவைப்படும் நீருக்கும், குடி தண்ணீருக்குமே திண்டாடும் தனித் தமிழ்நாடு, கனரகத் தொழில் துறையில் சிறிதேனும் முன்னேற முடியுமா?

**உதவி கிடைக்குமா?:** இந்தியாவோடு இணைந்திருக்கும் இந்நாளில் வட மாநிலங்களிலிருந்து கோதுமை, அரிசி போன்ற உணவுப் பொருள்கள் ஓரளவு தமிழகத்திற்குக் கிடைக்கின்றன. ஆந்திர நாட்டிலிருந்து மிகுதியான அரிசி நமக்குக் கிடைக்கின்றது. தனித்து வாழும் தமிழ் நாட்டிற்கு இந்த உதவிகள் கிடைக்குமா? உரிமையோடு கேட்கத்தான் முடியுமா?

(தொடரும்)

---

### மாநாட்டில் நன்கொடை

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், மேக்கனாம்பட்டி சு. வெங்கடேசன்-அ.வாசுகி இணையரின் மகள் இசைப்பிரியாவின் முதலாம் ஆண்டு (6.2.2016) பிறந்த நாள் மகிழ்வாக, 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழுக்கு வளர்ச்சி நிதியாக ரூ.1000 நன்கொடையாக சங்கராபுரம் கழக மாநாடு மேடையில் பொதுச் செயலாளரிடம் வழங்கினர்.

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

**மன்னையில் :** திருவாரூர் மாவட்ட செயலாளர் இரா.காளிதாசு, அம்பேத்கர் பெரியார் வாசகர் வட்ட செயலாளர் சேரன்குளம் செந்தில்குமார் ஆகியோர்




தலைமையில் கண்டன ஆர்பாட்டம் மன்னார்குடி பெரியார் சிலை எதிரில் நடைபெற்றது. ஆர்பாட்டத்தில் மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் சீனி ஜெகபர் சாதிக், எஸ்டிபிஐ கட்சி தொகுதி தலைவர் முகமது அலி, மதிமுக மாவட்ட செயலாளர் பாலச்சந்திரன், நகர செயலாளர் சன் சரவணன், மாவட்ட பிரதிநிதி மீனாட்சி சுந்தரம், அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாநிலக்குழு உறுப்பினர் துரை அருள்ராஜன், மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் முருகேசன், விடுதலை சிறுத்தைகள் மாவட்ட செய்தி தொடர்பாளர் நெடுவை சுரேஷ், மாற்றத்திற்கான மக்கள் களம் அமைப்பாளர் திருவாரூர் நகர் மன்ற உறுப்பினர் வரதராஜன், அமைப்பாளர் சிமா மகேந்திரன், மக்கள் ஜனநாயக குடியரசு கட்சி பொறுப்பாளர்கள் ஆரோக்கிய பிரகாஷ், வினோத், சிபிஎம்எல் மக்கள் விடுதலை மாவட்ட செயலாளர் தங்கவேலு, மமக மாவட்ட பொருளாளர் சாகுல்ஹமீது, திராவிடர் விடுதலைக்கழக மாவட்ட அமைப்பாளர் பாரி ஆகியோர் கண்டனஉரையாற்றினர்.

(மற்ற ஊர்களில் நடந்த ஆர்ப்பாட்டம் அடுத்த இதழில்)

---

## வினா.... விடை....!

- உயர்நீதிமன்றத்தின் 1200 நீதிபதிகளில் பட்டியல் இனப் பிரிவினர் 18 பேர் மட்டுமே. **- செய்தி**

  இந்த 18 பேர் எப்படி வர முடிந்தது என்பதை கண்டுபிடிக்க உச்சநீதிமன்றம் ஒரு விசாரணைக் கமிஷனைப் போடாமல் இருந்தால் சரி.

- பழ. கருப்பையா அ.இ.அ.தி.மு.க.விலிருந்து நீக்கம். **- செய்தி**

  அந்த கட்சி வரலாற்றில் முதுகெலும்போடு எதிர்ப்புக் குரல் கொடுத்து அதற்காகவே நீக்கப்பட்ட முதல் மனிதர். எனவே இது 'சாதா' நீக்கமல்ல; 'புரட்சி' நீக்கம்!

- 'கும்பகோணம்' என்ற சொல்லுக்கு 'ஏமாற்றுதல்', 'மோசடி' என்று 19ஆம் நூற்றாண்டு ஆங்கில அகராதியில் கூறப்பட்டிருந்தது. **- 'தமிழ் இந்து' செய்தி**

  'கும்பகோணம்' மடத்தை ஆதிசங்கரர் மடம் என்று சங்கராச்சாரி ஏமாற்றியதால் அப்படி ஒரு அர்த்தம் வந்தது என்பதே அர்த்தத்துக்குள் அடங்கியுள்ள அர்த்தம் என அறிக!

- நடிகை ஹேமமாலினி நாட்டியப் பள்ளிக்கு ரூ.4 கோடி மதிப்புள்ள நிலத்தை ரூ.70,000-த்துக்கு மகாராஷ்டிர பா.ஜ.க. அரசு வழங்கியது. **- செய்தி**

  இது ரொம்பப் பழசு. எங்க நாட்டுல கலைஞர் ஆட்சியில் நாட்டியப் பள்ளி நடத்த பத்மா சுப்ரமணியத்துக்கு இலவசமாகவே இடம் வழங்கியிருக்காங்க!

- காந்தி நினைவு நாளில் கோவா பா.ஜ.க. ஆட்சி, கோட்சே வரலாற்று நூல் வெளியிட அனுமதி. **- செய்தி**

  கோட்சே 'வீரசாகச' நாளில் காந்திக்கு நினைவு நாள் நடத்துவது தாங்க குற்றம்!

- 'சமஸ்கிருதத்தை' சான்ஸ்கிரிட் என்று ஆங்கில அகராதி கூறுவது தவறு; 'சாம்ஸ்கிரிட்' என்று மாற்ற மத்திய அரசு முடிவு. **- செய்தி**

  பேசாம 'சமாதிஸ்கிரிட்'ன்னு மாத்திடுங்க; பொருத்தமா இருக்கும்!

---

**'புரட்சிப் பெரியார் முழக்கம்' வங்கிக் கணக்கு**

கரூர் வைஸ்யா வங்கி,
அடையாறு கிளை
'கரண்ட்' அக்கவுண்ட்.
எண் : 1257115000002041
IFSC KVBL0001257

---

**'புரட்சிப் பெரியார் முழக்கம்' உறுப்பினர் சேர்க்கையை முடித்து விட்டீர்களா?**

DATE OF PUBLICATION 04.02.2016 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# அணி அணியாய் குவிந்தது இளைஞர் படை

# சங்கராபுரத்தில் பார்ப்பன மதவாத எதிர்ப்பு மாநாட்டின் எழுச்சி








விழுப்புரம், கடலூர் மாவட்டங் களின் திராவிடர் விடுதலைக் கழகம் பார்ப்பன மதவாத எதிர்ப்பு மாநாட்டை காந்தியார் படுகொலை நாளான ஜன.30 அன்று சங்கராபுரத்தில் எழுச்சியுடன் நடத்தியது. மாநாடு தொடங்குவதற்கு முன் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலிருந்து சங்கராபுரம் கடை வீதிகள் வழியாக கழகத்தின் ஜாதி-மத வெறி எதிர்ப்புப் பேரணி, முழக்கங்களுடன் அணி வகுத்து வந்த காட்சி உணர்ச்சி மயமாக இருந்தது. பேரணியின் தொடக்கத்தில் பறை முழக்கம் அதிர்ந்தது. தொடர்ந்து ஒலிபெருக்கி வழியாக ஜாதி மத வெறிக்கு எதிரான முழக்கங்கள்; சென்னை மாவட்டக் கழக செயலாளர் உமாபதி, கழகக் கொடியை அசைத்து பேரணியைத் தொடங்கி வைத்தார்.

நூற்றுக்கணக்கான இளைஞர்கள் அடர்த்தியாக கருஞ்சட்டை சீருடை யுடன் கம்பீரமாக அணிவகுத்து வந்தனர். ஒவ்வொருவர் சட்டையிலும் முன்புறத்தில் பெரியார் படம், பின்புறத்தில் ‘நாங்கள் ஜாதியற்றவர்கள்’ என்ற முழக்கம் அச்சிடப் பட்டிருந்தது. மனிதர்களைப் பிளக்கும் ‘ஜாதி மதம் வேண்டாம்’ என்ற முழக்கம் அடங்கிய ரிப்பனை தலையில் கட்டியிருந்தனர். பெண்களும் குழந்தைகளும் ‘ஜாதியற்றவர்கள்’ என்று பொறித்த சீருடையுடன் அணி வகுப்பில் பங்கேற்றனர். ஜாதிக் கட்சிகளின் ஊர்வலங்களையும், கலவரங்களையும் நடத்தி வருவதைப் பார்த்த பொது மக்கள், ‘ஜாதியற்றவர்கள்’ பேரணியை வியப்புடன் பார்த்தனர்.

போக்குவரத்துக்கோ, பொது மக்களுக்கோ எவ்வித இடையூறுமின்றி இலட்சியச் சொற்களை மட்டுமே முழங்கி வந்த இந்தப் பேரணிக்கு காவல்துறையும் முழு ஒத்துழைப்பை வழங்கியது. வாகனங்களை ஒழுங்குப்படுத்தி பேரணிக்கு சிறப்பாக ஒத்துழைப்பை நல்கியது. பேருந்து நிலையம் அருகே மாநாட்டு மேடை கம்பீரமாகக் காட்சி அளித்தது. மறைந்த பெரியார் பேரொளி பட்டுக்கோட்டை சதாசிவம் நினைவு மேடை என்று பெயர் சூட்டப்பட்டு, அவரது உருவப்படம் அமைக்கப்பட்டிருந்தது. கழகக் கொடிகள் மாநாடு மேடையில் இருபுறமும் பறக்க, “காந்தி படுகொலை நாள் ஜனவரி 30; ஜாதி-மதவாத அரசியலை முறியடிப்போம்” என்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

சம்பூகன் குழுவினரின் எழுச்சி இசையுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. தோழர் நாத்திகன், ஜாதி ஒழிப்புப் பாடல்களைப் பாடினார். மாவட்டக் கழகத் தோழர்கள் இசை நிகழ்ச்சியின் இடையிடையே உரையாற்றினர். விழுப்புரம் மாவட்டக் கழக அமைப்பாளர் நாவப்பிள்ளை வரவேற்புரையாற்ற, மாவட்ட செயலாளர் பெரியார் வெங்கட் தலைமை தாங்கிப் பேசினார். மாவட்ட தலைவர் வழக்கறிஞர் தமிழ்க் குமரன் உரையாற்றினார். தோழர் க. இராமர் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் சிவகாமி, கழக வழக்கறிஞர்கள் துரை. அருண், திருமூர்த்தி, கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், ஆதித் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் நாகராஜன், மனிதநேய மக்கள் கட்சி பொதுச் செயலாளர் அப்துல்சமது, கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர்.

அப்துல் சமது தனது உரையில், வரலாறு நெடுகப் பார்ப்பனர்கள் திணித்த சமூகக் கொடுமைகளையும் அடக்குமுறைகளையும் பெரியாரின் மனித நேயத்தை யும் உணர்ச்சியுடன் எடுத்துரைத்தார். பார்ப்பன எதிர்ப்பாளர்கள் வரலாற்றில் படுகொலைகளை சந்தித்தாலும், பெரியாரிடம் மட்டும் பார்ப்பனர்களால் நெருங்க முடியாததை எடுத்துக் காட்டினார். பார்ப்பன எதிர்ப்புக்கான மேடை என்றால் அதில் பங்கேற்பதே தனது வாழ்நாளின் கடமையாகக கருதி செயல்பட்டு வருவதாகக் கூறிய அப்துல் சமது, ஏனைய மாநிலங்களைவிட தமிழ்நாட்டில் இஸ்லாமியர்கள் பாதுகாப்புடன் இருப்பதற்குக் காரணம் பெரியார் நடத்திய இயக்கம்தான் என்று பெருமையுடன் சுட்டிக்காட்டினார். காந்தியாருக்கும் பெரியாருக்கும் உள்ள வரலாற்றுத் தொடர்புகளையும், வர்ணாஸ்ரமத்தை ஆதரித்த காந்தியார் வாழ்வின் இறுதிப் பகுதியில் உண்மைகளை உணரத் தொடங்கியதையும் விடுதலை இராசேந்திரன் எடுத்துக் காட்டிப் பேசினார். பா.ஜ.க. மதவாத ஆட்சி, தனது பார்ப்பன மதவாத திணிப்புகளை நிறைவேற்றுவதற்கு அதிகாரத்தைப் பயன்படுத்தி வருவதை பல்வேறு நிகழ்வுகளை சுட்டிக்காட்டி கழகத் தலைவர் கொளத்தூர் மணி விளக்கினார்.

பெருந்திரளாக மக்கள் கூடியிருந்தனர். மாநாட்டில் போடப்பட்ட இருக்கை கள் நிரம்பி வழிந்ததோடு, இருபுறங்களிலும் பொது மக்கள் நின்று கொண்டு கருத்துகளை இறுதி வரை கேட்டனர். சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் 60 பேர், தனிப் பேருந்தில் மாநாட்டுக்கு வந்ததோடு, மாநாட்டுப் பணிகளிலும் முனைப்போடு பங்கேற்றனர். புதுவை பெரியார் முன்னணி அமைப்பைச் சார்ந்த தோழர்கள் தீனா தலைமையிலும், கடலூர் மாவட்டக் கழகத் தோழர்கள் பாரதிதாசன் தலைமையிலும் மாநாட்டில் பங்கேற்றனர். மாநாட்டையொட்டி சங்கராபுரத்திலும் அதன் சுற்றுப்பகுதிகளிலும் 120 இடங்களில் தோழர்கள் சுவரெழுத்துகளை எழுதியதோடு மாநாட்டின் நோக்கத்தை விளக்கிடும் துண்டறிக்கைகளை சங்கராபுரம் சுற்றுப்புறப் பகுதிகளில் கடை கடையாக வழங்கி, மாநாட்டுக்கு நிதி திரட்டினர். இது மிகச் சிறந்த கொள்கைப் பரப்புரையாக அமைந்தது.

**இளநீர் குமார் நன்கொடை :** கழக ஆதரவாளர் சென்னை இளநீர் குமார் மாநாட்டுக்கு ரூ.50,000 நன்கொடை வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய பகுதியான சங்கராபுரத்தில், பல நூறு இளைஞர்கள் பெரியார் கொள்கையை ஏற்று, ஜாதி ஒழிப்புக்காக களமிறங்கியிருப்பது இப்பகுதியில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியிருப்பதோடு, கழகத் தோழர்களிடம் புத்தெழுச்சியை உருவாக்கியுள்ளது.

**– நமது செய்தியாளர்**

## கழகத்தில் இணைந்த புதிய தோழர்கள்

சங்கராபுரம் பகுதியில் கழகத் தோழர்கள் நடத்திய பார்ப்பன மதவாத எதிர்ப்பு மாநாடு நல்ல தாக்கத்தை உருவாக்கியிருக்கிறது. மாநாட்டின் சுவர் விளம்பரத்தைப் பார்த்த கிராமத்து இளைஞர்கள், திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைந்து செயல்பட முன் வந்தனர். இந்த மாவட்டத்தில் தொடர்ந்து ஜாதி எதிர்ப்பு சமூக நீதிக்கான போராட்டங்களையும் பரப்புரைகளையும் கழகம் நடத்தி வருவதை அறிந்த இத்தோழர்கள், எங்கே எவரிடம் தொடர்பு கொள்வது என்று தெரியாத நிலையில் மாநாட்டுக்கான சுவரெழுத்து விளம்பரங்கள் அவர்களுக்கு உதவியது. அதில் குறிப்பிடப்பட்டிருந்த தொடர்பு எண்ணோடு தொடர்பு கொண்டு கழகத்தில் சேர வேண்டும் என்ற விருப்பத்தை பொறுப்பாளர்களிடம் தெரிவித்தனர். சங்கராபுரம் அருகே உள்ள கரடிபுத்தூர் கிராமத்தைச் சேர்ந்த 15 இளைஞர்களும், ரிஷிவந்தியம் அருகே தேரால் கிராமத்தைச் சேர்ந்த 12 இளைஞர்களும் மாநாட்டில் முழுமையாக பங்கேற்றதோடு, மேடையில் கழகத் தலைவர், பொதுச் செயலாளர் முன்னிலையில் தங்களை கழகத்துடன் இணைத்துக் கொண்டனர்.

## ‘காட்டாறு’ இதழ் குழு: ஒரு முக்கிய அறிவிப்பு


‘காட்டாறு’ மாத இதழ் கழகத்தின் அதிகாரபூர்வமானது அல்ல என்று ஏற்கெனவே அறிவித்துள்ளோம். அந்த இதழோடு தொடர்புடைய தோழர்கள் பொள்ளாச்சி விஜயராகவன், தாமரைக் கண்ணன், இராவணன், பல்லடம் விஜயன் - கழகத்தின் பொறுப்புகளிலிருந்து விலகிக் கொள்வதாகவும், ஆனால், கழகத்தில் உறுப்பினர்களாக தொடர்வதாகவும் எழுத்து மூலம் தலைமைக்கு தெரிவித்திருந்தனர்.

ஆனால், கழகத்தின் செயல் திட்டங்களில் இணைத்துக் கொள்ளாமல் அவற்றை விமர்சித்து, தங்களுக்கான தனி செயல் திட்டங்களோடு செயல்பட்டு வருகிறார்கள். இந்த நிலையில் கழக உறுப்பினர்களாக நீடிப்பதிலிருந்தும் அவர்களாகவே விலகிக் கொண்டிருக்க வேண்டும். அப்படி விலகிக் கொள்ளாமல், கழக உறுப்பினர்கள் என்று கூறிக் கொண்டே கழக செயல் திட்டங்களோடு முரண்பட்டு செயல்படுவது அமைப்பில் குழப்பங்களை உருவாக்கும் முயற்சிகளேயாகும். கழக செயலவை யிலும் தோழர்கள் பலரும் இதை சுட்டிக் காட்டினர். எனவே, ‘காட்டாறு’ இதழோடு தங்களை நேரடியாக இணைத்துக் கொண்டு தங்களுக்கான தனித்த செயல் திடடங்களோடு செயல்படும் தோழர்கள் திராவிடர் விடுதலை கழகத்தின் உறுப்பினர்களாக தொடர்ந்து நீடிக்க இயலாது. அவர்கள் கழகத்தின் உறுப்பினர்களாக நீடிக்கவில்லை.

**– கொளத்தூர் மணி, தலைவர், திராவிடர் விடுதலை கழகம்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 4th February 2016

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2047 | பிப்ரவரி 11, 2016 | புரட்சி 15 | முழக்கம் 4 | விலை: ரூ.3.00

# சிறைவாசிகளை விடுதலை செய்வதில் இஸ்லாமியர்களுக்கு மட்டும் பாகுபாடு காட்டுவது ஏன்?

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி கேள்வி



பத்து ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடும் நீண்டகால சிறைவாசிகளையும், ராஜீவ்காந்தி கொலை வழக்கில் 26 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடும் பேறறிவாளன் உள்ளிட்டோரை அரசியல் அமைப்பு சட்டம் 161வது பிரிவை பயன்படுத்தி தமிழக அரசு எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவையொட்டி உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தி மனிதநேய மக்கள் கட்சி சார்பில் சென்னை, மதுரை, கோவை நகரங்களில் மக்கள் பெருந்திரள் ஆர்ப்பாட்டங்களை பிப்ரவரி 7ஆம் தேதியன்று நடத்தியது.

மதுரை பழங்காநத்தம் பகுதியில் பிப்ரவரி 7ம் தேதி மாலை 4 மணியளவில் மனித நேய மக்கள் கட்சியின் மூத்த தலைவர் ஐதர்அலி தலைமையில் நடைபெற்ற ஆர்பாட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ம.ம.க. பொதுச் செயலாளர் அப்துல் சமது, மனித உரிமை அமைப்பு சார்பில் ஹென்றி டிபேன், புகழேந்தி, அருண்சோரி உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி தனது உரையில், “இந்த நாட்டை ஒரு ஜனநாயக நாடு என்று சொல்கிறார்கள். பெரும்பான்மை மக்கள் கருத்துப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு என்று சொல்லிக் கொள்கிறார்கள். யார் பெரும்பான்மையோர் ? உரிமை பறிக்கப்பட்டிருக்கின்ற தலித்துக்கள், அவர்களை போல் கிராமங்களில் உழன்று கொண்டிருக்கின்ற விளிம்பு நிலை மக்கள், இஸ்லாமியர்கள் இவர்களை எல்லாம் இணைத்தால் இவர்கள் தான் இந்த நாட்டில் பெரும்பான்மையோர் ஆவர்.

ஆனால், ஆட்சியை நடத்துகின்ற சிறுபான்மை மட்டுமல்ல, மிகவும் சிறுபான்மையாக இருக்கக்கூடிய ஒரு கூட்டம் , தங்களது மதவெறி கருத்துக்களைத்தான் அவைரும் பின்பற்றவேண்டும் என்ற ஆணவத்தோடு, வெறி உணர்வோடு ஒரு பக்கம் திணிக்கிறார்கள், அதிகாரத்தில் அமர்ந்து கொண்ட திமிரால் ஆட்சியில் இருந்துகொண்டு எளியவர்கள் மீது அதிகாரம் செலுத்துகின்ற அதிகாரிகள் மறுபக்கம் திணிக்கிறார்கள். சிறையில் வாழும் கைதிகளை விடுதலை செய்வதற்கு நாம் அரசியல் அமைப்பு சட்டம் 161ஆவது பிரிவை பயன்படுத்த வேண்டும் என்று சொல்கிறோம். இந்தியாவின் நீதிமுறை என்பது

(4ஆம் பக்கம்)

## திலீபன் மகேந்திரன் கையை முறித்த காவல்துறைக்கு கழகம் கடும் கண்டனம்



இந்திய தேசியக் கொடியை எரிக்கும் படத்தை தனது முகநூலில் வெளியிட்டதற்காக தந்தை பெரியார் திராவிடர் கழகத்தைச் சார்ந்த தோழர் திலிபன் மகேந்திரனை காவல்துறை கைது செய்து, அவரது கையையும் மூன்று விரல்களையும் இரும்புக் கம்பியால் உடைத்திருக்கிறது. கொடி எரிப்பு அவமதிப்பு என்றால், அதற்கான சட்டப் பிரிவுகளில் வழக்கு தொடரட்டும். ஆனால், காவல்துறை காட்டுமிராண்டித்தனமாக கையை உடைக்கும் அளவுக்கு போயிருக்கிறது. திராவிடர் விடுதலைக் கழகம், காவல் துறையின் இந்த செயலை வன்மையாகக் கண்டிக்கிறது. கடந்த 6ஆம் தேதி மயிலாடுதுறையில் “ஜாதிக்கொரு சுடுகாடு; இது சுதந்திர நாடா?” என்ற தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய பொதுக் கூட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் இந்த செயலுக்காக காவல்துறைக்கு கடும் கண்டனம் தெரிவித்துப் பேசினார்.

சென்னை புளியந்தோப்பு காவல் நிலையத்தின் இந்த வன்முறை வெறியைக் கண்டித்து, கடந்த 8ஆம் தேதி காவல் நிலையத்தை முற்றுகையிடும் போராட்டம் நடந்தது. த.பெ.தி.க. சென்னை மண்டல அமைப்பாளர் கரு. அண்ணாமலை தலைமையில் நடந்த இந்தப் போராட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகத்தைச் சார்ந்த தோழர்கள் இராவணன், ஏசு, அருள்தாசு, மனோகர், மாரிமுத்து, பார்த்திபன், பிரதீப், ராஜா, பிரபாகரன், செந்தில் (எப்.டி.எல்.), அருண், நந்தா, முழக்கம் உமாபதி உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட தோழர்களும், இளம்தமிழகம், தமிழ் தேசிய பேரியக்கம், தமிழ்த் தேச விடுதலை இயக்கம், மே 17 உள்ளிட்ட எட்டு அமைப்புகளைச் சார்ந்த 100 தோழர்கள் பங்கேற்று – கைது ஆனார்கள். பிப்.13ஆம் தேதி சென்னையில் இதே பிரச்சினைக்காக கண்டன ஆர்ப்பாட்டத்தை தந்தை பெரியார் திராவிடர் கழகம் ஒருங்கிணைத்து வருகிறது. இதில் கழகத் தலைவர், பொதுச் செயலாளர் மற்றும் கழகத் தோழர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இதற்கிடையே திலிபன் மகேந்திரன் கையை உடைத்த காவல்துறையைப் பாராட்டி, இந்து அமைப்பைச் சார்ந்த நாராயணன் என்ற ஆசாமி, சென்னையில் சுவரொட்டிகளை ஒட்டியிருக்கிறார். காவல் நிலைய சித்திரவதைகள் குறித்து ‘விசாரணை’ என்ற திரைப் படம், திரையரங்குகளில் ஓடிக் கொண்டிருக்கிறது. காவல் நிலையங்களில் என்ன நடக்கிறது என்பதை மக்களுக்கு விளக்கிச் சொல்கிறது, இந்த திரைப்படம். இந்த நிலையில் இப்படத்தின் சம்பவங்களை உறுதிப் படுத்துவதாகவே புளியந்தோப்பு காவல்துறையின் இந்த நடவடிக்கை அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# பிப்.14 உலக காதலர் நாள்

### உயர்ந்த காதல் எது?

*உணர்ச்சிகளால் உந்தப்படும் காதலை மறுக்கும் பெரியார், அறிவார்ந்த புரிதலோடுக் கூடிய காதலை வரவேற்கிறார். காதல் பற்றி பெரியார் கருத்து.*

“உண்மையில் காதல் மணம் என்றால் பெண்களும் ஆண்களும் சம நிலையில் பழகும் வாய்ப்புத் தந்து, ஒருவருடைய குணா குணங்களை மற்றவர் அறியும் சமயம் கிடைத்து ஒருவருடைய வாழ்க்கைக்கு ஒருவர் இன்றியமையாதவர் என்ற நிலையில் காதல் கொள்வதுதான் உயர்ந்த காதலாகும்!” **– குடிஅரசு 21.7.45**

### நண்பர்களாகப் பழகி புரியுங்கள்!

“ஒரு பெண்ணும் ஆணும் சேர்ந்து பழகி ஒருவரையொருவர் அறிந்து கொண்ட பிறகுதான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். ஆண்களோடு சாதாரணமாகப் பெண்களைப் பழகச் சொல்ல வேண்டும். யோக்கியனா? கோபக்காரனா? பைத்தியக்காரனா? வேடக்காரனா? குடிகாரனா? என்று பெண்ணுக்கு முன்னரே தெரிய வேண்டாமா? பழகினால்தானே தெரியும். திடீரென்று ஒருவரை யொருவர் முடிச்சு போடலாமா? அன்பு, குணம், பழக்க வழக்கம் இவைகள் உணர்ந்து ஒருவருக்கொருவர் நண்பர்களாகப் பழக வேண்டும். உடல் சேர்க்கை வேண்டும் என்று நான் கூறவில்லை. இதுதான் நான் சொல்லும் காதல்-ஆசை-இஷ்டம்.”

**– விடுதலை 24.5.47**



- அறிவார்ந்த காதல் என்பது ஒருவரையொருவர் புரிந்துணர்ந்த காதல்!
- அது – ஜாதி மதங்களைக் கடந்த காதல்!
- அது – இலட்சிய வாழ்க்கையை நோக்கி நடைபோடச் செய்யும் காதல்!
- பெண் – ஆண் சமத்துவத்தைப் பேணிப் போற்றும் காதல்!
- இளம் பருவ உணர்வலைகளில் உந்தி நிற்கும் ‘விடலைப் பருவ’ காதல் வேண்டாம்; அறிவார்ந்த காதல் செழிக்கட்டும்!
- அது ஜாதி ஒழிப்புக்கு வழி வகுக்கட்டும்!

**காதலர் தின வாழ்த்துக்கள்!**

**– திராவிடர் விடுதலைக் கழகம்**

தலையங்கம்

## யாழ்ப்பாணத்தில் அய்.நா. மனித உரிமை ஆணையத் தலைவர்

அய்.நா. மனித உரிமை ஆணையர், சையத் அல் உசேன், கடந்த வாரம், தமிழ் ஈழப் பகுதிகளுக்கு நேரில் சென்று போரில் பாதிக்கப்பட்ட மக்களையும், தமிழர் அமைப்பினரையும் நேரில் சந்தித்திருக்கிறார். வடக்கு மாகாண முதலமைச்சரும் அந்நாட்டின் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதியுமான விக்னேசுவரன், ஆணையரை சந்தித்து சிங்கள அரசால் நீண்டகாலமாக சிறைபடுத்தப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்ய இலங்கை அரசுக்கு அழுத்தம் தரவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். இறுதிக்கட்ட இனப்படுகொலையின்போது 'காணாமல்' போனவர்களின் உறவினர்கள் அவர்களின் உருவப் படங்களை கையில் ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். யாழ்ப்பாணம் 'நலன்புரி நிலையம்' என்ற உதவி மய்யத்தில் தமிழர்களை ஆணையர் சந்தித்துள்ளார். அப்போது போரில் பாதிப்புற்று, சொந்தப் பகுதிகளுக்கு திரும்ப முடியாது தவிக்கும் தமிழர்கள், "எங்களுக்கு விமான நிலையமும் வேண்டாம்; துறைமுகமும் வேண்டாம்; எங்கள் நிலங்களை ஆக்கிரமித்திருக்கும் இராணுவத்திடமிருந்து மீட்டுத் தாருங்கள்" என்று கண்ணீர் மல்க வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைத்திடவும், நேர்மையான மறுவாழ்வுக்கும் இலங்கை அரசுக்கும் அய்.நா. மனித உரிமை ஆணையர் அழுத்தம் தர வேண்டும் என்று சர்வதேச பொது மன்னிப்பு சபை (Amnesty International) வலியுறுத்தியிருக்கிறது. முன்னாள் இந்திய நீதிபதி ஏ.பி.ஷா உள்ளிட்ட சர்வதேச சட்ட நிபுணர்கள் அய்.நா. மனித உரிமை தலைவருக்கு திறந்த கடிதம் ஒன்றை விரிவாக எழுதியுள்ளனர். மனித உரிமை மீறல்கள் போர்க் குற்ற விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகள் பங்கேற்கும்போது பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாக சந்தித்து, அவர்களின் கருத்துகளைக் கேட்கச் செய்ய வேண்டும் என்று அதில் வலியுறுத்தியுள்ளனர்.

இதே காலத்தில் கடந்த பிப்ரவரி 6ஆம் தேதி இலங்கைப் பயணம் மேற்கொண்ட இந்திய வெளிநாட்டுத் துறை அமைச்சர் சுஷ்மா, நாடாளு மன்றத்தில் சிங்கள ஆட்சிக்கு ஆதரவு தரும் தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களை மட்டுமே சந்தித்துப் பேசியதாக செய்திகள் வெளி வந்துள்ளன. போரில் பாதிக்கப்பட்ட தமிழர்களை அவர் சந்திக்கவில்லை. வடக்கு மாகாண முதல்வர் விக்னேசுவரன் சந்திப்பையும் சுஷ்மா இரத்து செய்துவிட்டார். தமிழ் தேசிய கூட்டணியின் அண்மைக்கால அரசியல் செயல்பாடுகளில் உடன்பாடு இன்றி வடக்கு மாகாண முதல்வர் ஒதுங்கி யிருப்பதோடு, யாழ்ப்பாணத்தில் 'மக்கள் பேரவை' என்ற அரசியல் சார்பற்ற அமைப்பு ஒன்றை தொடங்கியிருக்கிறார். தமிழ் மருத்துவர்கள், வழக்கறிஞர் கள், சிந்தனையாளர்கள் இதில் இடம் பெற்றுள்ளனர். வடக்கு மாகாண சட்டசபையில் இரண்டு வரலாற்று முக்கியத்துவமான தீர்மானங்களையும் நிறைவேற்றியிருக்கிறார். தமிழர்கள் மீதான போர்க் குற்றங்கள், பன்னாட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பது ஒன்று. மற்றொன்று, தமிழர்கள் மீது இலங்கை நடத்தியது இனப்படுகொலையே என்பதாகும்.

தமிழர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாகாண ஆட்சியின் இந்தத் தீர்மானமே தமிழர்களின் ஒருமித்த கருத்து என்பதற்கான சான்றாவணமாகும்.

இந்த நிலையில் இலங்கைக்கு புதிய அரசியலமைப்பை உருவாக்க முடிவு செய்துள்ளது, அந்த அரசு! 'சுதந்திரக் கட்சி'யின் மத்திய குழுக் கூட்டத்தில் உரையாற்றிய அந்நாட்டின் அதிபர் மைத்ரி பால சிறிசேனா, "புதிதாக இயற்றப்படும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் கூட்டாட்சி அமைப்புக்கு இடமில்லை" என்று கூறியிருக்கிறார். இப்போது நடக்கும் ஒற்றை ஆட்சி என்ற தமிழர்களை இரண்டாம் தர குடிமக்களாக்கும் அரசியலமைப்பே நீடிக்கும் என்று சிங்களம் இதன் மூலம் அறிவித்திருக்கிறது.

ஈழத் தமிழர்களுக்கான ஒரே தீர்வு அந்த மக்களுக்கான இறையாண்மை கொண்ட ஒரு தேசத்தை உருவாக்குவதுதான் என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை. அதற்கான வரலாற்று புவியியல் அரசியல் நியாயங்கள் தமிழர்களுக்கு இருக்கிறது. என்றாலும், இதை நோக்கிய அரசியல் முன்னெடுப்புக்கு பல நிலைகளைக் கடக்க வேண்டியிருக்கிறது என்பதையும் கவனத்தில் நிறுத்த வேண்டியிருக்கிறது. 'தேசிய சுயநிர்ணய உரிமையை' ஏற்கும் அய்.நா. மன்றம் அதை மேலும் செழுமையாக்கி, 'உள்ளக சுயநிர்ணய உரிமை', 'வெளியக சுயநிர்ணய உரிமை' என்ற அரசியல் கோட்பாடுகளையும் வரையறை செய்திருக்கிறது.

தமிழ் ஈழ தேசியத் தலைவர் மேதகு பிரபாகரனும், தனது "மாவீரர் நாள்" உரைகளில், சர்வதேச சட்டங்களின் மொழிகளிலேயே தமிழ் ஈழ விடுதலைக்கான முன்மொழிவுகளை வலியுறுத்தி வந்திருப்பதை அவரது உரையை ஆழ்ந்து படிப்பவர்கள் உணர முடியும். நார்வே தலையீட்டால் போர் நிறுத்தம் உருவாகி, இரு தரப்பினரிடையே அமைதிப் பேச்சு வார்த்தை நடந்தபோது 2002ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் சார்பில், அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்று முன்மொழியப்பட்டதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இந்தத் தீர்வு திட்டத்தை உலக நாடுகள் பாராட்டி வரவேற்றதோடு, பேச்சு வார்த்தையில் பங்கேற்ற அன்றைய இலங்கை அயலுறவு அமைச்சர் ஜி.எஸ். பெரீஸ் தலைமையிலான குழுவும் ஏற்க வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டது.

இலங்கையின் புதிய அரசியலமைப்பு ஒன்று உருவாகும் சூழலில், கூட்டாட்சி அமைப்பை முற்றாக மறுக்கும் சிங்கள அரசுக்கு சர்வதேச அரங்கில் நெருக்கடியை உருவாக்கி, அதன் பேரின வெறி முகத்தை அம்பலப்படுத்த வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. இந்த நிலையில் விடுதலைப் புலிகள் முன் வைத்த தீர்வுத் திட்டத்தை ஓர் ஆயுதமாக பயன்படுத்துவது குறித்து சர்வதேசத் தமிழினம் ஆழமாக பரிசீலிக்க வேண்டும். சிங்களம் அதை மறுத்திடும் நிலையில் அது, பொது வாக்கெடுப்பு என்ற கோரிக்கைக்கு வலிமை சேர்க்கும். போர்க்குற்றம், சர்வதேச விசாரணை, உள்ளக சுயநிர்ணய உரிமைக்கான தீர்வுத் திட்டம், பொது வாக்கெடுப்பு என்ற அரசியல் படிக்கட்டுகளில் முன்னேறிச் செல்லும் நகர்வுகளுக்கான திட்டமிடல்களை உருவாக்கி, அது உலகத் தமிழர்களின் குரலாக ஒழுங்கமைக்கப்பட வேண்டிய வரலாற்றுத் தேவை உருவாகியிருப்பதாகவே கருதுகிறோம்.

இந்த திசை வழியில் இலங்கைப் பேரினவாத ஆட்சிக்கு அழுத்தங்களை உருவாக்கவும், சர்வதேச அரங்குகளில் ஆதரவைத் திரட்டுவதற்கான அரசியல் காரணிகளை முன் வைத்துப் போராட்டங்களை முன்னெடுக்கவுமான தருணம் இது. உணர்ச்சிகளால் உந்தப்படும் முழக்கங்கள் மட்டுமே தீர்வுகளை நோக்கிய முன் நகர்வுகளுக்குப் பயன்படாது என்பதை கவலையுடன் சுட்டிக் காட்டுகிறோம்.

# ரோகித் மரணத்திற்கு நீதிக் கேட்டு கழகம் நடத்திய ஆர்ப்பாட்டம்

***அய்தராபாத் பல்கலை தலித் ஆராய்ச்சி மாணவர் மரணத்துக்கு நீதி கேட்டு கழகம் பல்வேறு ஊர்களில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியது.***

**தூத்துக்குடியில்** – பார்ப்பன சூழ்ச்சியால் மரணமடைந்த 'ரோஹித் வெமுலா'வின் மரணத்திற்கு நீதி கேட்டும், மத்திய அரசின் கல்வி வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் விளிம்பு நிலை மக்கள் புறக்கணிக்கப்படுவதை கண்டித்தும், தூத்துக்குடி மாவட்ட திராவிடர் விடுதலை கழகம் சார்பில் 01.02.2016 அன்று மாலை 5 மணியளவில் சிதம்பர நகர் பேருந்து நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு தலைமை தாங்கினார். மாவட்ட துணைத் தலைவர் வே.பால்ராசு, மாவட்ட துணைச் செயலாளர் ச.கா. பாலசுப்பிரமணியன் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட தலைவர் அம்புரோசு தலைமை உரையைத் தொடர்ந்து, ம.தி.மு.க.வின் மாநில மீனவரணி செயலாளர் நக்கீரன் கண்டன உரையாற்றினார். அவரைத் தொடர்ந்து SDPIயின் தூத்துக்குடி மாவட்ட பொருளாளர் மைதீன் கனி, ஆதித் தமிழர் கட்சியின் சு.க.சங்கர், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி செயலாளர் கா.மை. அகமது இக்பால், மனித நேய மக்கள் கட்சியின் தூத்துக்குடி மாவட்ட செயலாளர் எஸ். ஆசாத் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தின் நோக்கத்தை விளக்கி திராவிடர் விடுதலைக் கழகத்தின் கொள்கை பரப்புரை செயலாளர் பால்.பிரபாகரன் உரையாற்றினார். அவரது உரையில், "ஐ.ஐ.டி. போன்ற உயர் படிப்புகளில், மத்திய அரசின் உயர்பதவிகளில் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரின் இடங்களில் மிகக் குறைவான அளவே இடம்பிடித்துள்ளனர் என்பதை புள்ளி விவரங்களுடன் விவரித்தார். இங்கு நாங்கள் உயர்ந்த சாதி என்று மீசை முறுக்கும் சாதித் தலைவர்கள் தன் சாதியினருக்கும், தன் சமூக மக்களின் உரிமைக்கும் எந்த விதத்திலும் போராடவில்லை என்றும், கல்வி நிறுவனங்கள் காவி மயமாகுவதையும் தன்னுடைய உரையில் தெளிவுபடுத்திக் கூறினார். உரையை பொது மக்கள் கலையாமல் கவனித்து வந்தனர். இது மிகுந்த உற்சாகத்தைத் தந்தது. இறுதியாக மாவட்ட செயலாளர் ச.ரவி சங்கர் நன்றி கூறினார்.

தூத்துக்குடி மாவட்ட அமைப்பாளர் பால். அறிவழகன், மாவட்ட பொருளாளர் வீரப் பெருமாள், தமிழ்நாடு மாணவர் கழக தூத்துக்குடி மாவட்ட பொறுப்பாளர்கள் கண்ணதாசன், சூரங்குடி பிரபாகரன், விளாத்திகுளம் ஒன்றிய தலைவர் மாரிச் செல்வம் மற்றும் தி.வி.க.வின் நெல்லை மாவட்ட தலைவர் பால் வண்ணன், கீழப்பாவூர் ஒன்றிய தலைவர் மாசிலாமணி, கீழப்பாவூர் ஒன்றிய செயலாளர் சுப்பையா, எட்டையபுரம் காசிராஜன் மற்றும் தூத்துக்குடி கோ.அ. குமார், சந்திரசேகர், ஜெபாஸ்டின் மற்றும் திரளான தோழர்களும், தோழமை அமைப்பின் தோழர்களும் கலந்து கொண்டனர்

**பழனியில்** – திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் (01-02-2016) பழனி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மருதமூர்த்தி தலைமை தாங்கினார். ஆனந்த், கார்த்திக் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருச்செல்வம், காளிமுத்து, சிவமணி கண்டன உரையாற்றினர். இறுதியில் குட்டி நன்றியுரை ஆற்றினார். பார்ப்பன "துரோணாச்சாரிகளின் வாரிசுகளா, உயர்கல்வி நிறுவனங்கள்?", "ஏகலைவன்களாக இனியும் இருக்க மாட்டோம்!" என முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

**வேலூரில்** – திராவிடர் விடுதலைக் கழக சார்பில் வேலூரில் ஆர்ப்பாட்டம் 01.02.2016 திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று, கழக மாவட்ட அமைப்பாளர் இரா.ப.சிவா, திலிபன் (தி.வி.க.), துரை. ஜெய்சங்கர் (வி.சி.க), செவ்வேள் (தா.ஓ.வி.), கழகத் தோழர்கள் நரேன், சந்தோஷ் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

**சேலம் (கிழக்கு)** – ரோகித் வெமுலாவின் மரணத்திற்கு நீதி கேட்டு திங்களன்று 01.02.2016 மாலை சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு சேலம் கிழக்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாணவர் கழகம் இணைந்து நடத்திய கண்டன ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழக கிழக்கு மாவட்டத் தலைவர் க. சக்திவேல் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் இரா. டேவிட். மாவட்ட பொருளாளர் ஏற்காடு பெருமாள் மற்றும் தமிழ்நாடு மாணவர் கழக பா. முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கண்டன ஆர்பாட்டத்தில் ஒத்த கருத்துடைய தோழமை அமைப்புகளான ம.தி.மு.க.வின் மாவட்டச் செயலாளர் வழக்குரைஞர் அ. ஆனந்தராஜ், தமிழ்நாடு மக்கள் உரிமை கட்சியின் தலைவர் பூமொழி, த.பெ.தி.க. வின் மாவட்டச் செயலாளர் கு.தங்கராசு, ஆதி தமிழர் பேரவையின் மாவட்டச் செயலாளர் க. இராதா கிருட்டிணன். CPI மாவட்டச் செயலாளர், அ. மோகன், விடுதலை சிறுத்தைகளின் மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஜெ.மு. இமயவரம்பன், அருந்ததியர் மக்கள் இயக்கத்தின் ஜெ.பிரதாபன், வழக்கறிஞர், மண்ணின் மைந்தர்களின் மாநகரச் செயலாளர் அண்ணாதுரை, அனைத்து இந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநகரச் செயலாளர் தனவேல், தமிழ்நாடு மாணவர் இளைஞர் பேரவை பூ. ஜெகதீஸ்வரன், தமிழ்நாடு மாணவர் கழகத்தின் விஜய் கார்த்திக், த.மு.மு.க.வின் கி.மா.பொ.பி. சுல்தான், பகுஜன் சமாஜ் கட்சியின் மாவட்டத் தலைவர் வழுக்குரைஞர் பார்த்தீபன், அம்பேத்கர் மக்கள் இயக்கத்தின் ஜங்சன் ஆ. அண்ணாதுரை. SFI மாவட்டச் செயலாளர் இராம சந்திரன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். மாலை 4.30 மணிக்கு தொடங்கிய ஆர்ப்பாட்டமானது இரவு 7.30 மணிக்கு கழக மாநகரச் செயலாளர் ஜோ. பிரபு நன்றியுரையாற்ற ஆர்ப்பாட்டம் சிறப்புற நடந்தேறியது.

**ஈரோட்டில்** – ரோகித் வெமுலா மரணத்துக்கு நீதி கேட்டு திராவிடர் விடுதலைக் கழகம், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஆர்ப்பாட்டம் நடத்திய செய்தியை கடந்த இதழில் வெளியிட்டது. ரோகித் வெமுலா மரணத்திற்கு நீதி கேட்டு திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் ஈரோடு வீரப்பன் சத்திரத்தில் கழக அமைப்பு செயலாளர் குசண்முகபிரியன் (கழக மாவட்ட செயலாளர் ஈரோடு தெற்கு) முன்னிலையில் காலை 10 மணிக்கு நடைபெற்றது. வரவேற்புரை சிவானந்தம் (மாநகரச் செயலாளர்).

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கண்டன உரையாற்றிய தோழர்கள் : கண.குறிஞ்சி (மாநிலதுணைத் தலைவர் மக்கள் சிவில் உரிமைக் கழகம்), தமிழ் இன்பன் (நிறுவனர் விடுதலை வேங்கைகள் கட்சி), பெருமாவளவன் (மாநில நிதிச் செயலாளர் ஆதித் தமிழர் பேரவை), ஆட்டோ சாகுல் அமீது (மாவட்ட செயலாளர் தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம்), நிலவன் (கனிராவுத்தர் குளம் மீட்பு இயக்கம்), விநாயகமூர்த்தி (மாநகர் மாவட்ட செயலாளர்), கோபி. வேலுச்சாமி

(4ஆம் பக்கம்)

## வரலாற்றுப் புரட்டர்களுக்கு மறுப்பு (11)

# தொன்று தொட்டு இந்தியா ஒரே நாடு, என்கிறார் ம.பொ.சி.

பெரியாருக்கு எதிராக அவ்வப்போது சில வரலாற்றுப் புரட்டர்கள் புறப்படுவதும், பதிலடி கிடைத்தவுடன் பதுங்குவதும் வாடிக்கையாகி விட்டது. 'குணா'வின் வாரிசாக கிளம்பியுள்ள ஒருவர் அண்மையில் வெளியிட்டுள்ள நூலுக்கு இது ஒரு மறுப்பு.

தமிழகம் தனி நாடாகக் கூடாது என்பதற்கு காரணங்களை அடுக்குகிறார், ம.பொ.சி.

**அயல்நாட்டு உதவி?:** "அமெரிக்கா போன்ற அயல் நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து கொள்ளலாம்" என்று கூறலாம். இப்போதே, பாரதத்துக்குற்ற நாணய மாற்று சக்தியையும் மீறி உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகிறது, செய்தும், விலைவாசிகளை குறைக்க முடியவில்லையே! கேட்டவனுக்கெல்லாம், கேட்ட போதெல்லாம் அவனவனுக்குத் தேவைப்படும் அளவுக்கு அள்ளி அள்ளிக் கொடுக்க அமெரிக்க நாட்டார் வள்ளல் பெருமக்கள் அல்லர். தாங்கள் உதவும் நாட்டிலிருந்தும், தங்கள் நாட்டிற்கு என்ன ஆதாயம் கிடைக்கும்? என்று அலசி ஆராய்ந்து பார்த்தப் பின்னர் தான் அவர்கள் உதவி புரிவார்கள்......

**என்ன இருக்கிறது?:** தமிழ் நாட்டில் உலக நாடுகளுக்குத் தேவைப்படுகின்ற மூலப் பொருள்கள் இப்போது என்ன இருக்கிறது? ஏதோ இங்கும் அங்குமாக ஒரு சில இடங்களில் மூலப் பொருள்கள் கிடைக்கலாமென்று யூகிக்கிப்படுகிறது. ஆனால், இப்போதுள்ள நிலையை வைத்துத் தானே நாம் பிரிவினையால் நன்மை தீமைகளை ஆராய முடியும்.

**தனியாகப் பிரிந்தால்:** தமிழ்நாட்டின் தற்போதைய மக்கள் தொகை மூன்றுகோடி, இவர்களில் தற்காலிகமாக குடியேறி வாழும் வட நாட்டாரோ, பிற அயல் நாட்டாரோ மிக மிகச் சொற்பம். இந்த நிலையில் தமிழ்நாடு தனியாகப் பிரியுமானால், தமிழகத்திற்கு வெளியே இந்தியாவிலும், பர்மா, இலங்கை, மலாயா, சிங்கப்பூர் போன்ற அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் பிரிக்கப்பட்ட தமிழகத்திற்கு விரட்டப்படுவது திண்ணம்......

தமிழகம் அழைத்துக் கொள்ள வேண்டிய மக்களின் எண்ணிக்கை அற்பமன்று; அரை கோடிக்கு மேலிருக்கும். ஒருக்கால், தமிழகத்திலிருந்தும் சிலர் வெளியேற்றப்படலாமென்றால், அத்தகைய 'அன்னியர்' எண்ணிக்கை ஆயிரக்கணக்கில்தான் இருக்கும். ஆம், சில ஆயிரக்கணக்கானவர்களை வெளியேற்றி அரைக்கோடி தமிழர்களை இங்கு அழைத்துக் கொள்ள நேரும். அந்த நிலையில் தமிழகத்தில் அரிசி விலை இன்னும் கூடுமா? குறையுமா?

**என்ன அரசியல் ஞானமோ?:** உறுதியாகச் சொல்லுகிறேன், எந்தக் கோணத்தில் நின்று பார்த்தாலும் தமிழ்நாடு தனியாகப் பிரிந்தால் பயங்கரமான உணவு பஞ்சம் ஏற்படுவது திண்ணம். ஒரு புறம் உணவு விலையைக் குறைப்பதாகச் சொல்லிக் கொண்டு, இன்னொருபுறம் உணவுப் பஞ்சத்தை அதிகரிக்கச் செய்யும் தனி நாடு கேட்பது என்ன அரசியல் ஞானமோ!...

**மன்னிக்க முடியாத குற்றம் :** ".... நாட்டு மக்கள் எல்லோரும் இன்புற்று வாழ வேண்டுமென்றால் அதற்கு நாட்டைத் துண்டாட தேவை இல்லை.... நாட்டைத் துண்டாடக் கோரிக் கூச்சலிடுவது மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமாகும். பிரிவினைக் கோரிக்கை நாடு முழுவதையுமே அழிக்கும் நஞ்சு என்பதை உணருங்கள்." ('செங்கோல்' 22-4-62)

தமிழ்நாடு தனி நாடாக ஆகக் கூடாது என்பதற்கு ம.பொ.சி கூறும் அறிவுரைகள் நியாயமானவைகளா, நாடு பிரிந்தால் அந்த நாட்டை சேர்ந்தவர்களை உலகில் உள்ள எல்லா நாட்டவரும் அடித்துத் துரத்தி விடுவார்களா? உலக வரலாற்றில் பல நாடுகள் பிரிந்துள்ளன. அந்த நாட்டவர்களை ம.பொ.சி கூறுவதுபோல் மற்ற நாட்டினர் அடித்துத் துரத்தினார்களா? நீங்கள் தான் தமிழ் நாடு தனிநாடு வாங்கி விட்டீர்களே உங்கள் நாட்டுக்கே ஓடி விடுங்கள் என்று துரத்தி விடுவார்களா? என்ற கேள்வியைத் தமிழ்த் தேசியம் பேசும் ம.பொ.சி. அன்பர்களுக்கே விட்டு விடுகிறேன். தோழர் சுப.வீரபாண்டியன் 'பெரியாரின் இடதுசாரி தமிழ் தேசியம்' என்ற நூலை வெளியிட்டபோது அவர் ம.பொ.சி.யின் சில கருத்துகளை கூறி அவரை வலதுசாரி (மதவாத) தமிழ்த் தேசியர் என்று குறிப்பிட்டிருந்தார். அப்போது பெ.மணியரசனும், இராசேந்திர சோழனும் வானத்துக்கும் பூமிக்கும் எகிறி எகிறி குதித்தார்கள். இப்போதும் அப்படியே தான் உள்ளார்கள். இப்போது நான் கூறுகிறேன் ம.பொ.சி. தமிழ்த் தேசியத் தலைவரல்ல அவர் இந்திய தேசிய வாதிதான் என்பதற்கு அவருடைய எழுத்துகளிலிருந்தே ஆயிரம் பக்கங்களுக்கு மேல் எடுத்துக் காட்ட முடியும்.

**வாலாசா வல்லவன்**

ம.பொ.சியின் கொள்கை இந்து - இந்தி- இந்தியர் என்பதே!

22.10.1962 'செங்கோல்' இதழில் தீபாவளி வாழ்த்து கூறிய ம.பொ.சி. "தீபாவளி திருநாள், பாரத மக்களின் மிகப்பெரும்பாலேருக்கு இன்ப மூட்டும் நன்னாள். முப்பது கோடிக்கு மேற்பட்ட மக்கள் எல்லோரும் 'ஒரு குலம்' என்றெண்ணி உணர்ச்சி பூர்வமாக ஒன்றுபடும் நன்னாள்".

"தீபாவளி போன்ற பண்டிகைகள் தோன்றியிரா விடில்; பாரத மக்களிடையே இன்றுள்ள, அற்ப ஒருமைப்பாடும் இருந்திருக்க முடியாது. ஆகவே இதனை ஒரு தேசியத் திருநாளாகவே கருத வேண்டும். வாழ்க பாரதம்" அதோடு விடவில்லை அவர், அக்பர் அரண்மனையில் தீபாவளி கொண்டாடப்பட்டதாம். இப்படியெல்லாம் அவருடைய இந்துத்துவ ஆராய்ச்சி செல்கிறது.

21-11-62 இல் சென்னை வானொலில் பேசிய ம.பொ.சி, "தமிழ் பெருமக்களே! நாம் தமிழராயினும் பிறந்த நாட்டால் நாம் எல்லோரும் இந்தியர். இந்தியா நம் தாய்த் திரு நாடு, நாம் அதன் புதல்வர்கள். இந்த உண்மையை மதிமாறி துறந்தால், அன்றே நாம் அழிந்தோம். வாழ்க நேரு! வெல்க பாரதம்!" ('செங்கோல்' 25.11.62)

8.11.62 'செங்கோல்' தலையங்கத்தில் "நேரு வேண்டாம் என்றால் வேறு யார்?" என்று தலையங்கம் எழுதினார். நேருவை விட்டால் நமக்கு வேறு தலைவர் யாரும் இல்லை என்பதை முழு பக்கம் எழுதி உள்ளார்.

15.5.55 'செங்கோல்' தலையங்கத்தில் "மொழி வேற்றுமை காரணமாக, இந்திய சமூகத்தினரிடையே பிளவு தோன்றக் கூடாது என்கிறார் நேரு, அதை அப்படியே ஏற்றுக் கொள்கிறோம். 'பிளவு தோன்றினால், பெற்ற விடுதலைக்கு கேடு நேரும்' என்றும் அதிலும் நமக்கு அய்யமில்லை அங்கீகரிக்கிறோம்." இப்படி எழுதும் ம.பொ.சிக்கு தமிழரசு கழகம் எதற்கு காங்கிரசிலே இணைந்து விட்டிருக்கலாமே. இவருக்கு ஆசை இருந்தது காங்கிரசிலே தொடர்ந்து இருக்க வேண்டுமென்று. ஆனால் தமிழ்நாடு காங்கிரசுகாரர்கள் இவரை வெளியே துரத்திவிட்டு சேர்க்க மறுத்து விட்டார்கள்.

இந்திய கலாச்சாரத்தை வற்புறுத்தும் ம.பொ.சி, "உணர்ச்சி பூர்வமான தேசிய ஒருமைப்பாடு வளர வேண்டும் இந்திய கலாச்சாரம் என்பது பல்வேறு கலாச்சாரங்களின் கூட்டுப் பொருளாகும். ஆரியக் கலாச்சாரம், திராவிடக் கலாச்சாரம், அராபியர் கலாச்சாரம், ஆகியவற்றின் கலப்பே இந்திய கலாச்சாரம். பிற கலாச்சாரத்தினால், ஒரு கலாச்சாரம் அழிந்து விடுகிற தென்றால் அது கலாச்சாரமே அல்ல.... ஆரியக் கலாச்சாரம், திராவிடக் கலாச்சாரம் உண்டு" என்கிறார் ம.பொ.சி

ஆனால் அவரது கடைசி சீடர் பா.குப்பன் "திராவிடம் ஆரியம் என்பதெல்லாம் பொய் திட்டமிட்ட கட்டுக்கதை" என்கிறார்.

"நாம் தமிழினத்தவராக இருப்பினும் இந்திய சமுதாயத்தினராகவும் இருக்கிறோம். இந்த பிணைப்பு அல்லது இணைப்பு எந்த சக்தியாலும் அழிக்க முடியாதது ஆகும்" (8.7.62 அன்று தஞ்சை அரண்மனையில் மத்திய அமைச்சர் தலைமையில் நடைபெற்ற இந்திய கலாச்சார விழாவில் ம.பொ.சி பேசியது. ('செங்கோல்' 22.7.62) தேசிய ஒருமைப்பாடும் தமிழின உரிமையும் என்ற தலைப்பில் ம.பொ.சி 4.10.62 'செங்கோல்' இதழில் தலையங்கம் எழுதியுள்ளார்.

"இந்தியா ஒரே நாடு, இதனை, இந்தியாவின் இயற்கை அமைப்பே எடுத்துக் காட்டும் இந்தியாவின் எல்லைகள் வடக்கில் இமயமலை. தெற்கில் குமரி முனை. கிழக்கில் வங்களாக்குடாக் கடல். மேற்கில் அரபிக்கடல். இந்த இயற்கை அமைப்பு **இந்தியா ஒரே நாடாக இருப்பதற்கென்றே இறைவன் படைத்ததாகும். அதனால்தான் சேதமில்லாத இந்துஸ்தானம் என்றார் பாரதி. இந்தியா ஒரே நாடு என்ற உணர்ச்சி குமரிமுதல் இமயம் வரை பரந்து விரிந்த பாரத மக்களிடையே தொன்று தொட்டே இருந்து வருகிறது.**"

ஆங்கிலேயன் இந்த நாட்டை விட்டு 1947இல் வெளியேறிய போது 562 குறுநில மன்னர்கள் ஆண்டு கொண்டிருந்தனர். இந்தியா என்ற ஒரு நாடு வரலாற்றில் என்றுமே ஒரே நாடாக இருந்ததே இல்லை. ஆனால் ம.பொ.சி கூறுகிறார் தொன்றுதொட்டே இந்தியா ஒரு நாடாக இருந்தது என்று. இது எவ்வளவு பெரிய பொய்? வரலாற்று மோசடி என்பதை தமிழ்த் தேசியம் பேசுவோர் உணரவேண்டும்.

17.1.63 அன்று கன்னியாகுமரி விவேகானந்தர் பாறையில் சிலை அடிக்கல் நாட்டு விழாவில் பேசிய ம.பொ.சி. "நான் ஒரு இந்துவாக இருப்பது குறித்து வருத்தமோ வெட்கமோபடவில்லை. மாறாக மாபெரும் கலாச்சாரப் பாரம்பரியத்தை சார்ந்தவன் என்பதற்காகப் பெருமைப்படுகிறேன். ஒரு இந்துவாக மட்டுமல்லாமல், தேச பக்தியுடைய இந்தியனாகவும் இந்தக் கூட்டத்தில் பேசுகிறேன். நாம் இந்தியர் இந்தியா நம் தாய் நாடு என்பதை மறந்து விடக் கூடாது" என்றார் ('செங்கோல்' 27-1-63)

இந்தியைப் பற்றி ம.பொ.சியின் கருத்து: "தனித் தமிழ்நாடு கோருவோர் இந்தியை அடியோடு வெறுக்கலாம். அவர்களின் நிலை வேறு. இந்தியாவின் அய்க்கியத்தை ஏற்பவர்களாகிய நாம் (தமிழரசு கழகத்தினர்) இந்தியை அடியோடு புறக்கணிக்க முடியாது. தமிழக மக்கள் இந்தி பயிலத்தான் வேண்டும். குறைந்தபட்ச தேர்வுக்குரிய மதிப்பெண் பெறவேண்டும் என்ற நிலையில் பாடத்தில் இந்தி இடம் பெறவேண்டும்" ('செங்கோல்' 3-3-63)

ம.பொ.சி. இந்து, இந்தி, இந்திய வெறியர் அவர் தமிழ்த் தேசியவாதியே அல்ல. தமிழ் பயிற்று மொழி, தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழிக்காக போராடினால் மட்டும் போதாது. தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் அவர் இந்திய தேசியத்திற்கு ஆதரவாகவே இருந்தார். தமிழின விடுதலைக்கு எதிராகவே இருந்தார். அவர் ஒரு இந்திய தேசியவாதியே ஆவார்.

பெரியார் 1938 முதல் தமிழ்நாடு தமிழருக்கே என்று போராடி வந்தார். அவர் சிறையிலிருந்த போது நீதிகட்சியின் தலைவராக 1938 டிசம்பர் 31ஆம் நாள் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் சிறையில் இருந்து வெளியே வந்த பிறகு நடைபெற்ற நீதிகட்சி செயற்குழுவில், நீங்கள் தமிழ்நாடு தமிழருக்கே என்றால் நாங்கள் எங்கே போவது என்று நீதிக் கட்சியில் இருந்த தெலுங்கர்களும் மலையாளி களும் கேட்டார்கள், அதனால் தான் அந்தக் கோரிக்கை திராவிட நாடு திராவிடருக்கே என்று மாற்றப்பட்டது. திராவிட நாடு என்பது ஒரே நாடல்ல நான்கு நாடுகள் சேர்ந்த ஒரு கூட்டமைப்பு என்று அப்போதே விளக்கப்பட்டது. இன்றைக்கு தமிழ்த் தேசியர்களால் உயர்த்திப் பிடிக்கப்படும் நீதிக்கட்சியை சேர்ந்தவர்களான கி.ஆ.பெ. விசுவநாதம் அப்போது நீதிக்கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தார். அவர் மறுப்பு சொல்ல வில்லை. 24, 25-8-1940இல் திருவாரூரில் நடைபெற்ற நீதிகட்சி இரண்டு நாள் மாநாட்டில் திராவிட நாடு பிரிவினை தொடர்பான பல தீர்மானங்கள் இயற்றப்பட்டன.

அந்த மாநாட்டில், திராவிட நாடு பிரிக்கப்பட திட்டங்கள் வகுக்க ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழுவில் கி.ஆ.பெ. உறுப்பினராக இருந்தார்.

இன்றைக்கு அண்ணல் தங்கோவின் பெயரன் அருள் செல்வனால் அறிமுகப்படுத்தப்பட்டு தமிழ்த் தேசிய வாதிகள் மிகப் பெரியத் தமிழ்த் தேசிய வாதியாக உயர்த்திப் பிடிக்கப்படும் அண்ணல் தங்கோ. அந்த மாநாட்டில் முக்கிய தீர்மானத்தை முன்மொழிந்தார்.

"வரவிருக்கின்ற சென்சஸ் கணக்கெடுப்பின் போது திராவிட மக்கள் தங்களை 'திராவிடர்கள்' என்று பதிவு செய்ய வேண்டும். மதம் என்ன என்று கேட்டால் "திராவிட சமயம்" என்று சொல்ல வேண்டுமே தவிர இந்து சமயம் என்று சொல்லக் கூடாது" என்ற தீர்மானத்தை முன்மொழிந்தவர் அண்ணல் தங்கோ வழிமொழிந்தவர் வாணியம்பாடி விசுவநாதம் ஆவர் (ஆதாரம்: குடிஅரசு 1-9-1940 பக்கம் 12).

**(தொடரும்)**


**தோழர்களே!**

**'புரட்சிப் பெரியார் முழக்கம்' உறுப்பினர் சேர்க்கையை முடித்து விட்டீர்களா?**

**'புரட்சிப் பெரியார் முழக்கம்' வங்கிக் கணக்கு**

கரூர் வைஸ்யா வங்கி,
அடையாறு கிளை
'கரண்ட்' அக்கவுண்ட்.
எண் : 1257115000002041
IFSC KVBL0001257

DATE OF PUBLICATION 11.02.2016 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# சிறை–சீர்திருத்தவே, தண்டிப்பதற்கல்ல!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

ஒரு வழக்கு முடிந்துவிட்டால் மீண்டும் அதை மறு விசாரணைக்கு எடுத்துக் கொள்கின்ற முறை நடைமுறையில் இல்லை. அமெரிக்காவில் 25 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருக்ககூடிய சிறைவாசிகளுக்கு ஆதரவாக ஒரு சிறு ஆதாரம் கிடைத்தாலும் அதன் அடிப்படையில் அவர்கள் விடுதலை செய்யப்படுவதை அண்மையில் நாம் படித்தோம். தவறாக புரிந்து கொண்டு அவர்கள் கைது செய்யப்பட்டுவிட்டார்கள் என்பதை அங்குள்ள அரசாங்கங்கள் உண்மையை புரிந்து கொண்டு அவர்களை விடுதலை செய்வார்கள்.

ஆனால் நம் நாட்டில் அந்த முறை இல்லை, அப்படிப்பட்ட ஒரு ஆதாரம் நீண்ட கால சிறை வாசிகளுக்கு ஆதரவாக கிடைக்குமேயனால் அதை மக்கள் பிரதிநிதிகளாக ஆட்சி செய்து கொண்டிருப்பவர்கள் அதனை கருத்தில் கொண்டு விடுதலை செய்வதற்கு மாநிலத்திற்கு 161வது பிரிவையும் மத்திய அரசுக்கு 72ஆவது பிரிவையும் அளித்து அரசியல் அமைப்பு சட்டம் அதிகாரங்களை வழங்கியுள்ளது. நாம் அதைத்தான் கேட்கின்றோம். அந்த அதிகாரத்தை பயன்படுத்தி நீண்டகால சிறைவாசிகளையும், அதுபோல் ராஜீவ்காந்தி வழக்காக இருந்தாலும் அல்லது மற்ற வழக்காக இருந்தாலும் அவர்களை உடனடியாக விடுதலை செய்யுங்கள். அரசியல் அமைப்பு சட்டம் தந்திருக்கின்ற அதிகாரங்களை பயன்படுத்துங்கள் என்ற கோரிக்கையைத் தான் வைக்கின்றோம். நீண்ட கால சிறை வாசிகளை பற்றி நாம் பேசுகின்றோம். 10 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருக்கின்ற சிறைவாசிகள் பலருக்கு பலமுறை அரசால் தண்டனை குறைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அப்போதெல்லாம் இத்தகைய நடைமுறை எல்லோருக்கும் உண்டு என்று சொல்லியிருக் கிறார்கள். 1997இல் எந்த தடையும் இல்லாமல் தண்டனை குறைப்பு வழங்கினார்கள்.

சிறையில் இருந்து விடுமுறைக்கு போய்விட்டு ஒருநாள் காலதாமதமாக வந்தாலும் 224ஆவது பிரிவின் கீழ் ஒரு வழக்கை பதிவு செய்து அவர்களுக்கு முன்விடுதலை இல்லை என்கிறார்கள். இப்படி சின்ன சின்ன காரணங்களுக்கு முன்விடுதலை இல்லை என்று சொல்வதோடு மட்டுமல்லாமல் அவர்களை பயங்கரவாதிகளாக சிலர் காட்டுகிறார்கள். ராஜீவ் வழக்கில் பேரறிவாளன் உள்ளிட்டவர்கள் கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக சிறையில் இருந்துவிட்டார்கள். சிறை என்பது மக்களை திருத்துவதற்கே தவிர அவர்களை பழிவாங்குவதற்கு அல்ல குற்றவாளிகள் என நேரடியாக கருதப்படுவோர் தங்களை மாற்றிக் கொண்டு இந்த சமுதாயத்தில் தொடர்ந்து வாழ்வதற்கும் தன்னுடைய நல்ல ஆற்றல்களை சமுதாயத்தின் வளர்ச்சிக்காக பயன்படுத்தவேண்டும். காந்தியை கொலை செய்த கோபால் கோட்சே போன்றவர்கள் எல்லாம் 15 ஆண்டுகளில் வெளிவந்துவிட்டனர். ஆனால் ராஜீவ் கொலை வழக்கில் பொய்யான குற்றச்சாட்டின் மீது சிறையில் இருப்பவர்கள் இன்றுவரை வெளிவரவில்லை.

காந்தி கொலை வழக்கில் குற்றவாளிகள் வெளிவந்தபோது இந்த நாட்டில் யாரும் பயங்கரவாதிகள் வெளியே வந்துவிட்டனர் என கூப்பாடு போடவில்லை. வெளியே வந்தவர்கள் காந்தி கொலையை நியாயப்படுத்திப் பேசுகிறார்கள். காந்தியை ஏன் கொலையை செய்தோம் என புத்தகம் போடுவது; நாடகங்கள் போடுவது போன்ற செயல்களில் ஈடுபட்டார்கள். அதற்கு இந்த நாட்டில் எதிர்ப்பு எதுவும் எழவில்லை. மாறாக இந்த அதிகார வர்க்கம் தங்களது வாயை மூடிக் கொண்டிருந்தது. 7 ஆண்டுகள் சிறையில் இருந்தவர்களை விடுதலை செய்தபோது 10 ஆண்டுகள் சிறையில் கழித்த சிறைவாசிகளை விடுதலை செய்வதில் இவர்களுக்கு என்ன பாகுபாடு இருக்கிறது என்று கேட்கிறோம்.

இந்திய சிறைகளில் ஒரு லட்சத்து 28 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் சிறைகளில் இருப்பதாக சொல்கிறார்கள். இதில் கல்வி அறிவு அற்றவர்கள் 40 ஆயிரம்பேர் என்று புள்ளி விபரங்கள் சொல்கின்றன. 10ஆம் வகுப்பிற்கு கீழ் படித்தவர்கள் 57ஆயிரம் பேர் உள்ளனர். ஆக இதில் 80 விழுக்காட்டிற்கு மேல் போதிய கல்வி அறிவு இல்லாதவர்கள். நீதிமன்றத்திற்கு சென்று பெரிய வழக்கறிஞர்களை வைத்து வாதிட்டு விடுதலையாக முடியாதவர்கள். அல்லது வேறு வழியில் சென்று நீதிபதிகளை கவனிக்க முடியாதவர்கள் தான் சிறையில் இருக்கிறார்கள். இவர்களை கருணையோடு கவனிக்கவேண்டும் என்றுதான் சொல்கிறோம்.

2007ஆம் ஆண்டு முன் விடுதலைபற்றி சிறைத் துறை ஓர் அறிக்கை கொடுத்தது. சிறைத் துறை தலைவர் சேகர் என்பவர் அறிக்கையில் எழுதுகிறார். 15ஆம் தேதி விடுதலைக்கு 10ம் தேதி கடிதம் எழுதுகிறார். ஜாகீருக்கும் அபுவிற்கும் முன்விடுதலை கொடுக்கக்கூடாது என்று எழுதுகிறார். இவர்கள் எல்லாம் வகுப்புவாத கலவரங்களில் ஈடுபட்டவர்கள். அதனால் கொடுக்கக்கூடாது என்று காரணம் கூறுகிறார். 10ஆம் தேதி கடிதம் எழுதி 12ஆம் தேதி உள்துறை செயலாளர் மாலதி அவர்கள் அக்கடிதத்தை ஏற்றுக்கொண்டார். அப்போதுதான் முதன்முறையாக வகுப்பு கலவரங்களில் இருப்பவர்களுக்கு முன் விடுதலையோ தண்டனை குறைப்போ இல்லை என்று சொன்னார்கள்.

நாம் கேட்கிறோம். எல்லோரும் சட்டத்திற்கு முன் சமம் என்றால் கொலை செய்தவனை துண்டு துண்டு கூறாக வெட்டி போட்டவர்களை விடுதலை செய்யும்போது ஏதோ ஓர் அற்ப காரணங்களைக் கண்டுபிடித்து விடுதலையை தடுப்பது என்ன நியாயம் ? அரசியல் சட்டம் அனைவருக்கும் சமத்துவம் கொடுக்கிறது என்று பேசுகிறவர்கள் மதத்தின் பேரால் பிரிவினை காட்டக்கூடாது என்று சொல்கிறவர்கள், அதற்கு மாறாக ஏன் இஸ்லாமியர்கள் மீது மட்டும் இந்த காரணங்களை சொல்லி நீண்டகாலமாக சிறையிலேயே வைத்திருக்கிறார்கள் என்பதுதான் நமது கேள்வி.

எனவே இந்த ஆர்பாட்டத்தின் வழியாக அரசிடம் எழுப்பப்பட்டிருக்கின்ற கோரிக்கைகள் ஜனநாயக உரிமைகளை கேட்கின்ற கோரிக்கைகளாகும். இது அரசின் காதுகளுக்கு செல்லவேண்டும். ஜனநாயக உணர்வுகளை, மக்களின் உணர்வுகளை வெளிபடுத்துகின்ற மக்களின் நியாயமான கோரிக்கைகளை புரிந்து கொள்ள வேண்டும். நாட்டில் வன்முறை வந்துவிடக்கூடாது; மக்கள் வன்முறை பக்கம் சென்றுவிடக் கூடாது; வன்முறை வழியில் இளைஞர்கள் போய் கொண்டிருக்கிறார்கள் என்று வருந்துபவர்கள் இத்தகைய ஜனநாயக கோரிக்கைகளுக்கு செவி சாய்த்தாலே அவர்கள் வன்முறை பக்கம் போக மாட்டார்கள்.

ஏற்கனவே இருந்த அரசு மட்டுமல்ல இப்போது அதிகாரத்தில் இருக்கின்ற அரசும் இப்போது அவர்களை நடத்துகின்ற முறைகளை பார்த்து நாம் அழுத்தமாக பேச வேண்டியிருக்கிறது. இந்த நியாயமான கோரிக்கைக்கு எங்களுடைய முழுமையான ஆதரவினை தெரிவிப்பதோடு, தொடர்ந்து நடைபெறும் போராட்டங்களில் எங்களை எப்போதும் இணைத்துக் கொள்வோம் என்ற உறுதியினை கூறி இந்த போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கில் கலந்து கொண்டிருக்கின்ற உங்களின் குரல் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எங்களுக்கு ஏற்படுகிறது'' என்று கூறினார்.

ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழக மதுரை மாவட்ட செயலாளர் மணிகண்டன், மதுரை தளபதி, மாவட்ட தலைவர் செந்தில், திருவாரூர் மாவட்ட செயலாளர் இரா.காளிதாசு நீடா ஒன்றிய செயலாளர் செந்தமிழன் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

**செய்தி மன்னை இரா.காளிதாசு**

## வினா... விடை...!

- *தமிழக பா.ஜ.க. தலைவராக தமிழிசை தொடர்ந்து நீடிப்பார்.* **– செய்தி**

  **‘மேடம்’ பா.ஜ.க. தலைவராகக் கூட முடியும். ஆனால், அதன் தந்தை அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.சில் ஒரு உறுப்பினராகக்கூட முடியாது.**

- *வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்த ஊழல் புகாரில் திருப்பதி தேவஸ்தான அதிகாரி வீட்டில் போலீசார் சோதனை.* **– செய்தி**

  **இதுவே எங்க தமிழ்நாடாக இருந்திருக்குமானால் ‘ஏழுமலையானிடம்’ முன் அனுமதி பெறாமல் நடவடிக்கை எடுக்க முடியாது என்று சட்டம போட்டு தடுத்திருப்பாங்கய்யயா....**

- *சீதையை காட்டிலேயே தங்குமாறு காரணமின்றி தண்டித்த இராமன், இலட்சுமணன் மீது நடவடிக்கைக் கோரி பீகார் நீதிமன்றத்தில் சந்தன்குமார் என்பவர் தாக்கல் செய்த வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.* **– செய்தி**

  **‘இராமனு’க்கு நோட்டீசு அனுப்பி விளக்கம் கேட்காமலே தள்ளுபடி செய்யறது எந்த ஊரு நியாயங்க... ‘இராம’ பகவானை இப்படியெல்லாம் அவமரியாதை செய்யாதீங்க...**

- *அந்த காலத்து ‘அக்கிரகாரங்களை’ ‘தொல்பெருமை’ப் பகுதிகளாக அறிவித்து புதுப்பிக்கிறது கேரள அரசு.* **– ‘இந்து’ செய்தி**

  **ஆனா,சேரிகள் மட்டும் காலாகாலத்துக்கும் ஒதுங்கியே கிடக்கும்! அப்படித் தானே?**

- *கருத்து சுதந்திரத்தில் ஆட்சி அதிகாரங்கள் தலையிடக் கூடாது.* **– அமெரிக்காவில் நடிகர் கமல்ஹாசன் பேச்சு**

  **இதைப் பேசுவதற்கு இங்கேயிருந்து அமெரிக்கா வரை போக வேண்டியிருக்கு, பாருங்க...**

- *பா.ஜ.க. ஆதரிக்கும் அணியே ஆட்சி அமைக்க முடியும்.* **– தமிழக பா.ஜ.க.**

  **தேர்தல் முடிந்து, ஆட்சி அமைக்கும் கட்சிக்கு அந்த நேரத்தில் பா.ஜ.க. ஆதரவு தரும்னு அறிவிப்பாங்க போலிருக்கு!**

## காந்தி படுகொலை ஆவணப்படம் வெளியீடு

காந்தி படுகொலை குறித்து ஆவணப் படம் வெளியீடும், அதன் ‘உண்மை-பின்னணி’ என்ற தலைப்பில் கருத்தங்கமும் எஸ்.டி.பி.அய். கட்சி சார்பில் 3.2.2016 அன்று மாலை சென்னை எழும்பூர் இக்சா அரங்கில் சிறப்புடன் நடைபெற்றது. கட்சியின் மாநில தலைவர் கே.கே.எஸ்.எம். தெகலான் பாகவி ஆவணப்பட குறுந்தகட்டை வெளியிட பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பெற்றுக் கொண்டார். நிகழ்வில் கட்சியின் மண்டல செயலாளர் ஏ.கரீம், பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா, பொதுச் செயலாளர் சேக் முகம்மது அன்சாரி ஆகியோர் பேசினர். விடுதலை இராசேந்திரன், ஒரு மணி நேரம் சிறப்புரையாற்றினார். அரங்கம் முழுதும் கூட்டம் நிரம்பி வழிந்தது. ஏராளமாக பெண்களும் பங்கேற்றனர்.

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

(தலைமைக் கழகப் பேச்சாளர்), கிருட்டிணமூர்த்தி (ஈரோடு தெற்கு மாவட்டப் பொருளாளர்), தமிழ் செல்வன் (தமிழ்நாட்டு மக்கள் இயக்கம்), செல்லப்பன் (ஈரோடு தெற்கு மாவட்ட தலைவர் தி.வி.க.), நாத்திக சோதி (ஈரோடு வடக்கு மாவட்ட தலைவர் தி.வி.க.), வேணுகோபால் (ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் தி.வி.க.), சென்னிமலை செல்வராசு (ஈரோடு தெற்கு மாவட்ட அமைப்பாளர் தி.வி.க.), திருமுருகன் (ஈரோடு மாநகரத் தலைவர் தி.வி.க.), நிவாசு (ஈரோடு வடக்கு மாவட்ட அமைப்பாளர் தி.வி.க.), சத்தியமூர்த்தி (ஈரோடு மாநகரத் துணைத் தலைவர் தி.வி.க.), தமிழ் இராசேந்திரன் வழக்கறிஞர் ஆகியோரின் கண்டன உரையைத் தொடர்ந்து மத்திய அரசைக் கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டது. இறுதியில் தோழர்.ப. குமார் (ஈரோடு தெற்கு மாவட்ட அமைப்பாளர்) நன்றியுரை கூறினார்.


**பேராவூரணியில்** – திராவிடர் விடுதலைக்கழகத்தின் சார்பில் கண்டன ஆர்பாட்டம் பேராவூரணி அண்ணா சிலை அருகில் பிப்ரவரி 2ம் தேதி மாலை 5 மணியளவில் திராவிடர் விடுதலைக்கழக தஞ்சை மாவட்ட அமைப்பாளர் சித.திருவேங்கடம் தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தின் நோக்கங்களை விளக்கி திராவிடர் விடுதலைக்கழக திருவாரூர் மாவட்ட செயலாளர் இரா.காளிதாசு, தஞ்சை மாவட்ட முன்னாள் அமைப்பாளர் பாரி, திராவிடர் விடுதலைக்கழக பாடகர் பள்ளத்தூர் நாவலரசன், தமிழக மக்கள் புரட்சிக்கழக மாவட்ட செயலாளர் வி.சி.முருகையன், மெய்சுடர் இதழ் ஆசிரியர் வெங்கடேசன், தமிழக மக்கள் புரட்சிக் கழக ஒன்றிய செயலாளர் வீரக்குடி ராஜா, பொதுச் செயலாளர் ஆர்.நீலகண்டன், மனிதநேய மக்கள் கட்சி அப்துல்சலாம், நகரச் செயலாளர் அப்துல்லா, ஆகியோர் கண்டன உரையாற்றினர். இறுதியாக திராவிடர் விடுதலைக் கழக பரப்புரை செயலாளர் தூத்துக்குடி பால்பிரபாகரன் கண்டன உரையாற்றினார். (உரை அடுத்த இதழில்)

## சென்னை அமைந்தகரையில் கழகம் எடுத்த பொங்கல் விழா

சென்னை அமைந்தகரை திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் தோழர் வேலு முன்னெடுத்து நடத்திய பொங்கல் விழா சிறப்புடன் நடந்தது. விழாவில் மறைந்த நடிகர் சிவாஜி, ‘பராசக்தி’ திரைப்படத்தில் பேசிய நீதிமன்றக் காட்சி வசனத்தினை கழகத் தோழர் ரவி மகன் ஆசிக் சிறப்பாக பேசினார். புதுச்சேரி முரசு கலைக் குழுவினரின் பறையாட்ட இசை மற்றும் நமது தோழர்களின் துள்ளாட்டம் நடைபெற்றது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 12th February 2016

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



# புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2047 | பிப்ரவரி 18, 2016 | புரட்சி 15 | முழக்கம் 5 | விலை: ரூ.3.00

## தேச பக்தியைக் காக்க ‘இரும்புத் தடி–124ஏ’

தேச பக்தர்கள், தேச பக்தியைக் காப்பாற்ற இரண்டு ஆயுதங்களைத் தூக்கி இருக்கிறார்கள். ஒன்று இரும்புத் தடி; மற்றொன்று தேசத் துரோக சட்டம்!

திலீபன் மகேந்திரன் என்ற த.பெ.தி.க.வைச் சார்ந்த இளைஞர், தனது முகநூலில் தேசியக் கொடியை எரிப்பது போல் ஒரு படத்தை வெளியிட்டாராம். அவர் பொது இடத்தில் அதைச் செய்ய வில்லை. ‘இந்திய தேசியத்தின்’ துரோகத்துக்கு தனது எதிர்ப்பாக வெளியிட்ட ஒரு போராட்ட வடிவம் அவ்வளவுதான்! உடனே ‘தேச பக்தி’ பீறிட்டுக் கிளம்பிய சென்னை புளியந் தோப்பு காவல்துறை, தேசபக்திக்காக இரும்புத் தடியை தூக்கியது. அந்த இளைஞரின் கை விரல்களை உடைத்து, ‘தேச பக்தி’யையும் சட்டத்தை மதிக்கும் தனது ‘மாண்பையும்’ கேவலமாக வெளிப்படுத்தியது.

டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில், ‘தேசபக்தி’யைக் காப்பாற்ற கன்யாகுமார் என்ற பீகாரைச் சார்ந்த மாணவனை ‘தேசத் துரோக’ வழக்கில் உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உத்தரவின் கீழ் கைது செய்திருக் கிறார்கள். அப்சல் குரு தூக்கிலிடப்பட்ட நாளை துக்க நாளாக அனுசரித்தார் களாம்; அது தேச துரோகமாம்! அப்சல் குரு, ‘தீவிரவாத’ இயக்கத்திலிருந்து விலகி, இந்திய இராணுவத்திடம் தாமாக முன் வந்து சரணடைந்து, அமைதியாக வாழ்க்கையை நடத்த விரும்பியவர்! நாடாளுமன்ற தாக்குதல் வழக்கில் உண்மை குற்றவாளி சிக்காததால் எவரையாவது தண்டித்தாக வேண்டும் என்பதற்காக சரணடைந்த அப்சல் குருவை ஏமாற்றி டெல்லிக்கு அழைத்து வந்து பொய் வழக்கு புனைந்து, தூக்கில் தொங்கவிட்டது, இந்திய உளவுத் துறை! தூக்கிலிடப்போகும் தகவலைக்கூட அவரை நம்பியிருந்த குடும்பத்துக்கு தெரிவிக்கவில்லை. இதைக் கண்டிப்பது தேசபக்திக்கு எதிரானதாம்! இதற்காக கன்யாகுமார் என்ற ஜவகர்லால் நேரு பல்கலை மாணவனை பிரிட்டிஷ்காரன் அறிமுகப்படுத்திய ‘124–ஏ’ தேசத் துரோகம் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் தள்ளியிருக்கிறது, பா.ஜ.க. பார்ப்பனிய ஆட்சி! இந்த மாணவர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாணவர் பிரிவான அகில இந்திய மாணவர் சம்மேளனத்தைச் சார்ந்த தோழர்.

‘இந்தியா’ என்ற ‘தேசத்து’க்கு எதிராக ஒருவர் பேசினார் என்பதற் காகவே இந்த சட்டத்தைப் பயன்படுத்தக் கூடாது என்றும், வன்முறையை தூண்டுவதற்கு அழைப்பு விடுத்தால், அல்லது பொது ஒழுங்கு சீர்குலையும் நிலை ஏற்பட்டால் மட்டுமே இந்த சட்டத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றும், உச்சநீதிமன்றமே பலமுறை எச்சரித்த நிலையிலும், இந்தச் சட்டத்தை மாணவர் மீது சர்வசாதாரணமாக ஏவி யிருக்கிறார்கள். ஆயுள் தண்டனைக்கு வழி வகுக்கும் இந்த ஆள் தூக்கி சட்டம், ஒரு மாணவரின் வாழ்வையே சிதைப் பதற்கு பயன்படுத்தி, ஆனந்தக் கூத்தாடு கிறது ‘சங்’ பரிவார் கூட்டம்!

பிரிட்டிஷ்காரன், அடிமை ‘இந்தியர்’ களை அடக்கி வைக்க கொண்டு வந்த சட்டத்தை சட்டப் புத்தகத்திலிருந்து நீக்காமல் வைத்திருக்கும் இவர்கள் தான் ‘அக்மார்க்’ தேசபக்தர்களாம்! வெட்கக் கேடு!

**(மாணவர்களிடையே கன்யாகுமார் ஆற்றிய எழுச்சி உரை உள்ளே)**

## இனிப்பு வழங்கி, கலை நிகழ்வுகளுடன் கொண்டாட்டம்

# காதலர் நாளில் ஜாதி எதிர்ப்பு உறுதி ஏற்பு

*காதலர் நாளான பிப்.14 – ஜாதி எதிர்ப்பு, பெண்ணுரிமை நாளாக கொண்டாடப்பட்டது.*

திராவிடர் விடுதலைக் கழகம் உள்ளிட்ட பெரியார் இயக்கங்கள், காதலர் நாளை ஜாதி, மதம் கடந்த காதலை வரவேற்கும் நிகழ்வாக கூட்டங்கள், கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள் நடத்தி, கடந்த சில ஆண்டுகளாக கொண்டாடி வருகிறது. ஒரு சில ‘இந்து’ மதவாத அமைப்புகளும், இஸ்லாமிய அமைப்புகளும் காதலர் நாளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. சில ‘இந்து’ அமைப்புகள் காதலர் நாளில் ‘நாய்களுக்கும் கழுதைகளுக்கும்’’ திருமணம் நடத்துவதாகக் கூறி, அநாகரிகமான போராட்டங்களை நடத்துவது வழக்கம். இதற்கு பதிலடி தரும் வகையில் கழகத் தோழர்கள் கடற்கரையில் காதல் இணையர்களுக்கு இனிப்பு வழங்கி, காதலர் நாளை ஆதரித்து துண்டறிக்கைகள் வழங்கி வந்தனர். இதனால் கடற்கரைக்கு வரும் காதல் இணையர்களை அடிப்பது துன்புறுத்துவது போன்ற மதவாத அமைப்புகளின் வன்முறைகள் கட்டுப்படுத்தப்பட்டன.

இவ்வாண்டு, சென்னை மாநகர காவல்துறை காதலர் நாளில் இத்தகைய வன்முறைகளை அனுமதிக்க முடியாது என்று எச்சரிக்கை செய்திருந்தது. எனவே காதலர் நாள் வாழ்த்து அட்டைகளை எரிக்கும் போராட்டத்துக்காக வந்திருந்த இந்து மக்கள் கட்சியைச் சார்ந்த சிலர், கண்ணகி சிலைக்கு மாலை அணிவித்து சிறப்பு வழிபாடு செய்து, ‘கற்பு ஓங்குக’ என முழக்கமிட்டு கலைந்தனர்.

திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள், மாவட்ட செயலாளர் உமாபதி தலைமையில் காலை 10 மணியளவில் கடற்கரையில் திரண்டு, காதல் இணையர்களுக்கு இனிப்பு வழங்கி, கேக் வெட்டி கொண்டாடினர். ‘பெரியாரிய பெண் விடுதலை இயக்கத்’ தோழர்களும் கழகத்தினரோடு கலந்து



கொண்டனர். ‘ஜாதி மதம் ஒழிய காதல் செய்வீர்’ என்று முழக்கங்களை எழுப்பினர்.

சென்னை பெசன்ட் நகர் ‘எலியட்ஸ்’ கடற்கரையில் காதலர் நாளை முன்னிட்டு ‘மனிதம் இணைப்போம்’ என்ற முழக்கத்தை முன் வைத்து காதலர் நாள் கலை நிகழ்ச்சிகளுடன் நடந்தது. ‘சரி நிகர்’ இயக்கம் சார்பில் நடந்த இந்த நிகழ்வில் திரைப்படக் கலைஞர் ரோகிணி, முன்னாள் துணைவேந்தர் வே.வசந்தி தேவி, பேராசிரியர்கள், அறிவியலாளர்கள், இளைஞர்கள் பங்கேற்றனர். ஜாதி-மத மறுப்புத் திருமணம் புரிந்தோருக்கு தனியார் மற்றும் பொதுத் துறைகளில் 10 சதவீத இடஒதுக்கீடு கோரியும், கவுரவக் கொலைகளை தடுக்க தமிழ்நாட்டில் தனிச் சட்டம் கொண்டு வரக் கோரியும், நிகழ்ச்சியில் வலியுறுத்தப்பட்டன. ஜாதி-மத எதிர்ப்புப் பாடல்கள், நடனங்கள் நிகழ்வில் இடம் பெற்றன. அனைவரும் ஜாதி மறுப்பு உறுதி மொழி ஏற்றனர்.

தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் காதலர் நாள், ஜாதி எதிர்ப்பு-பெண்ணுரிமை நாளாக பல்வேறு இயக்கங்களால் நடத்தப்பட்டுள்ளது.

# ஜாதிக்கு ஒரு சுடுகாடு! இது சமத்துவ நாடா?

## மயிலாடுதுறையில் எழுச்சியுடன் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டம்




நாகை மாவட்டம் வழுவூர் திருநாள் கொண்ட சேரி தலித் மக்கள் மீதான ஜாதிய அடக்கு முறைகளை கண்டித்து ஜாதிக்கொரு சுடுகாடு! ‘இது சமத்துவ நாடா?’ என்கிற தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் பொதுக்கூட்டம் நாகை மாவட்ட செயலாளர் தெ.மகேஷ் தலைமையில் எழுச்சியுடன் நடைபெற்றது.

இந்தியாவில் பிறக்கும் குடிமக்கள், பிறக்கும்போதே ஜாதி அடையாளத் துடன் தான் பிறக்கிறார்கள். நம் வாழ்வில் காணா சமரசம் உலாவும் இடமே என்று மயானத்தில் நின்று பாடுவதாக பழைய சினிமா பாடல் ஒன்று உண்டு. ஆனால் நடைமுறையில் இறந்த பிறகும் ஜாதி அடையாளம் மக்களை விடுவதில்லை. மதம் மாறினாலும் அது நிழல் எனத் தொடர்கிறது. இந்திய அரசியல் அமைப்பு சட்டமும் சமத்துவ உரிமையை அடிப்படை உரிமை என பிரகடனப்படுத்துகிறது. தலித்துகள் மீதான வன்கொடுமை தடுப்பு சட்டமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனாலும் கூட இந்தியாவில் தீண்டாமை கொடுமை பல வடிவங்களில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. திருநாள்கொண்டசேரியில் தலித் முதியவர் செல்லமுத்து மரணத்தில் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டும் பொதுப்பாதையில் உடலை எடுத்து செல்ல மறுத்து எளிய மக்கள் மீது அடக்கு முறைகளை கட்டவிழ்த்த தமிழக அரசின் செயல் என்பது வெட்கி தலைகுனியக் கூடியது. இச்செயலை கண்டித்துதான் மயிலாடுதுறையில் பொதுக்கூட்டம் சின்னகடைத் தெருவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் நாகை மாவட்ட காவல்துறையினர் பொதுக்கூட்டத்திற்கு அனுமதி மறுத்தனர். நாகை மாவட்ட நிர்வாகிகள் உடனடியாக கழக வழக்கறிஞர்கள் துரை அருண், திருமூர்த்தி மூலமாக சென்னை உயர்நீதிமன்றத்தை நாடி பொதுக்கூட்டம் நடத்துவதற்கு அனுமதி பெற்று மயிலாடுதுறை விஜயா தியேட்டர் அருகில் எழுச்சியுடன் கூட்டத்தை நடத்தினர்.

முன்னதாக வந்திருந்த அனைவரையும் நகர செயலாளர் தமிழ்வேலன் வரவேற்று உரையாற்றினார். மாவட்ட அமைப்பாளர் அன்பரசன், நகர தலைவர் நாஞ்சில் சங்கர், நகர துணை செயலாளர் நடராஜன் ஆகியோர் முன்னிலை ஏற்றனர். தொடர்ந்து விடுதலை தமிழ்புலிகள் கட்சி நாகை மாவட்ட செயலாளர் குமாரவேல், தமிழர் உரிமை இயக்கம் அய்யா சுரேஷ், குடியுரிமை பாதுகாப்புக்குழு தனவேந்திரன், திராவிடர் விடுதலைக்கழக திருவாரூர் மாவட்ட செயலாளர் இரா.காளிதாசு, கிழக்கு கடல் மக்கள் பாதுகாப்பு இயக்கம் சங்கர், ஆகியோர் கண்டன உரையாற்றினர். தொடர்ந்து எழுத்தாளர் வே.மதிமாறன், கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராஜேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் சிறப்புரையாற்றினர். தலைமைக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் இளையராஜா நன்றி கூறினார். பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு மாணவர்கழக மாநில அமைப்பாளர் பாரி சிவக்குமார், தஞ்சை மாவட்ட முன்னாள் அமைப்பாளர் பாரி, சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் துரை அருண் உட்பட ஏராளமான நிர்வாகிகள் பங்கேற்றனர்.

**செய்தி மன்னை இரா.காளிதாசு**

**தலையங்கம்**

## உரிமைக் கொடி உயர்த்தும், பெண்கள்!

இந்து கோயில்களில் நுழைவதற்கே ‘சூத்திரர்’, ‘பஞ்சமர்’ அனைவருக்கும் பார்ப்பனர்கள் தடை போட்ட காலம் ஒன்று இருந்தது. அதுவே ‘ஆகம விதி’ – அதுவே தெய்வீக நடைமுறை என்று இறுமாப்பு பேசினர். இந்த ‘ஆகமம்’, ‘அய்தீக’ பூச்சாண்டிகளைப் புறந்தள்ளிவிட்டுத் தான் பெண்கள் உள்பட அனைத்துப் பிரிவினரும் கோயில்களுக்குள் நுழைந்து வழிபடவும் கோயில் ‘திருக்குளங்களில்’ நீராடவும் உரிமை வழங்கப்பட்டது. அதுதான் 1947ஆம் ஆண்டின் 5ஆவது சட்டமாகிய ‘ஆலய பிரவேச உரிமை’ சட்டம். ‘ஆகமம்’, ‘அய்தீகத்துக்கு’ எதிராக அப்படி ஒரு சட்டம் வராதிருக்குமானால், இப்போது கும்பகோணம் ‘மகாமகத்தில்’ முழுக்குப் போடும் உரிமை பார்ப்பனர்களுக்கு மட்டுமே இருந்திருக்கும். சைவ மடாதிபதிகளுக்கே கூட அந்த உரிமை கிடைத்திருக்காது.

கோயில் நுழைவு உரிமை கிடைத்தாலும்கூட கோயில் ‘கருவறை’க்குள் கடவுளை நேரடியாக வணங்குவதற்கோ அல்லது உரிய பயிற்சி பெற்று அர்ச்சகராவதற்கோ ‘சூத்திரர்’, ‘பஞ்சமர்’ மற்றும் பெண்களுக்கு உரிமை கிடையாது என்று கூறி, பார்ப்பனர்கள் தங்கள் சமூக மேலாதிக்கத்தை விட்டுத் தர மறுக்கிறார்கள். அதற்கு உச்சநீதிமன்றங்களும் அரசியல் சட்டங்களின் உணர்வுகளுக்கு எதிராக அண்மையில் தீர்ப்புகளை வழங்கின.

ஆனாலும், பார்ப்பனியம் திணிக்கும் பாகுபாடுகளுக்கு எதிரான இந்தப் போராட்டம் ஓய்ந்து விடாது; தொடரவே செய்யும் என்பதை வரலாறு நிரூபித்துக் கொண்டிருக்கிறது. ‘சூத்திரர்’, ‘பஞ்சமர்’களைத் தொடர்ந்து சமூகத்தின் சரி பகுதி எண்ணிக்கையாக உள்ள பெண்கள், தங்கள் மவுனத்தைக் கலைத்து போர்க்கொடியை உயர்த்தத் தொடங்கிவிட்டார்கள்.

சபரிமலை அய்யப்பன் கோயிலுக்குள் 10 வயது முதல் 50 வரையிலான பெண்கள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதை எதிர்த்து பெண்கள் அமைப்பினர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். வழக்கை விசாரித்து வரும் உச்சநீதிமன்றத்தின் நீதிபதிகள் தீபக் மிஸ்ரா, பி.ஜி. கோஸ், என்.வி.இரமணா ஆகியோரடங்கிய அமர்வு, இந்த வழக்கு விசாரணையின் போது, திருவாங்கூர் தேவஸ்தான போர்டு வழக்கறிஞரிடம் பல்வேறு கேள்விகளை எழுப்பியிருக்கிறது.

- ‘ஆன்மிகம்’ ஆண்களுக்கு மட்டுமே உரித்தானதா?
- பெண்கள் ‘ஆன்மிக’ எல்லையை எட்டுவதற்கு அருகதையற்றவர்களா?
- வேதம், உபநிடதம், கீதை, ஸ்மிருதிகள் – பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை வலியுறுத்துகிறதா?

– என்ற கேள்விகளை உச்சநீதிமன்ற நீதிபதிகள் எழுப்பியுள்ளனர். இந்த வினாக்களையும் கடந்து உச்சநீதிமன்றம், முன் வைத்துள்ள சில கருத்துகள் சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும்.

“சனாதன தர்மம்” என்பது புனிதமானது; அந்த ‘தர்மத்தில்’ ஜாதி பாகுபாடுகளுக்கோ, பெண், ஆண் பாகுபாடுகளுக்கோ இடமில்லை. ‘சனாதன தர்மம்’ அனைவருக்கும் பொதுவானது. கோயில்கள், பொதுச் சொத்துக்களாக கருதப்பட வேண்டியவை. எனவே அரசியல் சட்டங்கள் வகுத்துள்ள சட்டகத்துக்குள்ளேயே அது செயல்பட முடியும் . கோயில் நிர்வாகம் தொடர்பாக விதிகளை நீங்கள் உருவாக்கலாம். (அதாவது, கோயில் திறக்கப்படும் நேரம் போன்றவை) ஆனால், விதிகள் பாகுபாடின்றி அனைவருக்கும் பொதுவாக இருத்தல் வேண்டும். இந்த விதிகளில் பெண்களுக்கு பாகுபாடு காட்டலாமா என்பதே இப்போது நடக்கும் விவாதம்.

பெண்களுக்கான அனுமதியை மறுத்து வாதாடுவதற்கு முன் வழக்கறிஞர்களாகிய நீங்கள் ஸ்மிருதி, ஸ்ருதி, உள்ளிட்ட மத சாஸ்திரங்களை படித்து விட்டு வந்து வாதாடுங்கள். இந்த நீதிமன்றம் அரசியல் சட்டம் வகுத்துள்ள விதிகள்; பெண்களுக்கு எதிராக முன் வைக்கப்படும் மத ‘ஆச்சாரங்கள்’ இரண்டையும் சேர்த்து பரிசீலிக்கும். **ஆனாலும்கூட அரசியல் சட்டம் வகுத்துள்ள சட்டகத்துக்குள் நின்றுதான் தனது தீர்ப்பை வழங்கும்”** என்று உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியிருப்பதோடு, இது குறித்து நீதிமன்றத்துக்கு உதவிட வழக்கறிஞர்கள் குழு ஒன்றையும் (அமிகஸ் க்யூரி) நியமித்துள்ளனர். இராமாயணக் கதையிலேயே ஆர்த்தி மகரிஷியின் மனைவியான அனுசூரியா என்ற பெண், பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரையும் ‘குழந்தை’களாக மாற்றி ‘சாப மிட்டதை’யும் நீதிபதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

சாஸ்திரங்கள், வேதங்கள் என்ற மத நூல்களின் எல்லைகளுக் குள்ளேயே நின்று, நீதிமன்றம் ‘பாகுபாடு’களுக்கு எதிரான கருத்துகளை முன் வைத்திருக்கிறது. பகுத்தறிவாளர்களோ, பெண்ணுரிமையாளர்களோ, மனித உரிமையாளர்களோ இப்படிப் பேசினால் மத உணர்வுகளைப் புண்படுத்து கிறார்கள் என்றும், இவர்களுக்கு இந்து மதத்தை விமர்சிக்க உரிமை இல்லை என்றும் கூக்குரல் போடும் பார்ப்பனிய கும்பல், உச்சநீதிமன்றம் மதத்தின் வட்டத்துக்குள்ளேயே நின்று எழுப்பியிருக்கும் இந்த கேள்விகளுக்கு என்ன பதில் கூறப் போகிறது, என்று கேட்கிறோம்.

உச்சநீதிமன்றம் எழுப்பியுள்ள இந்த கேள்விகள் – அர்ச்சகர் நியமனங்களில் “சூத்திரர் – பஞ்சமர் மற்றும் பெண்களுக்கு” எதிரான பாகுபாடுகளுக்கும் நூற்றுக்கு நூறு பொருந்தி வரக்கூடியதே என்பதையும் சுட்டிக்காட்டுகிறோம். (அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் வழக்கில் – ‘பாகுபாடுகளை’ மறைமுகமாக நியாயப்படுத்திடும் குழப்பமான தீர்ப்பை உச்சநீதிமன்றத்தின் இரு நீதிபதிகளடங்கிய அமர்வு வழங்கியது. அந்த அமர்வில் இடம் பெற்றிருந்த நீதிபதி என்.வி.இரமணா, இந்த அமர்விலும் இடம் பெற்றிருக்கிறார்.)

அனைவருக்கும் சமத்துவத்தை உறுதி செய்யும் அரசியல் சட்டம்தான் எல்லாவற்றையும்விட உயர்ந்தது என்கிறார்கள் நீதிபதிகள். இதைத்தான் நாமும் வலியுறுத்துகிறோம். ஆனால், பிறவியின் அடிப்படையிலே ‘பாகுபாடு’களை உறுதிப்படுத்திட பின்பற்றப்பட்டு வரும் “பழக்க வழக்கங்களுக்கும்” சட்டத்தில் இடமிருக்கிறது என்று நீதிமன்றம் கூறும்போது தான், நாம், நீதிமன்றத்தின் நேர்மையையே கேள்விக்குள்ளாக்க வேண்டியிருக்கிறது.

இப்போது ‘சூத்திரர்–பஞ்சமர்கள்’ மட்டுமின்றி பெண்களும் சுயமரியாதைக் கான உரிமைக் கொடியை தூக்கிவிட்டார்கள். காலத்தின் மாற்றங்களை நீதித் துறை கவனத்தில் கொள்ளுமா? என்பது தான் இப்போது எழுந்துள்ள கேள்வி.

உரிமைப் போருக்கு களமிறங்கிய பெண்களைப் பாராட்டுகிறோம்; பார்ப்பனியத்துக்கு சாவு மணி அடிப்பதை இனியும் தள்ளிப் போட முடியாது; போடவும் கூடாது!

– புரட்சிப் பெரியார் முழக்கம் 18.02.2016

# அறிவியலின் மகத்தான புரட்சி

உலகம் ‘படைக்கப்பட்டது’; அப்படிப் படைத்தவன், எல்லாவற்றுக் கும் மேலான ‘இறைவன்’ இதுதான், அனைத்து மதங்களும் மக்களிடம் திணிக்கும் நம்பிக்கை!

அறிவியல் வளர்ச்சியடையாத - அச்சத்தால் உருவாக்கப்பட்ட கடவுள், மதங்களின் கருத்துகள் ஒவ்வொன்றாக மடிந்து வீழ்ந்து வருகின்றன. அறிவியல் அனைத்துக்கும் விடைகளைத் தந்து வருகிறது. அதற்கான தேடல்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. உலகம் - எப்படி உருவானது என்பதை ‘பெரு வெடிப்பு’ அறிவியல் கொள்கை யும், உயிர் எப்படி பரிணாமம் பெற்றது என்பதை டார்வின் கோட்பாடும் மனித குலத்துக்கு வழங்கிச் சென்றன.

வானவெளியில் சூரியன், நட்சத்திரங்கள், கிரகங்கள், கோள்கள் பற்றிய ஆய்வுகள் தொடங்கின. இது வரை இந்த கண்டுபிடிப்புகள் வெளிச் சங்களாக பார்வையில் மட்டுமே தெரிகின்றனவாகவே இருந்தன. இப்போது அண்ட வெளியில் அதிர்வு களின் ஓசையைக் கேட்கும் மகத்தான கண்டு பிடிப்பு நிகழ்ந்துள்ளது.


‘சார்பியல் கோட்பாடு’ என்ற அறிவியல் கண்டுபிடிப்பை வழங்கிய அய்ன்ஸ்டின் 100 ஆண்டுகளுக்கு முன் ஒரு கோட்பாட்டை முன் வைத்தார். அது இதுதான்:

“விண்வெளியில் சூரியனைப் போல பல மடங்கு “நிறை” (Mass) கொண்ட நட்சத்திரங்கள், தங்களின் வாழ்நாளின் இறுதியில் ‘கருந்துளைகளாக’ மாறும். அப்போது கருந்துளைகள் சுற்றி வரும் சூழல்கள் உருவாகும். அதன் காரணமாக அண்டவெளியில் அதிர்வுகள் உருவாகும். இந்த அதிர்வுகள் ஒன்றை ஒன்று ஈர்க்கும் ஈர்ப்பு கவர்ச்சி அலைகளாக (Gravitational Waves) மாறும் என்று கூறினார் அய்ன்ஸ்டின். அது உண்மைதான் என்று இப்போது விஞ்ஞானிகள் கண்டுபிடித்துவிட்டனர். அமெரிக்கா வின் மாசாசூட்ஸ் தொழில்நுட்ப மய்யத்தின் ‘லிகோ’ (Ligo) எனும் விஞ்ஞானிகள் குழு, இந்த மகத்தான கண்டுபிடிப்பை நிகழ்த்தியுள்ளது. இந்த குழுவில் இடம் பெற்ற 15 நாடுகளைச் சார்நத் 83 நிறுவனங்களில் பணியாற்றும் 1006 விஞ்ஞானிகள், 1997 முதல் ஆய்வில் ஈடுபட்டனர். இதில் 37 இந்திய விஞ்ஞானிகளும் இடம் பெற்றிருந்தனர்.

வானவெளியில் வெளிச்சம் படாத இருண்ட பகுதிகளில் மேலும் ஆய்வுகளை நடத்தவும், பிரபஞ்ச இரகசியங்களை வெளிக் கொணரவும் இதன் மூலம் கதவு திறக்கப்பட்டுள்ளது என் கிறார்கள் விஞ்ஞானிகள்.

# நவீன துரோணாச்சாரிகளால் காவு வாங்கப்பட்டவர் ரோகித் வெமுலா

### பேராவூரணி ஆர்ப்பாட்டத்தில் தூத்துக்குடி பால்பிரபாகரன் பேச்சு




அய்தராபாத் மத்திய பல்கலைக் கழகத்தில் பயின்ற முனைவர் பட்ட ஆய்வு மாணவர் ரோகித் வெமுலா மரணத்திற்கு நீதி விசாரணைகேட்டும், நாகை மாவட்டம் வழுவூர் திருநாள் கொண்டச்சேரி தலித் முதியவரின் உடலை பொதுப் பாதையில் எடுத்துச் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டும், நீதிமன்றத்தை அவமதித்த நாகை மாவட்ட நிர்வாகத்தை கண்டித்தும். விழுப்புரம் தனியார் கல்லூரியில் மரணமடைந்த மூன்று மாணவிகளுக்கு நீதி கேட்டும் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கண்டன ஆர்பாட்டம் பேராவூரணி அண்ணா சிலை அருகில் பிப்ரவரி 2ம் தேதி மாலை 5 மணியளவில் திராவிடர் விடுதலைக்கழக தஞ்சை மாவட்ட அமைப்பாளர் சித.திருவேங்கடம் தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத் தின் நோக்கங்களை விளக்கி திராவிடர் விடுதலைக்கழக திருவாரூர் மாவட்ட செயலாளர் இரா.காளிதாசு, தஞ்சை மாவட்ட முன்னாள் அமைப்பாளர் பாரி, திராவிடர் விடுதலைக் கழக பாடகர் பள்ளத்தூர் நாவலரசன், தமிழக மக்கள் புரட்சிக்கழக மாவட்ட செயலாளர் வி.சி.முருகையன், மெய்சுடர் இதழ் ஆசிரியர் வெங்கடேசன், தமிழக மக்கள் புரட்சிக் கழக ஒன்றிய செயலாளர் வீரக்குடி ராஜா, பொதுச் செயலாளர் ஆர்.நீலகண்டன், மனிதநேய மக்கள் கட்சி அப்துல்சலாம், நகரச் செயலாளர் அப்துல்லா, ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

இறுதியாக திராவிடர் விடுதலைக் கழக பரப்புரை செயலாளர் தூத்துக்குடி பால் பிரபாகரன் கண்டன உரையாற்றினார். அவர் தனது உரையில், “வெமுலா தாழ்த்தப் பட்டவர் என்பதற்காக மட்டும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்படவில்லை. அவர் தலித் என்கிற அடிப்படையில் அமைதியாக இருந்திருந்தால் மரணமடைந்திருக்க மாட்டார். மாறாக அம்பேத்கர், பூலே, பெரியார் கொள்கைகளை நடைமுறைபடுத்துக்கின்ற வகையில் சமூக அக்கறையோடு நாட்டில் இத்துத்துவவாதிகளால் நடைபெறும் சாதிய சிறுபான்மை மக்களுக்கு எதிராக நடைபெறும், ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும், அவர் போராடியதால்தான் தற்கொலைக்கு நிர்பந்திக்கப்பட்டிருக்கிறார்.

ஆனால் இப்போது மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ரோகித் வெமுலா ஒரு தலித் அல்ல என்பதை ஊடகங்களில் திரும்ப திரும்ப சொல்லிவருகிறார். அதன் உள்நோக்கம் என்பது வெமுலா மரணத்திற்கு காரணமான பல்கலைக்கழக துணைவேந்தர் அப்பாராவ், மத்திய மனித வளத்துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி மற்றும் மத்திய இணையமைச்சர் பண்டாரு தத்தாத்திரேயா ஆகியோர் மீது தீண்டாமை வன்கொடுமை சட்டம் பாய்ந்துவிட கூடாது என்பதற்காகவே மீண்டும் மீண்டும் பொய்யை கூறி அதை உண்மை போல் சித்தரிக்க முயற்சிக்கிறார். இதுவும் ஒரு பார்ப்பன சூழ்ச்சியே. நாகை மாவட்ட திருநாள்கொண்டசேரியில் இறந்துபோன தலித் முதியவர் உடலினை பொதுப்பாதை வழியாக எடுத்து செல்வதற்கு அங்குள்ள ஜாதி வெறி பிடித்தவர்கள் எதிர்ப்பு தெரிவித்த போது பொதுப்பாதை வழியாக எடுத்துசெல்வதற்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகும் அந்த உத்தரவை நடைமுறைபடுத்தவேண்டிய தமிழக அரசும் நாகை மாவட்ட நிர்வாகமும் நீதிமன்ற தீர்ப்பை உதாசீனப்படுத்தியது வன்மையான கண்டத்துக்குரியது.

அதுபோல் விழுப்புரம் மாவட்டம் எஸ்.வி.எஸ். யோகா இயற்கை மருத்துவ கல்லூரி என்கிற அங்கீகாரம் பெறாத கல்லூரியில் பயின்ற மூன்று மாணவிகள் நிர்வாகத்தில் நெருக்கடியால் மரணமடைந்திருக்கின்றனர். இதற்கு விழுப்புரம் மாவட்ட நிர்வாகமும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சகமும்தான் பொறுப்பு தமிழக அரசு உடனடியாக தமிழகம் முழுவதும் முறையான ஆய்வுகளை மேற்கொண்டு அங்கீகாரம் பெறாமல் இயங்கும் கல்வி நிறுவனங்களை இழுத்து மூடவேண்டும்” என கூறி உரையாற்றினார்.

ஆர்பாட்டத்தில் எழுத்தாளர் துரை குணா, பெரியார் அம்பேத்கர் மக்கள் கழக அமைப்பாளர் செல்வம், திராவிடர் விடுதலைக் கழக புதுக்கோட்டை மாவட்ட அமைப்பாளர் பூபதி கார்த்திகேயன், பேராவூரணி ஒன்றிய செயலாளர் கோவிந்தன், சேது ஒன்றிய செயலாளர் ஜெயச்சந்திரன், தஞ்சை பெரியார் சித்தன், இளஸ்ஐ ஆயர் ஜேம்ஸ், தமிழக மக்கள் புரட்சிக் கழக மாவட்ட துணை செயலாளர் சம்பத் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

# ‘மதவாத பார்ப்பன பண்பாட்டை அழிக்கத் துடிக்கிறோம்’

***தேசத்துரோக வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ஜவகர்லால் நேரு பல்கலைக் கழக மாணவர் கன்யா குமார் மாணவர்களிடையே ஆற்றிய உரையின் தமிழாக்கம்:***

எங்களுக்கு தேசபக்திக்கான சான்றிதழ் ஆர்.எஸ்.எஸ். ஸிடமிருந்து வேண்டாம். 80 விழுக்காட்டிற்கும் மேல் ஏழைகள் வசிக்கும் இந்த நாட்டில், நாங்கள் ஏழைகள் நலனுக்காகவே உழைப்போம். அதுவே எங்களின் தேசபக்தியாகும்.

எங்களுக்கு பாபாசாகேப் அம்பேத்கர் மீது முழுமையான நம்பிக்கை இருக்கிறது. இந்த நாட்டின் அரசியல் சட்டத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம். இந்த அரசியலமைப்பின் மீது யாராவது விரல் நீட்டினால், அது சங்பரிவாரத்தின் விரலோ அல்லது வேறு எவருடைய விரலோ. அந்த விரலை நாங்கள் ஒருபோதும் சகித்துக் கொள்ள மாட்டோம்.

ஆனால், ஜண்டேவாலாவிலும், நாக்பூரிலும் கற்பிக்கப் படும் சாசனத்தின் மீது எங்களுக்கு துளியளவும் நம்பிக்கை யில்லை. எங்களுக்கு மனுஸ்மிருதியின் மீது எவ்வித நம்பிக்கையுமில்லை. இந்த நாட்டிலுள்ள சாதியவாதத்தின் மீது எங்களுக்கு நம்பிக்கையில்லை.



அண்ணல் அம்பேத்கர்தான் அரசியல் சாசன உரிமைகளை நிலை நாட்ட வேண்டும் என்று குரல் கொடுக் கிறார். அவர்தான் தூக்கு தண்டனையை ஒழிக்க வேண்டும் என்கிறார். அவர்தான் கருத்து உரிமையைப் பேசுகிறார்.

நாங்களும் எங்கள் அரசியல் சாசன உரிமைகளை எதன் பொருட்டும் விட்டு கொடுக்க மாட்டோம். ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் ஜிஹாதிகள் இருக்கிறார்கள். வன்முறையை பரப்புகிறார்கள் என்று சுப்பிரமணியன் சுவாமி சொல்கிறார். துணிவிருந்தால் ஆர்.எஸ்.எஸ். அடிவருடிகளை அழையுங்கள். நாங்கள் சவால் விட்டு கேட்கிறோம். ஏபிவிபி தங்களது முழக்கங்களில், “இரத்தத்தால் திலகமிடுவோம் என்றும், குண்டுகளால் ஆரத்தி எடுப்போம்” என்றும் கூறுகிறார்களே? இந்த வெட்கங்கெட்டவர்கள் யாருடைய இரத்தத்தை இந்த ஊரில் ஓட விடப் பார்க்கிறார்கள்?

ஆம். நீங்கள் குண்டுகளை பாய்ச்சியிருக்கிறீர்கள். ஆங்கிலேயர்களோடு இணைந்து கொண்டு, இந்த நாட்டின் விடுதலைக்காக போராடியவர்கள் மீது குண்டுகளை பாய்ச்சியிருக்கிறீர்கள். இந்த ஊரில் ஏழைகள் தங்கள் பசியைக் குறித்து கவலைப்படுகிறார்கள். பட்டினியில் வாடும் மக்கள் தங்கள் உரிமையைப் பற்றி பேசுகிறார்கள். நீங்கள் அவர்கள் மேல்தான் உங்கள் குண்டுகளை பாய்ச்சுகிறீர்கள். இஸ்லாமியர்கள் மீதும் பெண்கள் தங்கள் உரிமைகளுக்காக போராடினால், பெண்கள் சீதையைப் போல இருக்க வேண்டும் என்று அவர்கள் மீதும் அடக்குமுறை செலுத்துகிறீர்கள். இந்த நாடு ஜனநாயக நாடுதானே? அது, மாணவர்கள், ஊழியர்கள், ஏழைகள், கூலித் தொழிலாளி மற்றும் விவசாயிகள் ஆனாலும், அம்பானி அல்லது அதானி ஆனாலும் அனைவருக்கும் ஜனநாயக உரிமைகளை வழங்கியிருக்கிறதே?

பெண்களின் உரிமைகள் குறித்து பேசும்போது, நாங்கள் பாரதிய பண்பாட்டை அழிக்க நினைப்பதாக குற்றஞ் சுமத்து கிறார்கள். ஆம், நாங்கள் அழிக்க நினைக்கிறோம், சுரண்டல் பண்பாட்டை அழிக்க விரும்புகிறோம். சாதிய பண்பாட்டை அழிக்க நினைக்கிறோம். மனுவாத, பார்ப்பனிய பண்பாட்டை அழிக்க விரும்புகிறோம்.

இவர்களுக்கு (காவி பரிவாரங்களுக்கு) உண்மையில் எங்கே பிரச்சினை வருகிறது? மக்கள் ஜனநாயகத்தை குறித்துப் பேசும் போதும், செவ்வணக்கத்தோடு, நீல வணக்கத்தை இணைத்து சொல்லும்போதும், மார்க்ஸோடு, அண்ணல் அம்பேத்கரின் பெயரை இணைக்கும் போதும் வருகிறது. இதை உறுதியோடு செய்யும்போது இவர்கள் வயிற்றில் புளியை கரைக்கிறது. இந்த காவிக் கும்பல் ஆங்கிலேயர்களின் அடிவருடிகள் ஆர்.எஸ்.எஸ்.சின் வரலாறு என்பதே ஆங்கிலேய ஏகாதிபத்தியத் தோடுதான் பிணைந்திருக்கிறது.

இந்த தேசத் துரோகிகள்தான் நம்மிடம் தேசபக்திக்கான சான்றிதழைக் கோருகிறார்கள். வேண்டுமென்றால், எனது மொபைலை பரிசோதித்துக் கொள்ளுங்கள் தோழர்களே. என் தாய், சகோதரிகளை பற்றி அசிங்கமான சொற்களில் திட்டி தீர்க்கிறார்கள். பாரத மாதாவை பற்றி பேசுகிறது இந்த கும்பல். உங்கள் பாரதமாதாவில் எனது தாய் இல்லை யென்றால், பாரத மாதா மீதே எனக்கு உடன்பாடு கிடையாது.

இந்த நாட்டின் வறுமையில் வாடும் பெண்களில் என் அம்மாவும் ஒருவர்; அவர் அங்கன்வாடியில் 3000 ரூபாய்க்கு கூலி வேலை செய்கிறார். அதில் எங்கள் குடும்பம் நடக்கிறது. இந்த கும்பல் அவருக்கு எதிராக கெட்ட வார்த்தை யில் பேசுகிறது. இந்த நாட்டின் ஏழை, தலித், விவசாயிகளின் மாதாக்கள் யாரையும் இவர்கள் பாரதமாதாவாக ஏற்றுக் கொள்வதில்லை. உங்களுக்கு துணிவிருந்தால் புரட்சி வெல்லட்டும் என்றோ, பகத்சிங் புகழ் ஓங்குக என்றோ, சுகதேவின் புகழ் ஓங்குக, அம்பேத்கரின் புகழ் ஓங்குக என்றோ கூற முடியுமா? அப்பொழுது நம்புகிறோம், காவிக் கும்பலுக்கு இந்த நாட்டின் மீது நம்பிக்கை இருக்கிறது என்று...

ஆனால், அம்பேத்கரின் 125ஆவது பிறந்த நாள் கொண்டாடு வதாக நாடகம் ஆடுகின்றீர்கள். சாதியம்தான் இந்த நாடு சந்திக்கும் முதன்மையான பிரச்சினை என்று அண்ணல் அம்பேத்கர் கூறினாரே... உண்மையாக அக்கறை இருக்குமானால், தனியார் துறையில் இடஒதுக்கீட்டை அமல்படுத்துங்களேன். அப்பொழுது நம்புகிறோம். காவிக் கும்பலுக்கு இந்த நாட்டின் மீது நம்பிக்கை இருக்கிறது என்று...

பல்கலைக்கழக வளாகம் இருப்பதே எதற்காக? சமூகத்தில் நிலவும் சூழலை குறுக்கு விசாரணை செய்வதற்கு தானே...? பல்கலைக்கழகங்கள் இந்த பணியில் தோற்றால், நாடு, நாடாகவே இருக்காது.

இந்த தேசத்தோடும், அம்பேத்கரும், பகத்சிங்கும் இந் நாட்டின் நலனுக்காக கண்ட கனவுகளோடும் நாங்கள் ஒன்றிப் போனவர்கள். உணவு, உடை, இருப்பிடம் என அனைத்திலும் சமத்துவத்தை உறுதி செய்யும் கனவுதான் எங்களுடையது. இந்த கனவுக்காகத்தான் ரோஹித் தன்னுடைய உயிரை கொடுத்தான். மத்திய அரசுக்கு நாங்கள் சவால் விடுகிறோம். ஐதராபாத்தில் ரோஹித்துக்கு என்ன நடந்ததோ அதை கண்டிப்பாக வளாகத்தில் நடக்க விட மாட்டோம்.

**நன்றி : ‘தீக்கதிர்’**

## 27 சதவீத இடஒதுக்கீட்டை முழுமையாக நிரப்பக் கோரி ஆர்ப்பாட்டம்

பிற்படுத்தப்பட்டோருக் கான (OBC) 27% இடஒதுக்கீடு 23 ஆண்டுகள் கடந்த பின்பும் 12% மட்டுமே நிரப்பப்பட் டுள்ளது. இதை முழுமை யாகவும் முறையாகவும் மத்திய அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் நிரப்பக்கோரி (13.2.2016) சென்னை வள்ளுவர் கோட்டத்தில் அகில இந்திய பிற்படுத்தப்பட்ட (OBC) ஊழியர்கள் நலச்சங்கங்களின் பேரமைப்பின் சார்பில் மத்திய அரசை கண்டித்து தொடர் முழக்க கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது. பேரமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்து சங்கங்களின் நிர்வாகிகள் கண்டன உரையாற்றினர்.

பேராசிரியர் டாக்டர் முரளிதரன் விரிவாக இட ஒதுக்கீட்டிலும், அய்.அய்.டி போன்ற உயர் கல்வி நிறு வனங்களிலும் நடைபெறும் மோசடிகளை தனது உரையில் தோலுரித்து காட்டினார். அடுத்து சங்கர், ஐ.ஏ.எஸ்., அகாடமியின் தலைவர் சங்கர், சிவில் சர்வீஸ் தேர்வுகளில் எப்படி முறைகேடுகளை இவ் வரசுகள் மேற்கொள்கின்றன இதனால் உயர்சாதியினர் எப்படி பலன் அடைகிறார்கள் என்பதை சுருக்கமாக விளக்கி னார். நிறைவாக திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி, தமது கண்டன உரையில் -

இடஒதுக்கீட்டை கண் காணிக்க தனி அமைப்பு இல்லாததையும், சமூக நல அமைச்சகத்தின் அக்கறை யின்மையையும், உயர் கல்வி நிறுவனங்களில் நடைபெறும் அட்டூழியங்களையும் விளக்கிப் பேசினார்.

நிகழ்வில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மக்கள் நெஞ்சம் கலச இராமலிங்கம், ரெப்கோ வங்கி அதிகாரி திருவேங்கடம் மற்றும் கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

## பல்கலை பாகுபாடுகளை ஒழிக்க தோரட் குழு தந்த பரிந்துரைகள் : மதுரை கருத்தரங்கில் விளக்கம்

*3-2-2016 அன்று மாலை 5-00 மணிக்கு, மதுரை, தமிழ்நாடு இறையியல் கல்லூரியின் துரைராஜ் பீட்டர் அரங்கத்தில், எவிடன்ஸ் அமைப்பின் ஒருங்கிணைப்பில், ‘கல்வி நிறுவனங்களும் ஜாதிப் பாகுபாடும்’ என்னும் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.*

*கருத்தரங்கத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை வகித்தார். முத்து அனைவரையும் வரவேற்றார். கருத்தரங்கின் நோக்கங்களை விளக்கி எவிடன்ஸ் நிறுவன செயல் இயக்குநர் கதிர் தொடக்கவுரையாற்றினார். அவரைத் தொடர்ந்து எழுத்தாளர் கவின் மலர், சமூக ஆர்வலர் ஜோசுவா ஐசக், பேராசிரியர் செம்மலர் ஆகியோரின் உரையைத் தொடர்ந்து மதுரை மக்கள் கண்காணிப்பகத்தின் செயல் இயக்குநர் வழக்கறிஞர் ஹென்றி டிபேன் சிறப்புரை ஆற்றினார். தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் பொதுச் செயலாளர் சாமுவேல்ராஜ் நிறைவுரை ஆற்றினார். கருத்தரங்கில் ரோகித் வெமுலா வின் மரணம் குறித்தும், மத்திய பா.ஜ.க ஆட்சியின் தலித், சிறுபான்மையோர் விரோத போக்கு குறித்தும், ஏற்கனவே உயர் கல்வி நிறுவனங்களில் நிகழ்ந்த மரணங்களைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட விசாரணைக் குழுக்களின் பரிந்துரைகளைச் சரியாக பின்பற்றியிருந்தால் ரோகித் போன்றோரின் மரணங்களைத் தடுத்திருக்க முடியும் என்றும் குறிப்பிட்டனர்.*

*குறிப்பாக ஹென்றி டிபேன் உரையாற்றும்போது, “பல்கலைக் கழக மானியக் குழுவின் தலைவராக பேராசிரியர் தோரட் இருந்தபோது, 2012ஆம் ஆண்டில் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் குறைதீர்க்கும் மையங்கள் அமைக்கப்பட்டு, தலித், பழங்குடி, சிறுபான்மை, மாற்றுத்திறன், பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் பாகுபாடு போன்ற புகார்களை விசாரித்துத் தீர்வு காண்பது குறித்து வெளியிட்ட அறிவிக்கையை விளக்கினார். அதேபோல், பல்கலைக் கழக மானியக் குழு 2013ஆம் ஆண்டில் அரசிதழில் வெளியிட்டுள்ள ‘உயர் கல்வி நிறுவனங்கள் சமத்துவ மேம் பாட்டு நெறிமுறை அறிவிக்கை’யில் பாகுபாடு, சமத்துவம், தொல்லை கொடுத்தல், கேலி செய்தல், பாதகமாக நடத்தல், பழியெடுத்தல் போன்றவற்றை வரையறை*



*செய்துள்ளதையும், மாணவர்கள் குறைகளை அறிவதற்கும், புகார்களைப் பெறுவதற்கும், மேல் நடவடிக்கை எடுப்பதற்கும் அதிகாரமுள்ள ‘பாகுபாடு களைவு அதிகாரி’ ஒருவர் ஒவ்வொரு கல்லூரியிலும் நியமிக்கப்பட வேண்டுமென்றும், அம் முறையில் செயல்படாத கல்லூரியின் அனுமதியை இரத்து செய்யவும், மானியங்களை நிறுத்தவும், பல்கலைக் கழக இணைப்பைக்கூட இரத்து செய்யவும் உள்ள விதிமுறைகளையும் விளக்கினார்.*

*நம்மையொத்த கருத்துள்ளவர்கள் இவ்விதிமுறைகளைக் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் சரியாக பின்பற்றனவா என்பதைக் கண்காணிக்க வேண்டும்” என்று வலியுறுத்தினார். தோழர் கார்த்திக் நன்றிகூற கருத்தரங்கம் இரவு 8.00 மணியளவில் நிறைவடைந்தது.*

DATE OF PUBLICATION 18.02.2016 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# பெரியார் பெருந்தொண்டர் பட்டுக்கோட்டை சதாசிவம் படத்திறப்பு



*‘சமத்துவ சமூகம் அமைப்பதற்கு பெரியாரியல் ஒன்றே தீர்வு’ என வாழ்ந்து காட்டியவர் பட்டுக்கோட்டை வளவன் என்கிற சதாசிவம் என்று படத்திறப்பில் தூத்துக்குடி பால்பிரபாகரன் குறிப்பிட்டார்.*

பெரியார் பெருந்தொண்டர் பட்டுக்கோட்டை வளவன் என்கிற சதாசிவம் அய்யா அவர்களின் படதிறப்பு நிகழ்ச்சி பேராவூரணி ‘மெய்ச்சுடர்’ இதழ் அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திருக்குறள் பேரவை தலைவர் தங்கவேலனார் தலைமை வகித்து உரையாற்றினார். திராவிடர் விடுதலைக்கழக தஞ்சை மாவட்ட அமைப்பாளர் சிததிருவேங்கடம், ‘மெய்ச்சுடர்’ இதழ் ஆசிரியர் வெங்கடேசன், இசிஐ ஆயர் ஜேம்ஸ், தமிழக மக்கள் புரட்சிக்கழக பொதுச் செயலாளர் ஆறு.நீலகண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பெரியார் பெருந்தொண்டர் சதாசிவம், படத்தினை திராவிடர் விடுதலைக்கழக பரப்புரை செயலாளர் தூத்துக்குடி பால் பிரபாகரன் திறந்து வைத்து நினைவஞ்சலி உரையாற்றினார். அவர் தனது உரையில், “பட்டுக்கோட்டை வளவன் அய்யா அவர்கள் திருக்குறள் மீது ஆழ்ந்த பற்றுதல் கொண்டவராகத்தான் இருந்தார். அந்த திருக்குறள் போதித்த சமத்துவ சமூகம் அமைவதற்கு பெரியாரியல் ஒன்றே தீர்வு என்ற அடிப்படையில் தன் வாழ்நாள் முழுவதும் பெரியாரியலை தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராமங்களில் சுற்றி சுற்றி வந்து மக்களிடையே பரப்புரை செய்தார். அவர் தன்னை ஒரு அமைப்புக்குள் சுருக்கிக்கொள்ளாமல் அனைத்து பெரியார் இயக்கங்களிலும், தன் உறவு வட்டத்தை பெருக்கிக் கொண் டார். பெரியாரியலை திராவிடர் விடுதலைக் கழகம் மிகச் சரியாக மக்கள் மத்தியில் எடுத்து செல்வதை புரிந்து கொண்ட சதாசிவம் அய்யா, திராவிடர் விடுதலைக்கழக தோழர்களிடமே தனது இறுதி நாட்களை அர்பணித்துக் கொண்டார்.

அவருடைய பேச்சுக்கள் வேண்டுமென்றால் இன்றைக்கு நின்று போயிருக்க லாம், ஆனால் சமூகத்திற்கு அவர் சொல்ல வேண்டிய கருத்துக்கள் அவரால் தயாரிக்கப்பட்ட அவரால் அடையாளம் காட்டப்பட்ட பல்வேறு கருஞ்சட்டை தோழர்களால் தமிழகம் முழுவதும் என்றைக்கும் பேசப்பட்டுக் கொண்டே இருக்கும். அவர் இன்றைக்கு படமாகி இன்றைய இளைஞர்களுக்கு பாடமாகி யிருக்கிறார்” என்று குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியில் திராவிடர் விடுதலைக்கழக திருவாரூர் மாவட்ட செயலாளர் இரா.காளிதாசு, புதுக்கோட்டை மாவட்ட அமைப்பாளர் பூபதி கார்த்திகேயன், பேராவூரணி ஒன்றிய செயலாளர் கோவிந்தன், சேது ஒன்றிய செயலாளர் ஜெயச் சந்திரன், தமிழக மக்கள் புரட்சிக்கழக மாவட்ட செயலாளர் வி.சி.முருகையன், மாவட்ட துணை செயலாளர் சம்பத், சண்முகம், பெரியார் அம்பேத்கர் மக்கள் கழக அமைப்பாளர் ஆசிரியர் செல்வம், எழுத்தாளர் துரைகுணா உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர். துவக்கத்தில் தஞ்சை பெரியார் சித்தன் அய்யா சதாசிவத்தை பற்றி பாடல்களை பாடினார்.

**தோழர்களே!**
**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ உறுப்பினர் சேர்க்கையை முடித்து விட்டீர்களா?**

**வாலாஜா வல்லவன் கட்டுரை அடுத்த இதழில்**

## வினா... விடை...!

- *ஆளுநர்கள் அரசியலமைப்பு சட்டத்தின் ‘புனிதத்தை’ காப்பாற்ற வேண்டும்.* **– பிரணாப் முகர்ஜி**

**சட்டத்துல இப்படி ஒரு பிரிவு... எந்த அத்தியாயத்தில் எந்தப் பிரிவில் இருக்குதுன்னு தெரியல்லையே, சார்?**

- *மகாமகத்துக்கு முழுக்குப் போட வரும் முக்கிய புள்ளிகளுக்கு தனி ஹெலிகாப்டர் தளங்கள்.* **– செய்தி**

**நியாயம்தான்; ‘பாவ முட்டை’களை ஹெலிகாப்டரில்தான் சுமந்து வரவேண்டும்.**

- *சத்தீஸ்கரில் நீதிபதி தோட்டத்தில் மேய்ந்த ஆடு கைது.* **– செய்தி**

**சட்டப்படிதான் ஆடு புல் மேய வேண்டும்; சட்ட அறிவே இல்லாமல், இப்படி கண்டபடி ஆடுகள் மேய்வதை சட்டம் ஒரு போதும் அனுமதிக்காது!**

- *கும்பகோணம் ‘மகாமக’த்தில் காவல்துறையினர் பக்தர்களுக்கு தொல்லை தராமல் பாதுகாப்பு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.* **– செய்தி**

**‘தொல்லை தராத பாதுகாப்பு’ வீட்டுக்குள்ளே குளியலறையில் முழுக்குப் போட்டுக் கொள்வதுதான்!**

- *மத நம்பிக்கைகள் எல்லாவற்றையும் அறிவியல் கொண்டு ஆராய முடியாது.* **– சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு**

**அதேபோல, நீதிமன்ற தீர்ப்புகள் எல்லாவற்றையும் சட்டத்தின் அடிப்படையில் ஆராயக் கூடாதுன்னு சொல்லிடாதீங்கய்யா...**

# சுயமரியாதை திருமணம் சட்டமான நாளில் ஜாதி மறுப்பு மணவிழா



சென்னை மாவட்ட கழகத் தோழர் ம.மனோகர்-வி.ஜெயமாலா ஆகியோரின் ஜாதி மறுப்பு வாழ்க்கைத் துணை ஏற்பு விழா, 17.1.2016 அன்று மாலை 6 மணிக்கு சிசுவிஹார் சமூகநலக் கூட்டத்தில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்க, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில், வழக்கறிஞர் அஜிதா வாழ்த்துரை வழங்கினார்.

சுயமரியாதை திருமணம், சட்ட வடிவம் பெற்ற நாள் ஜன.17 என்பதால் அந்த நாளை தேர்வு செய்து, மண விழா நடத்தப்பட்டது குறிப்பிடத் தக்கது. மயிலை கழக செயல் வீரர் மனோகர், கழகம் நடத்திய போராட் டங்களில் பங்கேற்றவர். ஈழத் தமிழர் உரிமைகளுக்காக இந்திய அரசைக் கண்டித்து அஞ்சலகம் முன் தாக்குதல் நடத்தியதாக தொடரப்பட்ட வழக்கில் தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் 7 மாதம் சிறையில் இருந்தவர். காஷ்மீர் உரிமைக்கான போராட்டத்தில் பங் கேற்று கழகத் தலைவருடன் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். பார்ப்பனர் பூணூல் அறுப்பு வழக்கில் காவல் துறை தொடர்ந்த பொய் வழக்கை எதிர்கொண்டவர். மணவிழா வில் உரையாற்றிய கழகத் தலைவர், பொதுச் செயலாளர், மாவட்ட செயலாளர் உமாபதி அனைவரும் தோழர் மனோ கரனின் உறுதியான கொள்ளைப் பற்றைப் பாராட்டிப் பேசினார். வாழ்க்கையிலும் ஜாதி மறுப்பையே தனது மணவிழா வழியாக செயல்படுத்தினார் மனோகர். மனோகர்-வி.ஜெயமாலா இணையரை கழகம் வாழ்த்துகிறது.

## கொலை மிரட்டல்: பா.ஜ.க. கல்யாணராமன் மீது கழகம் காவல்துறையில் புகார்

பா.ஜ.க.வில் பொறுப்பாளராக இருக்கும் கல்யாணராமன் என்பவர் தனது முகநூலில் தொடர்ந்து வன்முறையை தூண்டி விட்டும், கொலை மிரட்டல் விடுத்தும் பதிவுகளை வெளியிட்டு வருகிறார். இது குறித்து திராவிடர் விடுதலைக் கழக சார்பில் தலைமை நிலைய செயலாளர் தபசி குமரன் மற்றும் கழகத்தினர், மாநகர காவல்துறை ஆணையர் அலுவலகத்தில் உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி, கடந்த 10.2.2016 பகல் 11 மணியளவில் எழுத்துபூர்வ புகார் ஒன்றை அளித்தனர். தேசியக் கொடியை எரித்து முகநூலில் படம் வெளி யிட்டதாகக் கூறி மகேந்திரன் திலீபன் என்ற இளைஞரின் கையை காவல்துறை உடைத்தது போல், கொளத்தூர் மணி கும்பலுக்கும் சீமானுக்கும் நடக்கும் என்று மிரட்டலுடன் அந்த நபர் பதிவிட்டிருந்ததையும் நகல் எடுத்து புகார் மனுவில் தோழர்கள் இணைத்திருந்தனர்.

# ரோகித் வெமுலா மரணத்துக்கு நீதி கேட்டு கழகம் நடத்திய ஆர்ப்பாட்டங்கள்





தூத்துக்குடி




ஈரோடு

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 18th February 2016

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2047 | பிப்ரவரி 25, 2016 | புரட்சி 15 | முழக்கம் 6 | விலை: ரூ.3.00

## ‘பூசணிக்காய்’க்குள் புதைந்து கிடக்கும் ஜாதி–மூட நம்பிக்கை!

காய்கறிகளில் உடல்நலத்துக்கான சத்துகள் அடங்கியிருப்பதை விஞ்ஞானம் தான் கண்டுபிடித்து அறிவித்தது. அதற்குள் மூடநம்பிக்கைகளையும் ஜாதியையும் பார்ப்பனர்கள் திணித்தார்கள். வீடுகளில் ‘திருஷ்டி’ கழிக்க பூசணிக்காய் கட்டினாலும் அந்த வீடுகள், அதற்கான விபத்து பாதிப்புகளிலிருந்து தப்புவதில்லை. ஆனாலும், மூடநம்பிக்கை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இது குறித்து ‘ஈஷா’ சத்குரு வெளியிட்ட கருத்து இது:

**கேள்வி:** புதுமனைப் புகுவிழா போன்ற பல நேரங்களில் வீட்டின் முன் சாம்பல் பூசணிக்காயைக் கட்டித் தொங்க விடும் பழக்கம் நமது கலாச்சாரத்தில் இருக்கிறது. பூசணிக்காயை ஏன் கட்டுகிறார்கள், அந்தக் காய்க்கு மட்டும் அப்படி என்ன சிறப்பு?

**சத்குரு:** “உணவுகளில் மிகவும் அதிக பிராண சக்திக் கொண்ட சில உணவுகள் உள்ளன. அந்த உணவுகளிலும் மகா பிராண சக்தி கொண்டது சாம்பல் பூசணி. அந்தக் காய் மிக அதிகமான நேர்மறை பிராண சக்தி கொண்டது. எனவேதான், அதை வீட்டு முன் கட்டித் தொங்க விடுகிறோம். புதிய வீட்டில் குடியேறும் போது, சில தீய சக்திகள் அங்கே இருக்கலாம். எனவே, ஒரு பூசணிக் காயை நம் வீட்டின் முன் கட்டும்போதே, அந்த இடத்தில் உண்டாகும் நேர்மறை அதிர்வுகள் அந்த இடத்தில் உள்ள எதிர்மறைச் சக்திகளை அகற்றிவிடுகின்றன. நாம் அதைச் சாப்பிடும்போது, அது நமக்கு மிகவும் நல்லது செய்கிறது. ஆனால், நம் கலாச்சாரத்தில் ஒரு வழக்கம் இருந்தது. நம் வீட்டிலேயே ஒரு பூசணிக்காயை வளர்த்தாலும் அதை அந்தணருக்குத் தானமாகக் கொடுத்து விடும் பழக்கம் இருந்தது. நீங்கள் அதை தானமாகக் கொடுக்கும்போது உங்களுக்கு புண்ணியம் கிடைக்கும் என்று சொல்லி இருக்கிறார்கள். வாங்குபவருக்கோ இங்கேயே நல்ல உணவு கிடைத்து விடுகிறது. குறிப்பாக, வட இந்தியாவில் கீழ் ஜாதியினர் பூசணிக்காய் சாப்பிடுவது தடை செய்யப்பட்டிருந்தது. ஏனெனில் பூசணிக்காய் சாப்பிடுபவருக்கு உடலும் மனமும் கூர்மையாவதால் அவர்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியாது. எனவேதான், அவர்கள் பூசணிக்காய் சாப்பிடுவதிலிருந்து தடை செய்யப்பட்டனர். ஆனால், இப்போது அதுபோன்ற கட்டுப்பாடுகள் ஏதுவும் இல்லை. பூசணிக்காயைத் தொடர்ந்து சாப்பிடும்போது நம் மனம் மிகுந்த விழிப்புணர்வை அடைகிறது. புத்தி கூர்மையும், புத்துணர்வும் சமநிலையும் அதிகரிக்கிறது. இவ்வளவு பிராண சக்தியுடன் இருப்பதால்தான் வீடு கட்டி புதிதாகக் குடியேறும்போது அனைத்து எதிர்மறைச் சக்திகளையும் களைவதற்கான ஒரு வாய்ப்பாக பூசணிக் காயைப் பயன்படுத்துகிறார்கள்” என்று கூறியிருக்கிறார் சத்குரு.

எதிர்மறைச் சக்திகளை விரட்டும் சக்தி பூசணிக்காய்க்கு இருக்கிறதாம். அது வீட்டைக் காக்கும் என்றால், சியாச்சின் பனிப் பாறையில் “பூசணிக்காய்”களை கட்டி வைத்து, இராணுவத்தினரை திரும்பப் பெற்றுக் கொள்ளலாமே! பாதுகாப்புக்குச் சென்று பனிப் புயலில் சிக்கி, இராணுவத்தினர் பலியாக வேண்டிய அவசியமில்லையே!

வீட்டுக்கு வாங்கிய வங்கிக் கடனை திருப்பிச் செலுத்த முடியாமல் ஏலம் போவதை பூசணிக்காய் தடுத்து நிறுத்தியதா? பூசணிக்காய் கட்டிய அடுக்குமாடி குடியிருப்புகள் இடிந்து விழவில்லையா? மூடநம்பிக்கைகளுக்கு இப்படி ஒரு விளக்கமா?

# பார்ப்பன தேசத்தில் தேச விரோதிகளே பெருமைக்குரியவர்கள்!

ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் கன்யாகுமார் மீது, பா.ஜ.க. ஆட்சி தேசத் துரோக வழக்கு (இந்திய தண்டனைச் சட்டத்தின் 124ஏ பிரிவு) தொடர்ந்து சிறையிலடைத்துள்ளது. அவருடன் மேலும் 5 மாணவர்கள் மீதும் இதே தேச துரோக வழக்கு தொடரப்பட்டுள்ளது. தலைமறைவாக இருந்த இந்த மாணவர்கள், மீண்டும் பல்கலைக்கழகத்துக்கு திரும்பியுள்ளனர். ‘இந்த தேசத் துரோக வழக்கைத் திரும்பப் பெறவேண்டும்’ என்று, பேராசிரியர்கள், சிந்தனையாளர்கள், மனித உரிமையாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

பார்ப்பன மதவாதிகள் இப்போது ‘தேச பக்தர்’களாக அரிதாரம் பூசித் திரிகிறார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர்களில் ஒருவரான டி.ராஜாவின் மகள், இதே பல்கலையில் பயின்று வருகிறார். ‘தேச விரோதிகள்’ பட்டியலில் பார்ப்பனர்கள் இவரையும் சேர்த்து விட்டார்கள். தமிழ் நாட்டில் ‘திமிர்த்தனமாக’ தடித்த வார்த்தைகளைக் கொட்டி, அவ்வப்போது ‘அசிங்கப்’பட்டுக் கிடக்கும் எச்.ராஜா என்ற பார்ப்பனர், ‘டி.ராஜா, தனது மகளை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றிருக்க வேண்டும்’ என்று ‘கோட்சே’ மொழியில் பேசி, இப்போது சொந்தக் கட்சிக்காரர்களாலேயே காரி உமிழப்பட்டிருக்கிறார். “இது போன்ற கருத்து தெரிவிக்க ஒருவருக்கும் உரிமை இல்லை. குற்றச்சாட்டைக் கூறும்போது வரம்பு மீறக் கூடாது” என்று கூறியிருப்பவர், மத்திய பா.ஜ.க. அமைச்சராக இருக்கும் வெங்கய்யா நாயுடு.

> “எப்படி இருந்தாலும் முடிவில் “தேசத் துரோகிகள்” எனப்படுபவர்களும் நாஸ்திகர்கள் எனப்படுபவர்களும் தான் வெற்றி பெறுவார்களே தவிர - அவர்கள் தான் வெற்றி பெற்றாக வேண்டுமே தவிர மற்றபடி இந்த ஜால வித்தையான தேச பக்தி வெற்றியடையவோ மக்களுக்குப் பயன்படவோ போவதில்லை என்பது உறுதி.
>
> - பெரியார்
>
> ‘குடிஅரசு’ 20.9.1935

சரி; இந்த தேசத்துரோக சட்டப் பிரிவு எங்கிருந்து வந்தது? இந்தியாவில் முதன் முதலாக அனைவருக்கும் பொதுவான கிரிமினல் சட்டத்தை உருவாக்கியவர் பிரிட்டிஷ் அதிகாரி, மெக்காலே சட்டத்தில் இந்தப் பிரிவை வரைவு படுத்தியிருந்தாலும், 1860ஆம் ஆண்டு இந்த கிரிமினல் சட்டம் அமுலுக்கு வந்த போது, இந்தப் பிரிவு நீக்கப்பட்டிருந்தது. அதற்கு பத்தாண்டுகளுக்குப் பிறகுதான் பிரிட்டிஷ் ஆட்சி, இந்த ‘124ஏ’ பிரிவை சேர்த்தது.

ஏதோ தவறுதலாக இந்தப் பிரிவு நீக்கப்பட்டிருந்தது என்று பிரிட்டிஷ் ஆட்சி சமாதானம் கூறியது. அதே சட்டம், “சுதந்திர” இந்தியாவிலும் அமுலில் இருக்கிறது. (ஒரு சில திருத்தங்களுடன்)

இதே சட்டப் பிரிவைத்தான் பிரிட்டிஷ் ஆட்சி திலகர், காந்தி மீது ஏவியதும் குறிப்பிடத்தக்கது. 1922இல் இந்தப் பிரிவின் கீழ் காந்தி மீது குற்றம் சுமத்தியபோது அவர் சொன்னார், “ஒரு குடிமகனின் அடிப்படை சுதந்திரத்தை ஒடுக்குவதற்கான இந்தப் பிரிவின் கீழ் நான் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறேன். கிரிமினல் சட்டத்துக்கே ‘அரசன்’ இந்த ‘124ஏ’ தான்” என்றார்.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக பேசுவதே தேச துரோகம் என்று அன்றைய ‘காலனி’ ஆட்சி, இந்தப் பிரிவை பயன்படுத்தி வந்தது. 1942ஆம் ஆண்டிலேயே எதிர்ப்புகள் உருவாயின. 1950இல் இந்திய அரசியல் சட்டம் அமுலுக்கு வந்தது. அரசியல் நிர்ணய சபையில் நடந்த விவாதங்களில் இந்தப் பிரிவை நீக்க வேண்டும் என்று சில உறுப்பினர்கள் வலியுறுத்தினர். பல உறுப்பினர்கள் இந்தப் பிரிவு நீக்கப்படக் கூடாது என்று வாதிட்டனர். ‘124ஏ’ தொடரவே செய்தது.

இந்தியாவின் உச்சநீதிமன்றம், இந்தப் பிரிவை கண்மூடித்தனமாக பயன்படுத்தக் கூடாது என்று ஆட்சியாளர்களுக்கு சுட்டிக்காட்டியது. கருத்து சுதந்திர உரிமைகளில் ‘தேச துரோகம்’ குறுக்கிடக் கூடாது என்பதை உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியது. பிரதமராக இருந்த நேரு, நாடாளுமன்றத்தில் நடந்த விவாதத்தில், இந்த தேசத் துரோக சட்டப் பிரிவு, அரசியல் சட்டத்துக்கு எதிரானது என்று கூறிய தோடு, வெகு விரைவில் இதை சட்டப் புத்தகத்திலிருந்து நீக்குவது நல்லது (The sonner we get rid of it the better) என்றார். ஆனாலும், 65 ஆண்டுகளுக்குப் பிறகும் இந்த சட்டப் பிரிவு நீடிக்கிறது. இப்போது பல்கலையில் மாணவர்கள் வெளியிட்ட கருத்துகளுக்காகவே இந்த சட்டம் சீறிப் பாய்கிறது.

‘எக்னாமிக் டைம்ஸ்’ நாளேட்டில் (பிப்.17, 2016) இது குறித்து சுவாமிநாதன் எஸ். அன்கிலேசாரிய அய்யர் என்ற பத்திரிகையாளர் எழுதிய கட்டுரை மிகவும் குறிப்பிடப்பட வேண்டியதாகும். “‘தேச விரோதி’ என்ற கூப்பாடு ஒரு வெற்று முழக்கம்; ஒரு சுதந்திர சமூகத்தில் இந்த கூப்பாடுகளுக்கு இடமிருக்க முடியாது; ‘தேச விரோதிகள்’ என்ற கூச்சல் அயோக்கியர்களின் முதல் அடைக்கலப்பகுதி” என்று குறிப்பிட்டுள்ளார்.

வியட்நாமில் அமெரிக்க இராணுவம் அந்த மக்களுக்கு எதிராக தாக்குதல்களை நடத்தியது. அமெரிக்காவின் ‘அடாவடி’க்கு சொந்த நாட்டிலே எதிர்ப்பு எழுந்தது. ‘அமெரிக்க தேச பக்தி’க்கு எதிரானது என்று அரசாங்கம் கூறியது. அந்த ‘தேசபக்தி’யை ஏற்க அமெரிக்க சிந்தனையாளர்கள் மறுத்துவிட்டனர்.

இங்கிலாந்து ஆட்சிக்கு முழுமையாகக் கட்டுப்பட்டிருந்த ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் 1933இல் ஒரு விவாதம் நடந்தது. “எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இங்கிலாந்து நாட்டுக்காகவோ, அரசருக்காகவோ இங்கிலாந்து நாடாளுமன்றம் போராட வேண்டிய தேவையில்லை” என்ற தலைப்பில் நடந்த விவாதம் அது. ஆதரித்து 275 பேரும், எதிர்த்து 153 பேரும் பல்கலைக் கழகத்தில் வாக் களித்தனர்.

“அரசுக்கு விசுவாசம் காட்டத் தேவையில்லை” என்று ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழக மாணவர்கள் எடுத்த இந்த உறுதிமொழியைப் போலவே மான்செஸ்டர், கிளாஸ்கோ பல்கலைக்கழக மாணவர்களும் உறுதி ஏற்றனர். இதற்காக இந்த மாணவர்கள், ‘தேச விரோதிகள்’, ‘பிசாசுகள்’, ‘கம்யூனிஸ்டுகள்’ என்று குற்றம்சாட்டப்பட்டனர். அதற்காக எவர்மீதும் ‘தேசத் துரோக’ வழக்கை ஆட்சியாளர்கள் பதிவு செய்யவில்லை.

ஸ்காட்லாந்து தேசிய கட்சி, பிரிட்டனிலிருந்து பிரிந்து போக போராடியது. இதற்காக அக்கட்சித் தலைவர்கள் மீது பிரிட்டன் தேச விரோத சட்டத்தை ஏவியதா? இல்லை; சமூகத்தில் அவர்களின் உரிமைக் குரலை கவுரவத்துடன் அங்கீகரிக்க முன் வந்தது. ஸ்காட்லாந்து கோரிக்கையை முன் வைத்து தனி வாக்கெடுப்பு நடத்த முன் வந்தது. அதேபோல வேல்ஸ் தேசிய இனமக்களும் தனிநாடு கேட்டு பிரிட்டனை எதிர்த்துப் போராடினார்கள். அதற்காக பிரிட்டன் அவர்களை சிறையில் அடைக்கவில்லை.

கனடாவில் ‘க்யுபெக்’ கட்சி சுதந்திரத்திற்குப் போராடியது. இது தேச விரோதமாக கருதப்படவில்லை. சட்டபூர்வமான ஜனநாயக கோரிக்கையாகவே கனடா அரசு அணுகியது.

ஸ்பெயின் நாட்டில், ‘கேட்ட லோனியா’ (Cata Lonia) மாநிலத்துக்கு தனிநாடு கோரும் கட்சிகள் நீண்டகாலமாக போராடி வருகின்றன. 2015இல் கனடாவில் நடந்த தேர்தலில் இந்த தனிநாடு கோரும் கட்சிகள் போட்டியிட்டு 47.8 சதவீத வாக்குகளைப் பெற்றன. ஸ்பெயின் அரசாங்கம் இந்த தனி நாடு கோரிக்கையை கடுமையாக எதிர்த்தாலும், போராடுகிற கட்சிகளின் தலைவர்களுக்கு ‘தேசத் துரோக’ பட்டம் சுமத்தவோ, சிறைப் படுத்தவோ இல்லை. ஆயுதம் தாங்கிப் போராடுபவர்கள், வன்முறையைத் தூண்டுவோர் மீது மட்டும் அரசுகள் நடவடிக்கை எடுக்கின்றன.

பிரெஞ்சு நாடு தனி நாடு கோரும் ‘கோர்சிகான்’ (Corsican) பிரிவினையாளர்களை சிறையில் அடைக்க வில்லை. ஆயுதம் தாங்கிப் போராடினாலோ

(4ஆம் பக்கம்)

## ‘தீர்த்த’த் தண்ணீரை முகர்ந்து பார்க்காதே!

*1933ஆம் ஆண்டில் ‘குடிஅரசில்’ மாமாங்கம் குறித்து ‘சித்திரபுத்திரன்’ என்ற பெயரில் பெரியார் எழுதிய உரையாடல்:*

**புராண மரியாதைக்காரன் கேள்வி:** ஐயா, சுயமரியாதைக்காரரே! கும்பகோண மாமாங்கக் குளத்தில் ஒரு அற்புதம் நடக்கின்றதே அதற்குச் சமாதானம் சொல்லும் பார்ப்போம்.

**சுயமரியாதைக்காரன் பதில்:** என்ன அற்புதமய்யா?

**பு.ம.:** மாமாங்கக்குளம் எவ்வளவு சேறாய் இருந்த போதிலும், அதில் எவ்வளவு ஜனங்கள் குளிக்கிறார்களே, அந்தக் குளத்துத் தண்ணீர் ஏன் குறைவதில்லை. இதற்குப் பதில் சொல் பார்ப்போம்.

**சு.ம.:** இது ஒரு நல்ல புத்திசாலித் தனமான கேள்விதான். இதன் காரணம் சொல்லுகிறேன். சற்று தயவு செய்து கேட்க வேண்டும். அதாவது, மாமாங்கக் குளத்தில் உள்ள தண்ணீரையெல்லாம் முனிசிபாலிட்டியார் இறைத்து விடுவார்கள். பிறகு ஓர் இரண்டு அடி உயரத் தண்ணீர் மாத்திரம் அதில் இருக்கும். அடியில் சிறிது மணலும் கொட்டி வைப்பார்கள். ஜனங்கள் தண்ணீரில் இறங்கியவுடன் மணல், சேறு, ஜனங்களின் அழுக்கு ஆகிய எல்லாம் சேர்ந்து குழம்பு மாதிரி அழுக்கு நிறமாக ஆகிவிடும். குளிக்கிற ஜனங்களுடைய உடம்பு, துணிகள் எல்லாம் சேற்று வேஷக்காரன் போல் கருப்பாக ஆகிவிடும். இந்த நிலையில் குளிக்கும் ஒவ்வொரு நபரும் கொஞ்சம் கொஞ்சம் தண்ணீரை தனது வேஷ்டி நனையும் அளவுக்குக் குளத்தை விட்டு வெளியில் எடுத்துக் கொண்டு போகிறான் என்பது வாஸ்தவம்தான். ஆனால், அதற்குப் பதிலாக, ஒவ்வொரு நபரும் ஆண் பெண் அடங்கலும் அக்குளத்தில் கொஞ்சம் கொஞ்சம் தண்ணீர்விட்டு விட்டுத்தான் போகிறார்கள்.

**பு.ம.:** அதெப்படித் தண்ணீர் விட்டு விட்டுப் போகிறார்கள்? நமக்கு அது புரியவில்லையே. அவர்களிடம் தண்ணீர் ஏது?

**சு.ம.:** இதுவும் நல்ல கேள்விதான். பதில் சொல்லுகிறேன். மாமாங்கக் காலத்தில் கூட்டம் அதிகம். தெருக்களில் எங்கும் பக்கத்தில் மறைவே இருக்காது. ஒரு மனிதன் வீட்டைவிட்டுப் புறப்பட்டால் மாமாங்கக் குளத்துக்குப் போவதற்குள் நசுங்கி பஜ்ஜியாய் விடுவான். இதன் மத்தியில் அவன் மூத்திரம் பெய்ய வேண்டுமானால் வழியில் காலோடு பேய்ந்து கொள்ள வேண்டும் அல்லது குளத்துக்கே போய் ஆக வேண்டும். ஆகவே, யாரும் காலோடு பேய்ந்து கொள்ளச் சம்மதிக்க மாட்டார்கள். எப்படியாவது அடக்கி, அடக்கி அவசரமாய்க் குளத்துக்குப் போகும் வரை அடக்கிக் கொண்டு தான் போவார்கள். குளத்தில் இறங்கி துணியை நனைத்துக் கொண்டவுடன், இவர்களை அறியாமலே மூத்திரம் வந்து விடும். அந்த மூத்திரம் மாமாங்கத் தீர்த்தத்துடன் தீர்த்தமாய் இரண்டறக் கலந்து விடும். அப்போது அவர்களால் செலவாகும் தண்ணீர் கிட்டத்தட்ட சரிசமமாகவே பர்த்தியாகிவிடும். ஆகவே, வரவும் செலவும் சரியாகிவிடும்.

**பு.ம.:** அந்தப்படி அந்தக் குளத்தில் மூத்திரம் சேருமானால் தண்ணீரில் ஒருவித நாற்றமிருக்காதா?

**சு.ம.:** நாற்றமிருக்கத்தான் செய்யும். தீர்த்தத் தண்ணீரை முகந்து பார்ப்பது மகாபாவம் என்று அவர்களுக்குச் சொல்லி வைக்கப்பட்டிருக்கின்றதல்லவா? ஆதலால் யாரும் முகந்து பார்க்க மாட்டார்கள். ருசியும் பார்க்க மாட்டார்கள். ஏனென்றால் அது அவ்வளவு அழுக்காகவும், குழம்பாகவும் இருக்கும். அன்றியும் இன்னும் ஒரு விஷயம் என்னவென்றால் முனிசிபாலிட்டியார் குளத்துத் தண்ணீரில் கெந்தகப் பொடி போட்டு வைத்திருக்கிறார்கள். ஆதலால், மூத்திர நாற்றம் எது? கந்தக நாற்றம் எது? என்று சுலபத்தில் கண்டுபிடிக்கவும் முடியாது. ஆகவே, செலவுக்கும் வரவுக்கும் தானாகவே சரியாய்ப் போய்விடும். இதற்குக் கடவுள் அற்புதம் ஒன்றும் தேவையில்லை.

**(‘குடிஅரசு’, 26.2.1933)**

### *71 ஆண்டுகளுக்கு முன் பெரியார் எழுதிய கட்டுரை*

# ‘மகாமக’த்தில் முழுக்குப் போடுவது மதிகேடு!


*1945ஆம் ஆண்டு ‘குடிஅரசு’ இதழில் கும்பகோணம் ‘மகாமகம்’ குறித்து பெரியார் எழுதிய கட்டுரை இது. 71 ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய கருத்துகள் இன்றைக்கும் பொருந்தி வருவதை இக்கட்டுரையைப் படிக்கும்போது புரிந்துணர முடியும்.*

கும்பகோணத்தில் மகாமக உற்சவம் நடக்கப் போகிறது. அதற்குத் திராவிட மக்களை வரும்படியாக, கும்பகோணம் பார்ப்பனர்களால் அழைப்புக்குமேல் அழைப்பு விடுத்த வண்ணமாக விளம்பரங்கள் காணப்படுகின்றன.

பார்ப்பனப் பத்திரிகைகள் மாமாங்கத்தைப் பற்றிப் பிரமாதப்படுத்தி மக்களை அங்குச் சேர்ப்பிக்க - தள்ளிவிட முயற்சிக்கின்றன.

இந்த 20 ஆவது நூற்றாண்டுக்குப் பக்கத்தில் வாழும் திராவிட மக்கள் இப்படி ஓர் அறிவும், மானமும் சூன்யமான ஓர் உற்சவத்தை மதித்து, கும்பகோணம் சென்று கூமட்டைகள் ஆவதென்றால், இதை உலகின் 8ஆவது அதிசயமென்றுதான் சொல்ல வேண்டும். கும்பகோணத்தில் இவ்வளவு கூட்டம் சேர்க்கப்படுவதற்கு மாமாங்கத்தன்று அங்கு என்ன புதிய சங்கதி காணப்படப் போகிறது என்பதை யோசிப்போம்.

அங்குள்ள மாமாங்கக் குளம் என்பது வெகு நாளாக இருந்து வருவதேயாகும். அதில் உள்ள தண்ணீரும் வெகு நாளாக இருந்து வருவதேயாகும். அப்படி இருக்க அன்று (மக நட்சத்திரத் தினத்தன்று) மாத்திரம் அக்குளத்திற்கும் தண்ணீருக்கும் எப்படிப் புதுயோக்கியதையோ பெருமையோ உண்டாகிவிடும் என்பதை அறிவுள்ள மனிதன் யோசித்துப் பார்க்க வேண்டாமா ? தமிழனின் மதி ஈனத்தைக் கை முதலாக வைத்து வாழும் பார்ப்பனர் கூட்டம், தங்கள் வாழ்க்கைக்கும் வயிற்றுப் பிழைப்புக்குமாக எதைக் கற்பித்தாலும், தமிழன் அதற்கு அடிமையாவதென்பது இழிவான காரியமல்லவா ?



கும்பகோண மாமாங்கத்திற்குப் பார்ப்பனர் ஏற்படுத்தி இருக்கும் கதை என்னவென்பது எவரும் அறியாததல்ல.

அதாவது, “சப்த நதிகளும் சிவனிடம் சென்று உலக மக்கள் தங்கள் தங்கள் பாவத்தைக் கழிப்பதற்கு ஆகத் தங்களிடம் வந்து குளித்து முழுகிப் பாவங்களைக் கழுவிவிட்டுக் கொண்டே இருப்பதால் அப்பாவங்கள் தங்களால் சுமக்க முடியவில்லை” என்று அழுதார்கள். அதற்குச் சிவன் அந்நதிகளைத் தேற்றி, “12 வருஷத்திற்கு ஒரு முறை கும்பகோணத்திற்கு வந்து அங்குள்ள ஒரு குளத்தில் தீர்த்தத்தை உற்பத்தி செய்கிறேன். அக்குளத்திற்கு வந்து நீங்கள் குளித்தால் உங்களின் பாவங்கள் அதில் கழுவப்பட்டுப் போகும்” என்றும் சொன்னார். அதற்கு ஆக அந்த நதிகள் அங்கு வந்து குளித்து, தங்கள் மீதுள்ள பாவங்களை அதில் கழுவி விடுகின்றன. ஆதலால், மனிதர்களும் அன்று வந்து அதில் குளித்தால் அம்மனிதர்களின் பாபமும் அங்குக் கழுவப்பட்டுவிடும்” என்பது புராணக் கதை.

இதுதான் மாமாங்கக் கதையின் சுருக்கம்.

இதை எந்த மனிதனாவது நம்ப முடியுமா ? மனிதன் உணர்ந்த ஜீவப் பிராணி என்பதற்குக் காரணம் அவனுக்கு உள்ள ஆறாவது (பகுத்தறியும்) அறிவேயாகும்; அதாவது சிந்தித்துப் பார்க்கும் தன்மையேயாகும். அப்படிப்பட்ட ஆறாவது அறிவுப்படிப் பார்த்தால் இந்த மாமாங்கக் கதையை எந்த மனிதனாலாவது நம்ப முடியுமா என்று கேட்கின்றோம்.

ஒரு நதியில் ஒரு மனிதன் குளித்த மாத்திரத்தில் அவனது பாபம் அதில் கழுவப்பட்டுப் போகும் (தொலையும்) என்பது எப்படி அறிவுக்குப் பொருந்தும் என்பதும், அந்த நதி அந்தப் பாவத்தைச் சுமக்காமல் சிவனிடம் சென்று அழுவது என்பதும், அதற்கு ஆக (அந்த நதிகளின் பாவபாரம் குறைவதற்கு ஆக) வேறு ஒரு குளத்தைக் கடவுள் சிருஷ்டிக்கிறது என்பதும், அந்தக் குளத்திற்கு இந்த (ஏழு) நதிகள் வருவது என்பதும் ஆகிய சங்கதிகள் மனிதர்களுக்குச் சொல்லக் கூடியவைகளா அல்லது மடையர்கள், மனிதத் தன்மை அற்ற, மனித உருக்கொண்ட, மிருகங்களுக்கும் மரஞ்செடிகளுக்கும் சொல்லக் கூடிய கதையா என்று வாசகர்களைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

12 வருஷத்திற்கு ஒரு முறை அந்தக் குளத்தில் நீர் பொங்கி வருவதாக நேரில் பார்த்ததாகவே சிலர் கூறுகிறார்கள்.

தண்ணீரை நெருப்பில் வைத்துக் காய்ச்சினாலல்லாது, பொங்குகிற வஸ்துவை அதில் போட்டாலல்லாது தண்ணீர் எப்படிப் பொங்க முடியும் ? மாமாங்கத் தினத்தன்று தண்ணீர், குளத்தில் விட்டு வைத்த அளவுக்கு மேல் அதிகமாகக் காணப்படுவதாகச் சில பார்ப்பனர்கள் கதை கட்டி விடுகிறார்கள். மக்களைத் தண்ணீருக்குள் இறங்க விடாமல் தடுத்து நிறுத்தி, பிறகு தண்ணீரைப் பார்த்தால் அப்போது அது பொங்குகிறதா இல்லையா என்பதின் உண்மை கண்டுபிடிக்க முடியும். அப்படிக்கில்லாமல் பதினாயிரக்கணக்கான மக்களை, இலட்சக்கணக்கான மக்களைக் குளிக்கவிட்டு, அதன் பிறகு தண்ணீர் அதிகமாகி இருக்கிறது என்று சொன்னால் அதை எப்படித் தண்ணீர் என்றே சொல்ல முடியும் ? குளிக்கப் போகும் மக்கள் அந்தக் குளிரில் தங்கள் சிறுநீரைக் கழிக்க அந்தக் கூட்டத்தில் குளக்கரையில் எங்கு இடம் காண முடியும் ? ஆதலால் குளிக்கிறவர்கள் அவசர அவசரமாகத் தண்ணீரில் இறங்கி அங்கு நீர் கழிக்க ஏற்பட்டு விடுவதன் மூலம் குளத்தின் தண்ணீர் பெருகி இருக்கலாம்; அந்தச் சிறுநீரின் தன்மையால் குளத்தில் குமிழிகள் காணப்படலாம். அன்றியும் மக்கள் ஏராளமாகத் தண்ணீரில் இறங்குவதாலும் தண்ணீர் உயர்ந்து இருக்கலாம். இந்த மாதிரி காரணங்களால் தண்ணீர் மட்டம் 4, 2 படிக்கட்டுகளுக்கு உயர்ந்துவிட்டால் அதைப் பொங்கிற்று என்று சொல்லுவது அறிவுடையாகுமா என்று கேட்கிறோம்.

அன்றியும் சப்த நதிகளுக்குமே தங்களிடம் மக்கள் கழுவிவிட்ட பாபம் தாங்காமல் அங்கு (மாமாங்கக் குளத்திற்கு) வந்து குளித்து பாவங்களைக் கழுவி விட்டு விட்டுப் போக வேண்டிய அவசியம் வந்ததென்றால், பிறகு இந்த நதிகள் கழுவிவிட்ட பாபத்தை இந்த மாமாங்கக்குளம் கழுவி விடவே, எந்தக் குளத்திற்கு வருஷத்திற்கு வருஷம் அல்லது 12 வருஷத்திற்கு ஒரு தரமாவது அது சென்று வந்தது என்று கேட்கின்றோம்.

ஆகவே, “எத்தனையோ காலமாக எத்தனையோ பேர் கழுவிவிட்ட பாபங்களைக் கொண்டு வந்து கழுவிவிட்ட” மாமாங்கக் குளப் பாவத் தண்ணீரில் மனிதன்போய் குளிப்பதானால், அவனுக்குப் பாவம் ஏறுமா ? அல்லது கழியுமா ? என்று அறிவுடைய மக்கள் யோசிக்க வேண்டாமா என்று கேட்கின்றோம். எனவே, இந்த மாமாங்கப் புரட்டு பார்ப்பனர் பிழைக்க ஏற்படுத்திக் கொண்ட ஒரு சுங்கச்சாவடி, கட்டுக்கதை அல்லாமல் இதில் ஏதாவது நாணயமோ உண்மையோ அறிவுடைமையோ இருக்க இடமிருக்கிறதா ? இதற்குப் பார்ப்பனப் பத்திரிகை உடையவும் காங்கிரசுக்காரர்களுடையவும் விளம்பரம் ஒருபுறமிருக்க, காங்கிரசுக்காரர்கள் அதைத் தங்கள் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளச் செய்யும் சூழ்ச்சி ஒருபுறம் இருக்க, இரயில்வேக்காரருடைய விளம்பரம் வேறு ஒரு பக்கம் இருந்து வருகிறது. *(அன்று காங்கிரஸ், இன்று இந்து முன்னணி – ஆர்.எஸ்.எஸ். – ஆர்)*

இந்த வருஷம் மாத்திரம் “சண்டை நெருக்கடி காரணமாக இரயில்விட முடியாது” என்று சொல்லுகிறார்கள் என்றாலும், அந்த விளம்பரத்தின் மூலம் மக்களுக்கு மாமாங்கத்தை ஞாபகப்படுத்திக் கொண்டுதான் வருகிறார்கள். இரயிலுக்கு எப்படியும் சென்ற மாமாங்கத்திற்குக் கிடைத்த வரும்படிக்குக் குறையாமல் வரும்படி கிடைக்கத்தான் போகிறது. இரயில்வே சிப்பந்தி பார்ப்பனர்களுக்கும் ‘பிரைஸ்’ அடிக்கத்தான் போகிறது. மற்றும் பார்ப்பனர்களுக்குக் காப்பிக் கடை, ஓட்டல், தங்குமிட வசதி, பாட்டுக் கச்சேரி, சினிமா முதலிய காரியங்களாலும்; தர்ப்பணம், சங்கற்பம் முதலியவைகளாலும், மற்றும் பல சிங்காரச் சிற்றின்பக் காரியங்களாலும் இரும்பு, நூல், ஜவுளி வியாபாரிகள் அடித்த கொள்ளை இலாபத்தைப் போல் இலாபம் கிடைக்கத்தான் போகிறது. கடைசியில் கெட்டு நட்டமடைந்து இழிவடைந்த முட்டாள்களாகத் திராவிட மக்கள்தான் ஆகப் போகிறார்கள்.

மற்றும் தன் மனைவி மக்களை ஒரு மீட்டிங்கிற்கும், கான்பரன்சுக்கும் அனுப்பக்கூடப் பயந்து நடுங்கியவனும் - உறை போட்டு அறைக்குள் பூட்டி வைத்து, பூட்டை இழுத்து இழுத்துப் பார்த்துவிட்டு வெளியில் போய் வருகிறவனும்கூட, தன் மனைவி மக்களை மாமாங்கத்திற்குக் கூட்டிக் கொண்டு போய்க் கூட்டத்தில் சிக்க வைத்து நசுங்குண்டு பஞ்சாமிர்தம் போல் ஆவதைப் பார்த்து, “கழுத்து பத்திரம், காது பத்திரம்” என்று மாத்திரம் உரத்திக் கூறிக் கொண்டே இழுத்து வரப் போகிறான் என்பதைத் தவிர, மாமாங்கத்தின் முடிவு வேறு என்னவாக இருக்க முடியும் ?

இந்தச் சர்க்கார் மநுதர்ம - புராண ஆட்சி சர்க்காராய் இல்லாமல் இருக்குமானால் இப்படிப்பட்ட முட்டாள்தனமான காரியங்களுக்கு மக்களை ஆளாக்காமல் மாமாங்கம் நடத்தக் கூடாது என்று 144 உத்தரவு போட்டு, அதற்குப் பதிலாக ஓர் உலகக் கண்காட்சியை நடத்தச் செய்து இருக்கும். “மக்கள் மடமையாய் இருக்கும் வரை அரசருக்கும் ஆரியருக்கும் ஆதாயம்” என்கிறது சாணக்கிய கொள்கை. ஆதலால், அறிவு வளர்ச்சிக்குச் சர்க்கார் தக்கது செய்யாமல் மாமாங்கம் முதலியவைகளுக்கு ஆதரவளித்து வருகிறது.

எப்படி இருந்தாலும் இந்த மாமாங்கத்திற்குத் திராவிட மக்கள் - சிறப்பாகத் தமிழ் மக்கள் செல்லாமல் அதை வெறுத்துத் தள்ளி, போகிறவர்களுக்கும் விவரம் சொல்லி எவரையும் போகாமல் தடுத்துவிட வேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகிறோம்.

மாமாங்கக் கதையை நம்புவது கேடு! மதிகேடு!! மதிகேடு!!! என்று சொல்லுவதோடு, அங்குச் செல்வதும் தமிழ் மகனுக்கு (திராவிடனுக்கு) மானக்கேடு! மானக்கேடு!! மானக்கேடு!!! என்று பலதடவை சொல்லுவோம்.

**– ‘குடிஅரசு’, தலையங்கம், 17.2.1945**

## ‘சித்தோடு’ கிளைக் கழகம் நடத்திய ஜாதி எதிர்ப்பு கூட்டம்

திராவிடர் விடுதலைக் கழகம் ஈரோடு (தெற்கு) மாவட்டம் சித்தோடு கிளைக் கழக சார்பில் “எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம் இளைய தலைமுறைக்கு வேலை வேண்டும்” என்ற முழக்கத்துடன் மற்றும் “கொள்கை விளக்க தெருமுனைக் கூட்டம்” சித்தோடு அருகில் உள்ள ஜே.ஜே நகரில் 21.02.2016 மாலை 6.30 மணி யளவில் சங்கர் தலைமையில், எழிலன் முன்னிலை யில் நடைபெற்றது. கூட்டத்தின் துவக்கத்தில் முருகேசன் பெரியாரியல் பாடல்கள் பாடினார். காவலாண்டியூர் சித்துசாமி மற்றும் ஈசுவரன் ஆகியோர் கொள்கை விளக்க உரையாற்றினர். தொடர்ந்து காவை இளவரசன், “மந்திரமல்ல தந்திரமே” நிகழ்ச்சி சிறப்பாக நடந்தது.

அதைத் தொடர்ந்து வீரன் (தமிழ்நாடு அறிவியல் மன்றம்) சிறப்பானதொரு உரை நிகழ்த்தினார். நிறைவாக கோபி வேலுச்சாமி சிறப்புரையாற்றினார். கூட்ட துவக்க முதல் இறுதி வரை மக்கள் திரளாக இருந்து நிகழ்ச்சியை கேட்டனர். கமலக்கண்ணன் நன்றியுரை கூற கூட்டம் நிறைவு பெற்றது.

ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் சன்முகப் பிரியன், அமைப்பாளர் குமார், பொருளாளர் கிருட்டிண மூர்த்தி, நகரச் செயலாளர் சிவானந்தம், அரங்கம்பாளையம் கிருட்டிணன், பிரபு பெருமாள் மலை ராசன்னா, செல்வம், முருகன், சித்தோடு சி.எம். நகர் பிரபு, சி.மேட்டுப்பாளையம் கைலாசம், கொங்கம்பாளையம் சத்தியராஜ், ராஜேஷ் மற்றும் காஞ்சிக் கோவில் தோழர்களும் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பித்தனர். கழகத்தின் அறிமுகக் கூட்டம் இப்பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது.

## குமரி மாவட்டத்தில் ‘காதலர் நாள்’ கொண்டாட்டம்

திராவிடர் விடுதலைக் கழகம், குமரி மாவட்டம் சார்பாக மாவட்டத் தலைவர் வே.சதா தலைமை யில் 14-02-2016 காலை10.00 மணிக்கு அவருடைய இல்லத்தில் ‘காதலர் தின விழா - சாதி ஒழிப்பு நாளாக’க் கொண்டாடப்பட்டது. கழகத் தோழர் தமிழ்மதி மற்றும் அவரின் வாழ்விணையர் தமிழ்ச் செல்வி ஆகியோர் கேக் வெட்டி அனைவருக்கும் இனிப்பு வழங்கினர். தமிழ்மதி, “சாதியை ஒழிக்கவே சாதி ஒழிப்பு நாள் திராவிடர் விடுதலைக் கழகத் தால் தமிழகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது” என்று விளக்கி பேசினார். நிகழ்வில் மஞ்சு குமார், இராஜேஸ் குமார், சகிலா பொன் மலர், அ. மணி கண்டன், இராசேந்திரன், சூசையப்பா ஆகியோர் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

## சங்கராபுரத்தில் காதலர் தினத்தில் ஜாதி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

பிப்ரவரி 14, காதலர் தினத்தை முன்னிட்டு ஜாதிய ஆணவ படுகொலைகளை கண்டித்து, விழுப்புரம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 13.2.2016 சனிக்கிழமை மாலை 3 மணி யளவில் சங்கராபுரம் அருகே பகண்டை கூட்டுச் சாலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. தமிழக அரசையும் காவல்துறையையும் வலியுறுத்தி கீழ்க்கண்ட கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.

- ஜாதி மறுப்பு காதலர்களுக்கு தனி பாதுகாப்பு சட்டம் இயற்று.
- ஜாதி மறுப்பு தம்பதியர்களின் குழந்தைகளுக்கு அரசு மற்றும் தனியார் துறையில் தனி இட ஒதுக்கீடு வழங்கு.
- ஜாதி ஆணவ படுகொலையில் ஈடுபடுபவர் களை தண்டிக்க கடுமையான சட்டம் இயற்று.
- வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை வலிமை யோடு நடைமுறைப்படுத்து.

கழகம் நடத்திய ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் வழக்கறிஞர் ந. தமிழ்க்குமரன் தலைமை தாங்கினார். மா. குமார் வரவேற்புரையாற்றினார். தமிழ் படைப்பாளர் சங்கத்தின் தலைவர் குறிஞ்சி அரங்க. செம்பியன், இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் விழுப்புரம் மாவட்ட தலைவர் வே. ஏழுமலை, துணை தலைவர் இரா. பூமாலை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்ந்த சிகாமணி, விழுப்புரம் மாவட்ட கழக செயலாளர் ச.கு. பெரியார் வெங்கட், கழக மாவட்ட அமைப்பாளர் தெ.செ. நாவப்பிள்ளை, ந. வெற்றி வேல், க. ராமர் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மு.நாகராஜ், வீ. முருகன், ரா. முருகன், ரா. வெங்கடேசன், செ.வே. ராஜேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியாக மாவட்ட துணை செயலாளர் ம. குப்புசாமி நன்றியுரையாற்றினார்.

## வரலாற்றுப் புரட்டர்களுக்கு மறுப்பு (12)

# நீதிக்கட்சியின் பார்ப்பன எதிர்ப்பு போலியானதா?

**வாலாசா வல்லவன்**

பெரியாருக்கு எதிராக அவ்வப்போது சில வரலாற்றுப் புரட்டர்கள் புறப்படு வதும், பதிலடி கிடைத்தவுடன் பதுங்குவதும் வாடிக்கை யாகி விட்டது. ‘குணா’வின் வாரிசாக கிளம்பியுள்ள ஒருவர் அண்மையில் வெளியிட்டுள்ள நூலுக்கு இது ஒரு மறுப்பு.

அன்றைக்கு இருந்த அரசியல் அமைப்புக்கு ஏற்றத் தன்மையில் நீதிக்கட்சியினர் இயங்கி வந்தனர். பெரியாரை மட்டும் குறை சொல்வது என்ன நியாயம்? 1956 நவம்பர் 1 ஆம் நாள் தமிழகம் மொழி வழி மாநிலமாக பிரிந்தவுடன் பெரியார் 4-11-56 அன்று தி.க. செயற் குழுவை திருச்சியில் கூட்டினார். இனி ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்ற உரிமை முழக்கத்தை எழுப்ப வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

‘விடுதலை’ ஏட்டின் தலைப்பு பகுதியில் ‘திராவிட நாடு திராவிடருக்கே’ என்று வெளியிட்டு வந்ததை மாற்றி ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்று வெளியிட்டு வந்தது. பெரியார் மறையும்வரை ஏன் 1975 ‘எமர்ஜென்சி’ காலம்வரை இந்த முழக்கம் ‘விடுதலை’யில் இடம் பெற்று வந்தது. “தமிழ்நாடு தமிழருக்கே என்ற முழக்கத்தை பெரியார் முழு மனதுடன் எழுப்பவில்லை; அண்ணாதுரையின் ‘திராவிட நாடு’ கோரிக்கையை எதிர்ப்பதற்காக வென்றே தமிழ்நாடு கோரிக்கையை முன் வைத்தார்” என்று கூறுகிறார். (பா.குப்பன் பக் 41)

குப்பன் ஒரு குதர்க்காவாதி. 34 ஆண்டுகள் திராவிடர் கழகத்தில் இருந்த பா.குப்பன், இப்படி ஒரு அபத்தமான கருத்தை எழுதுவது பெரியாரை கொச்சைப்படுத்த வேண்டும் என்பதற்காகவே ஆகும். உண்மையில் குப்பனின் இன்றையத் தலைவர் ம.பொ.சி. தான். ஏட்டிக்கு போட்டியாக திராவிடர் கழகத்துக்கு எதிராக ‘தமிழரசு கழகம்’ என்று நடத்தி, ஒரே ஆண்டில் நாட்டு பிரிவினை கோரிக்கையை கைவிட்டார். குப்பன் கூற்றுப்படி பெரியார் அண்ணாவுக்கு போட்டியாக தமிழ்நாடு தனிநாடு கோரிக்கையை வைத்திருந்தால் அண்ணா 1963 இல் திராவிட நாடு கோரிக்கையை கை விட்டவுடனேயே பெரியாரும் கைவிட்டு இருக்க வேண்டுமல்லவா? இல்லையே பெரியார் மறையும் வரை அக் கோரிக்கையை அவர் கைவிடவில்லையே.

பெரியாரிடம் நாட்டு பிரிவினைக்கான எந்தத் திட்டமும் இல்லையென்கிறார் பா.குப்பன். தமிழ்நாடு நீங்கிய இந்திய தேசப்படத்தை எரித்தது எதற்காக? தமிழ்நாடு வேண்டும் என்பதற்காகத் தானே! அதைக் கூட உங்கள் ம.பொ.சி எதிர்த்தாரே. பெரிய மக்கள் திரளிடையே இந்த எண்ணத்தை உருவாக்கியவர் பெரியார்.

பெரியாரிடம் எந்தத் திட்டமும் இல்லை என்று கூறும் குப்பனிடம், தென்மொழியிலும் தமிழர் எழுச்சி இதழிலும் பெரியாரைக் கண்டபடி திட்டி விட்டு கடைசியாக முடிக்கும் போது ஒரு வரி தமிழ்த் தேசியம் அமைப்போம் வாருங்கள் என்று எழுதி விட்டால் போதுமா?

1938 முதல் 1973 இல் பெரியார் மறையும் வரை இந்திய தேசியத்தின் ஆக்கிரமிப்பை, அடக்கு முறையை, இந்திய அரசியல் கட்டமைப்பை எதிர்த்த ஒரே தலைவர் பெரியார் தான். பெரியாரை நீங்கள் திட்டுவதால் அவருடைய புகழ் ஒன்றும் மங்கிப் போய் விடாது. பெரியார் இன்றும் நிலைத்து நிற்கின்றார் என்றால் அவருடைய கருத்து வலிமை, நேர்மையான அரசியல் ஆகியவற்றால் தான், ம.பொ.சி மாதிரி போலியாக தமிழரசுக் கழகம் என்று ஒரு அமைப்பை வைத்துக் கொண்டு இந்திய தேசியத்துக்கு ஆதரவாக பக்க மேளம் வாசிக்கவில்லை.

பெரியாரை இவ்வளவு கேள்வி கேட்கும் பா.குப்பன், ம.பொ.சி காங்கிரசில் இருந்து கொண்டே தமிழ்நாடு கேட்டாரே அது நடைமுறை சாத்தியமா? கண்ணியமாக காங்கிரசை விட்டு அவராகவே வெளிவந்து தனி அமைப்பு அல்லவா வைத்திருக்க வேண்டும்? பெரியார், திராவிட நாடு, திராவிடன் என்று எல்லாம் கூறி திசை மாற்றி விட்டார் என்று அங்கலாய்க்கும் ம.பொ.சி. பக்தர்களோ, ம.பொ.சி. மூச்சுக்கு முன்னூறுதரம் இந்து, இந்தி, இந்தியா என்று எழுதிக் கொண்டிருந்தாரே அவரை ஒரு கேள்வி நீங்கள் கேட்டதுண்டா?

பெரியார் திராவிட நாடு கேட்டதோ, சுதந்திர தமிழ்நாடு கேட்டதோ, வடநாட்டான், பார்ப்பான் போன்ற அன்னியன் சுரண்டலற்ற, இந்துமதச் சாக்கடையான வருணாசிரம, சாதிபேதமற்ற மக்களாக உழைப்பாளி மக்களின் ஆட்சியை நிறுவவும் ஆணுக்கு அடிமைப்பட்டு கிடந்த பெண்ணினத்தை விடுவிக்கும் விதமாக அனைத்து விதமான அடிமைத்தளை களிலிருந்தும் விடுதலை வேண்டும் என்பதற்காகவே விடுதலை கேட்டார். வெறும் கோடு போட்டது போல் இதுவரை உன் எல்லை, இதுவரை என் எல்லை என்று வரைப்படம் போட்ட நாடு அல்ல. இன்றைக்கு தமிழ் மக்களிடையே விடுதலை உணர்ச்சி வளர்ந்து வருகிறதென்றால். அது பெரியார் இயக்கத்தின் நீட்சியே ஆகும். திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியே தமிழ்த் தேசியமாகும்.

பா.குப்பனின் குற்றச்சாட்டுகள் “பெருங்காவூர் இராசகோபாலாச்சாரி என்ற பிராமணரை சபா நாயகராக ஆங்கிலேயே ஆளுநர் நியமித்தபோது அதை நீதிக் கட்சியினர் எதிர்க்கவில்லை; மாறாக மனமுவந்து ஏற்றுச் செயல்பட்டனர். இது நீதிக் கட்சியினரின் பிராமண எதிர்ப்பு போலியானது என்பதற்கு முதல் எடுத்துக்காட்டு”(பக் 49) என்கிறார் பா.குப்பன்.

1919 இல் ஏற்பட்ட இரட்டை ஆட்சியில் முதல் முறை மட்டும் சபாநாயகரை தேர்ந்தெடுக்கும் உரிமை சட்டசபைக்கு கொடுக்கப்படவில்லை. சபாநாயகர் பதவி ஆளுநர் நியமனம் என்பதை பா.குப்பனே தெரிவித்துள்ளார். சபாநாயகருக்கு சட்டம் இயற்றும் எந்த அதிகாரமும் கிடையாது. அவர் வெறும் பொம்மை தான். அந்த பார்ப்பனர் சபாநாயகராக இருந்த போதுதான் பார்ப்பனரல்லாதாருக்கு இடஒதுக்கீடு அளிக்கக்கூடிய இரண்டு வகுப்புவாரி உரிமை அளிக்கக் கூடிய அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டன என்பதை பா.குப்பன் அறிவாரா?

முதல் வகுப்புரிமை அரசானை 16-9-1921இலும் இரண்டாவது வகுப்புரிமை அரசாணை 15-8-1922 இலும் பிறப்பிக்கப்பட்டது. அதே காலகட்டத்தில் தான் 1922 முதல் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு கல்லூரிகளில் 50% இடஒதுக்கீடு அளிக்கும் தீர்மானமும் அதனை கண்காணித்து மாணவர் தேர்வு குழுக்களும் அமைக்கப்பட்டன.

பா.குப்பன் சொல்லும் பார்ப்பனர், சபாநாயகராக இருந்த காலத்தில்தான் பார்ப்பனர் கோயில்களில் கொள்ளை அடித்து வந்ததை தடுக்கும் விதத்தில் இந்து அறநிலையத் துறை பாதுகாப்பு மசோதாவை, பனகல் அரசர் 8.12.1922இல் முன்மொழிந்தார். அது 1923க்குள் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பார்ப்பனரல்லாதாருக்கும் ஆதி திராவிட மாணவர் களுக்கும் பயனளிக்கும் பல விவாதங்கள் சட்ட மன்றத்தில் விவாதிக்கப்பட்டு பார்ப்பனரல்லாதாருக்கு சாதகமான பல சட்டங்கள் இயற்றப்பட்டன. ‘நீதிக்கட்சியினரின் பார்ப்பன எதிர்ப்பு போலி யானது’ என பா.குப்பன் கூறுவதில் ஒரு சிறிதும் உண்மை இல்லை.

**(தொடரும்)**

## ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்துக்கு பாராட்டு!

‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தில் (ஜன.14) ஆகமங்களைப் பேசும் கூட்டம் ஆகமங்களை மீறுவது குறித்து வெளியிட்ட கட்டுரை மிக அருமையாக இருந்தது. ‘வேதாகமத்தை’ வள்ளலாரும் கடுமையாக சாடியுள்ளார்.

“வேதாகமம் என்று
வீண்வாதம் ஆகின்றீர்
வேதாகமத்தின் விளைவு அறியீர்
சூதாகச் சொன்ன வலால்
உண்மை வெளித் தோன்ற
உரைத்தல் இலை
என்ன பயனோ? இவை”

– என்று சாடியிருக்கிறார்.

பிப். 4, 2016, ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழில் ரோகித் வெமுலா குறித்த பதிவுகளையும் கட்டுரைகளையும் பெரியார் முழக்கத்தில் படித்தேன். ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தில் வெளி வரும் கட்டுரைகள், பார்ப்பனியத்துக்கு எதிரான போராட்டத்துக்கு சிறந்த படைக்கலனாக இருக்கிறது. குப்தர்கள் ஆட்சியைப் போல் ஒரு காட்டுமிராண்டி ஆட்சி இல்லை. அப்போது தான் வெவ்வேறு ஜாதிகளுக்கிடையிலான திருமணம் தடை செய்யப்பட்டது என்ற அரிய தகவலை இதழ் வெளியிட்டிருந்தது. இந்த காலத்தைத்தான் ‘பொற்காலம்’ என்று பொய்யாக வரலாறு எழுது கிறார்கள். ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ காலத்தின் தேவை.

**– தி.நா. அறிவரசு,**
**அனிச்ச மலர் கல்வி அகம், பல்லடம்**

DATE OF PUBLICATION 25.02.2016 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776


# பிப்ரவரி 27, 28இல் மதுரை, கோபியில் பார்ப்பன மதவாத எதிர்ப்பு மாநாடுகள்

மதுரையில் பிப்.27 அன்றும், கோபியில் பிப்.28 அன்றும் திராவிடர் விடுதலைக் கழகம், பார்ப்பன மதவாத எதிர்ப்பு மாநாடுகளை நடத்துகிறது. ஏற்கெனவே ஈரோடு, சென்னை, சேலம், சங்கராபுரத்தில் கழகம் மாநாட்டை நடத்தி முடித்துள்ளது.


27ஆம் தேதி மதுரை ஒபுளா படித்துறையில் மாலை 5 மணிக்கு மாநாடு தொடங்குகிறது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, எஸ்.டி.பி.அய். கட்சித் தலைவர் தெஹலான் பாகவி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தமிழ்ப் புலிகள் கட்சித் தலைவர் நாகை திருவள்ளுவன், ஆதித் தமிழர் பேரவை இரா. செல்வம் ஆகியோர் உரையாற்றுகிறார்கள். மாநாட்டுக்கு காவல்துறை அனுமதி மறுத்த நிலையில் உயர்நீதிமன்றம் வழியாக மாநாட்டுக்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

கோபியில் பிப்.28 மாலை 4 மணியளவில் பெரியார் திடலில் மாநாடு, டி.கே.ஆர். குழுவினரின் இசை நிகழ்ச்சியோடு தொடங்குகிறது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மனிதநேய மக்கள் கட்சி செயலாளர் அப்துல் சமது, செந்தலை ந. கவுதமன் ஆகியோர் உரையாற்றுகிறார்கள்.


## மதவாதத்துக்கு எதிரான விடியல் பதிப்பகத்தின் 5 புதிய வெளியீடுகள்










1. ஆர்.எஸ்.எஸ். ஓர் அபாயம்-விடுதலை க. இராசேந்திரன்
2. இந்திய வரலாற்றில் பகவத் கீதை - பிரேம்நாத் பசாஸ்
3. பார்ப்பனியத்தின் வெற்றி - பி.ஆர். அம்பேத்கர்
4. பெண் ஏன் அடிமையானாள்? - பெரியார்
5. அறிவியலா? அருஞ்செயலா? - ப. பிரேமானந்து

**5 நூல்களும் இணைந்து 300 ரூபாய் மட்டுமே!**

**தொடர்புக்கு :**
**விடியல் பதிப்பகம்,**
**கோவை - 641 015.**
**பேசி : 0422-2576772, 9443468758**





(முதல் பக்கத் தொடர்ச்சி)

வன்முறைகளை நிகழ்த்தினாலோ அரசு நடவடிக்கை எடுக்கிறது. சுதந்திரமாக கருத்துகளை வெளியிட அனுமதிப்பதுதான் ஒரு சுதந்தரமான சமூகத்துக்கான அடையாளம்.

இந்த நாட்டில்தான் தேச துரோகச் சட்டம் பல்கலைக்கழக மாணவர்கள் மீதும், தமிழக அரசின் கொள்கைகளை எதிர்த்துப் பாடியதற்காக கிராமியக் கலைஞர் கோவலன் மீதும், கூடங்குளம் அணுஉலை எதிர்ப்பாளர்கள் மீதும் பாய்ந்து கொண்டிருக்கிறது என்று எழுதுகிறார், பத்திரிகையாளர் அஸ்கிலேசாரியா அய்யர்.

இந்த 'தேசபக்தி' பித்தலாட்டத்தை அம்பலப்படுத்தியவர் பெரியார். 1935ஆம் ஆண்டிலேயே 'குடிஅரசு' பத்திரிகையில் எழுதினார்:

> "தேசாபிமானம், தேச பக்தி என்பவைகள் சுயநல சூட்சி என்றும், தனிப்பட்ட வகுப்பு மக்கள், தங்கள் சுயநலத்துக்காக பாமர மக்களுக்குள் புகுத்தப்படும் ஒரு (வெறி) போதை என்றும் பல தடவை நாம் சொல்லி வந்திருக்கிறோம். மற்றும் 'தேசாபிமானம்' என்பது காலிகளுக்கு ஏற்பட்ட 'கடைசி ஜீவன மார்க்கம்' என்று மேனாட்டு அறிஞர் ஒருவர் கூறிய ஆப்த மொழி என்றும் பல தடவை எடுத்துக் காட்டியிருக்கிறோம்."
>
> - 'குடிஅரசு' 29.9.1935

பார்ப்பனர்களை எதிர்த்தால் - பார்ப்பன மதத்தை எதிர்த்தால் - பார்ப்பனக் கடவுளை எதிர்த்தால் - அது 'தேச விரோதம்' என்று அச்சுறுத்துகிறார்கள்.

கடந்த ஆண்டு அக்டோபர் 14ஆம் தேதி, 'ஃபார்வர்டு பிரஸ்' என்ற முற்போக்கு இதழ் வெளியிட்ட கார்ட்டூன், ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர்களிடையே விவாதத்தைக் கிளப்பியது. 'துர்க்கைக்' கடவுள் பற்றிய கேலிச் சித்திரம் அது. விசுவ இந்து பரிஷத் மாணவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதற்கு பதிலடி தந்தனர் இடதுசாரி மற்றும் தலித் மாணவர்கள்.

'மகிசா அசுரன்' என்ற பழங்குடிப் பிரிவைச் சார்ந்த அரசனை 'துர்க்கை' தீமையின் உருவம் என்று கூறி கொன்றாள். பழங்குடி சமூகத்தைச் சார்ந்தவர்களை தீமையின் வடிவம் என்கிறார்கள் பார்ப்பனர்கள். "எங்களுக்கு மகிசா அசுரன் மாவீரன், பார்ப்பனியத்துக்கு பலிகடாவான தியாகி!" என்று மாணவர்கள் வளாகத்தில் முழக்கமிட்டனர்; கூட்டங்களில் பேசினர். நரகாசுரனை மகாவிஷ்ணு சூழ்ச்சியாகக் கொன்ற 'தீபாவளி' கொண்டாட்டத்தை பெரியார் எப்படிப் பார்த்தாரோ அதே கண்ணோட்டம் இந்த மாணவர்களிடமும் இருந்திருக்கிறது. கன்யாகுமார், 'பார்ப்பனியமும் ஜாதியும் மனுவும் எங்கள் எதிரி' என்றார். அவர் தேசத் துரோகியாம்! பார்ப்பனர் எச். ராஜா, தேசத் துரோகத்துக்கு எதிராக துப்பாக்கி தூக்க சொல்கிறார்.

ஒன்றை உரத்து முழங்குவோம்:

பார்ப்பனியத்திடம் தேசபக்தி சான்றிதழ் பெறுவதைவிட சுயமரியாதையுள்ள 'தேசவிரோதி'யாக வாழ்ந்து காட்டுவதே உண்மைத் தமிழர்களின் பெருமைக்குரிய அடையாளம்! ஆம்! நாங்கள் தேச விரோதிகளே!

– **இரா**

# 'ஜாட்' சமூகத்தினரின் மிரட்டலுக்கு மண்டியிடும் ஆட்சியாளர்கள்

அரசியலில் பொருளாதாரத்தில் வலிமையாகத் திகழும் 'ஜாட்' ஜாதிப் பிரிவினர், பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு கோரி நடத்தி வரும் வன்முறை வெறியாட்டத்துக்கு மாநில பா.ஜ.க. ஆட்சி பணிந்து, இடஒதுக்கீடு வழங்க முன் வந்திருக்கிறது. ஏற்கெனவே புபேந்திரசிங் ஹீடா, முதல்வராக இருந்த காங்கிரஸ் ஆட்சியில் 'ஜாட்' இடஒதுக்கீடு சட்டம் கொண்டு வரப்பட்டு, பிறகு உச்சநீதிமன்றத்தால் இரத்து செய்யப்பட்டது. பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் ஒப்புதல் பெறாமலே இந்த சட்டம் கொண்டு வரப்பட்டதே காரணம்.

பிற்படுத்தப்பட்டோருக்கான மண்டல் ஆணையம், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் 'ஜாட்' பிரிவினரை சேர்க்கவில்லை. அதற்கு நியாயமான காரணங்கள் உண்டு! மண்டல் ஆணையம் 'பிற்படுத்தப்பட்டோரை' ஒரு ஜாதியினரின் சமூக நிலை, கல்வி நிலை, பொருளாதார நிலைகளைக் கண்டறிந்து, அதனடிப்படையில் நிர்ணயம் செய்தது. இதற்காக அறிவியல் அடிப்படையிலான காரணிகள் தேர்வு செய்யப்பட்டன. மொத்தம் 22 காரணிகளை வரையறை செய்து, இந்த 22 காரணிகளில் (Factors) 50 சதவீதத்துக்கும் மேலாக பின் தங்கியிருந்த பிரிவினர் பிற்படுத்தப்பட்டோராக பட்டியலிட்டனர். இந்த அடிப்படையில் 'ஜாட்' பிற்படுத்தப்பட்டோராக வர முடியாத உயர்ந்த நிலையில் இருந்தனர். பிற்படுத்தப்பட்டோர் ஆணையமும் ஜாட் சமூகத்தினரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைக்க ஒப்புதல் தரவில்லை.

மக்கள் தொகை மற்றும் பொருளாதார வலிமை கொண்ட பிரிவு, வன்முறை மூலம் மிரட்டி, அரசைப் பணிய வைப்பதும், வாக்கு வங்கி அரசியல் கட்சிகள் இதற்கு பணிந்து பிற்படுத்தப்பட்டோராக அறிவிப்பதும் சமூக நீதிக்கு இழைக்கும் அநீதி; துரோகம். ஏற்கெனவே பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றுள்ள பிரிவினர், இந்த ஆதிக்க சக்திகளோடு போராட முடியாமல் மிகவும் மோசமான நிலைக்கு மீண்டும் கீழே தள்ளப்பட்டு விடும் ஆபத்துகள் இதில் அடங்கியிருப்பதை கவனிக்க வேண்டும்.

'இடஒதுக்கீடு' என்ற சொற்றொடருக்குள்ளே மட்டும் சமூக நீதி அடங்கியிருக்கவில்லை. அதன் உள்ளடக்கத்தில் தான் சமூக நீதி அடங்கியிருக்கிறது. மாநில பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் 'ஜாட்' சமூகத்தினர் வந்து விட்டால் மத்திய அரசு பதவிகளுக்கும் பொருந்தும் என்ற நிலை உருவாகி, 27 சதவீத இடஒதுக்கீட்டிலும் பாதிப்புகளை உருவாக்கி விடும். அது, தமிழகம் உள்ளிட்ட அனைத்து மாநிலங்களைச் சார்ந்த பிற்படுத்தப்பட்டோரை 27 சதவீத ஒதுக்கீடுகளில் பாதிக்கச் செய்து விடும் ஆபத்துகள் உள்ளன.

அரியானாவில் கடந்த கால காங்கிரஸ் ஆட்சியும், இப்போது நடக்கும் பா.ஜ.க. ஆட்சியும் 'ஜாட்' சமூகத்தினரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க துடிப்பது வன்மையான கண்டனத்துக்கு உரியது. சமூக நீதிக்கு எதிரானது.

# மத்திய மனிதவளத் துறையினரின் சமஸ்கிருதத் திணிப்பு

மத்திய மனித வளத் துறை அமைச்சர் ஸ்மிருதி ராணி தலைமையிலான கல்வி ஆலோசனைக் குழு, மத்திய அரசு பள்ளிகளில் சமஸ்கிருதத்தைத் திணிக்க முடிவு செய்திருப்பது வன்மையான கண்டனத்துக்கு உரியது.

"ஆங்கிலம் மற்றும் மாநில மொழிகள் மாணவர்களுக்கு தேவையாக இருப்பினும் நமது பரந்துபட்ட கலாச்சாரத்தைக் கற்பிக்கும் வகையில் சமஸ்கிருதத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அதற்காக 3ஆவது மொழிப் பாடமாக சமஸ்கிருதத்தைக் கட்டாயமாக்க முடிவு செய்துள்ளோம். வரும் கல்வி ஆண்டு முதல் மத்திய அரசின் கீழ்வரும் அனைத்து கல்வி நிறுவனங்களிலும் சமஸ்கிருதம் 8ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை கட்டாயமாக்கப்படும். இதற்காக விரைவில் சமஸ்கிருத மொழி நூல்கள் அச்சிடப்பட இருக்கின்றன" என்று ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

சமஸ்கிருதத் திணிப்பு என்பது பார்ப்பனியத் திணிப்பேயாகும். இந்தியாவில் சில ஆயிரம் பேர் மட்டுமே பேசும் மொழி சமஸ்கிருதம். அதுகூட பேசும் மொழி அல்ல; கோயில்கள், சடங்குகள், யாகங்களுக்காக பார்ப்பனர்கள் மட்டுமே பயன்படுத்தும் மொழி. பல்வேறு இனங்களைக் கொண்ட இந்தியாவில், ஒற்றைக் கலாச்சாரம் எதுவும் கிடையாது. இதில் "பரந்துபட்ட கலாச்சாரத்தைக்" கற்பிக்கும் மொழி என்று சமஸ்கிருதத்தை மத்திய மனித வளத் துறை அமைச்சகமும் அதன் உயர்மட்டக் குழு மட்டுமே முடிவு செய்து கொண்டு விட்டது போலும்.

சமஸ்கிருதமே இந்தியாவின் ஆட்சி மொழியாக வேண்டும் என்பதே ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன அமைப்பின் கொள்கை. ஆர்.எஸ்.எஸ். 'வேதப் புத்தகமாக' மதிக்கும் 'Bunch of thoughts' நூலில் ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வாக்கர் இதை பதிவு செய்திருக்கிறார்.

'நான்கு வர்ணங்களை' சமூகத்தில் திணிக்கும் மனுஸ்மிருதி, சமஸ்கிருதத்தில்தான் இருக்கிறது. இந்திய கலாச்சாரம் பார்ப்பன கலாச்சாரமே என்பதை நிலைநாட்டுவதற்கான முயற்சிகள், இந்தத் திணிப்புகள் வழியாக மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன.

கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மீண்டும் கொண்டு வரவேண்டும். தமிழ்நாட்டில் செயல்படும் பள்ளிகளின் கல்விக் கொள்கையை தமிழக அரசே தீர்மானிக்க வேண்டும் என்ற நிலை உருவாக்கப்பட வேண்டும். இந்தியா என்றாலே அது பார்ப்பனியம்தான் என்பதை மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 25th February 2016

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN